# இலங்கை அரசியலில் மொழியும் மதமும்

20
L|PR

சமாதிலிங்கம் சத்தியசீலன்

# இலங்கை அரசியலில் மொழியும் மதமும்

சமாதிலிங்கம் சத்தியசீலன்
B. A. Hons. Cey. (History) M. A. Jaffna (History)
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அருண் வெளியீட்டகம்,
யாழ்ப்பாணம்.
1994

நூல் : இலங்கை அரசியலில் மொழியும் மதமும்
Language and Religion in Sri Lankan Politics

ஆசிரியர் : சமாதிலிங்கம் சத்தியசீலன்

முகவரி : வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

பதிப்பு : முதலாவது, 1994

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு : அருண் வெளியீட்டகம்

அச்சுப்பதிவு : அருண் பிரிண்டேர்ஸ்
யாழ்ப்பாணம்.

விலை : 100 ரூபா

என் அன்புப் பெற்றோரின் நினைவுகளுக்கு

# பொருளடக்கம்


| | |
|---|---|
| அறிமுக உரை | V |
| அணிந்துரை | VI |
| ஆசிரியருரை | VII |
| அரசியல் முரண்பாட்டிற்கான மூலங்கள் 1 மொழி | 1—59 |
| அரசியல் முரண்பாட்டிற்கான மூலங்கள் 2 மதம் | 59—100 |
| முடிவுரை | 101—103 |
| உசாத்துணை நூல்கள் | 104—110 |


# அறிமுக உரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் முதலாந் தர சிரேஷ்ட விரிவுரையாளரான திரு ச. சத்தியசீலன் அவர்கள் இருபது வருடங்களாக இத்துறையில் பணியாற்றி வருகின்றார். இவர் ஐரோப்பிய வரலாறு, நவீன வரலாறு, சமகால விவகாரங்கள் ஆகிய துறைகளில் நிறைந்த ஈடுபாடும், பரிச்சயமும் கொண்டவர்.

திரு. சத்தியசீலன் அவர்கள் எழுதிய இந்த நூல் இலங்கையின் சமகால அரசியலில் மிகமுக்கியமான பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. இலங்கை அரசியலில், சுதந்திரமடைந்த காலத்திற்குப் பின்னர் மொழியும், மதமும் மேலாண்மை செலுத்தி வந்ததையும் அதனூடாகப் பெரும்பான்மையினரின் நிலைப்பாடுகள் பெரும்பாலும் நிர்ணயிக்கப்பட்டு வந்துள்ளதனையும், இவற்றினூடாகப் பெரும்பான்மை, சிறுபான்மை இனங்களுக்கிடையே பிளவு நிலைகள் எவ்வாறு எழுந்தன என்பதனையும் ஆசிரியர் எடுத்து விளக்கியுள்ளார்.

இவ்வாய்விலிருந்து இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிய முக்கிய பரிமாணங்களையும் விளங்கிக்கொள்ள முடிகின்றது.

இலங்கையின் சமகால அரசியல் பற்றிய பல விடயங்களை அறிந்து கொள்வதில் பயனுள்ள நூலாக இது அமையும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க. குணரத்தினம்**
துணைவேந்தர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
29-07-1994

# அணிந்துரை

'இலங்கை அரசியலில் மொழியும் மதமும்' எனும் நூலைத் திரு. ச. சத்தியசீலன் அவர்கள் வெளியிடுவதனை இட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் வரலாற்றில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்று 1975 ஜனவரியில் யாழ்ப்பாண வளாகத்தில் வரலாற்றுத் துறையில் உதவி விரிவுரையாளராகச் சேர்ந்து இன்று முதலாம்தர சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். இவர் தனது முதுகலைமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்ற பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக 3 வருடங்களைச் செலவிட்டுள்ளார். அங்கு இருந்த போது இந்திய சமூக விஞ்ஞான ஆய்வுக்கழகத்தின் (I. C. S. S. R.) கலாநிதிப்பட்ட புலமைப்பரிசில் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுத்துறையில் குறிப்பாக நவீன வரலாற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் பல்கலைக்கழகத்தில் 20 வருட ஆசிரிய சேவையைக் கொண்டுள்ளார், இத்தகைய கல்விப் பின்னணியில் எழுதப்பட்ட இந்நூல் இலங்கை அரசியலில் கூடிய முக்கியத்துவம் பெற்றுள்ள இனப்பிரச்சினையுடன் தொடர்பான இரண்டு முக்கிய விடயங்களான மொழி, மதம் என்பவை பற்றி ஆராய்கின்றது. இலங்கை இனப்பிரச்சினைக்கான காரணிகளை விளங்கிக் கொள்ளும் வகையில் இந்த இரண்டு அம்சங்களும் எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன என்பதை ஆசிரியர் இந்த நூலில் தெளிவாகக் காட்டுகின்றார். காலத்தின் தேவைக்கேற்றவகையிலும், மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், நவீன இலங்கை வரலாறு, அரசியலில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ஏற்புடைய வகையிலும் இந்நூல் அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

நவீன வரலாறு, சமகால விவகாரங்கள் குறித்து மேலும் பல நூல்களை இவர் எழுத வேண்டும் என்றும், இவரது கல்விப்பணி மேலும் நன்முறையில் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன். இந்நூலுக்குத் தமிழ் மக்களிடையே நல்ல ஆதரவும், வரவேற்பும் இருக்கும் என்று நம்புகிறேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,**
கலைப்பீடாதிபதி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
12. 8. 94.



# ஆசிரியர் உரை

இலங்கையின் நவீனகால அரசியல் வரலாறு இனவாதம் என்னும் வலுமிக்க சக்தியினால் பாதிக்கப்பட்டுள்ளது. சுதந்திரத்தின் பின்பான காலத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும், அவர் அணியினரும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் அதனை மிகத் திறமையாகவே கையாண்டனர். அந்த இனவாத அரசியலுக்குச் சிங்கள மொழியும், சிங்கள இனமும், பௌத்த மதமும் பிரதான அம்சங்களாக அமைந்திருந்தன. இவற்றை வளர்ச்சிப்படுத்திச் சிங்கள, தமிழ் இன உறவுகளை மோசமடையச் செய்து, இத்தீவில் ஆரோக்கியமற்ற அரசியல் வரலாறு ஒன்று வளர்ச்சியடைந்தது. இப்பின்னணியை ஆய்வு செய்து காட்டுவதாகவே இந்த நூல் அமைந்துள்ளது.

'இலங்கை அரசியலில் மொழியும் மதமும்' என்ற இந்நூல் 1989 ஆம் ஆண்டிலே எழுதப்பட்டது. அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளாலும், இலங்கை அரசின் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளினாலும் இந்நூல் அச்சுருப்பெறுவதில் பல இடைஞ்சல்கள் காணப்பட்டன. தற்போது ஓரளவுக்குத்தன்னும் அச்சிடு பொருட்களின், காகிதாதிகளின் விலைக்குறைவின் காரணமாக இந்நூல் காலம் தாழ்த்தி வெளிவருகின்றது.

இந்நூலிலே இடையிடை ஆங்கில மொழியிலான மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து போடுவதிலும் பார்க்க அதன் நம்பகத்தன்மையைப் பேணும் வகையில் அதை அந்த மொழியிலேயே வழங்கியுள்ளேன். அது எந்த வகையிலும் ஆங்கிலம் தெரியாத வாசகனுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் தன்மை கொண்டதாக அமையவில்லை. ஏனெனில் அவற்றின் சாராம்சத்தை அம்மேற்கோள்களுக்கு முன்போ, பின்போ நூலில் வழங்கியுள்ளேன்.

இந்நூலுக்கு அறிமுக உரை ஒன்றினை வழங்குமாறு பெருமதிப்புக்குரிய துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் அவர்களை வேண்டியபோது மனமுவந்து அதனை அளித்திருந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியராக. அதன் ஆரம்பகாலத்தில் இருந்தே அவரை நன்கு அறிந்திருந்தேன். அவருக்கு முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நூலுக்கு விருப்புடன் அணிந்துரை வழங்கிய கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களுக்கு இவ்விடத்தில் நன்றி கூறக்

கடமைப் பட்டுள்ளேன். அத்துடன் நேரகாலம் பாராது, முகம் கோணாது வேண்டும் எவ்வுதவியையும் செய்யும் ஆசிரிய நண்பர் ஏ.ஜே. கனகரத்தினா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலினை நெருக்கடிக்குள்ளும் அழகுற அச்சிட்டுத்தந்த நண்பன் திரு. ந. வித்தியாதரன் அருண் அச்சக முகாமையாளர் அவர்களுக்கும், வெ. பாக்கியநாதன் உள்ளிட்ட ஊழியர்களுக்கும், இந்நூலை வெளியிட்ட அருண் வெளியீட்டகத்தவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இந்நூலுக்கான தட்டச்சுப் பிரதியைச் சீராக அச்சடித்துதவிய செல்வி சுமித்திராவுக்கும் எனது நன்றிகள்.

ச.சத்தியசீலன்

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
29. 07. 94.





# அரசியல் முரண்பாட்டிற்கான மூலங்கள்

## 1 மொழி

குடியேற்ற ஆட்சியின் பின்பாகத் தென்னாசியப் பிராந்தியத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசுகளில் அரசியல் முரண்பாடுகளுக்கான காரணிகளாக மொழியும், மதமும் அமைந்துள்ளன. சுதந்திரம் அடைந்ததன் பின்பாக இவ்வரசுகள் மொழி, மதம் பொறுத்து மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்றுவரை இந்நாடுகளின் தேசிய ஒருங்கிணைப்பிற்கும், ஒருமைப்பாட்டுக்கும் ஊறுவிளைவிப்பனவாக இயங்குவதனைக் காணமுடிகின்றது. இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், இலங்கையிலும், நேபாளத்திலும் பின்னர் பங்களாதேசத்திலும் மொழி, மதம் இரண்டும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும், ஏனைய சிறு பான்மை இனத்தவர்களுக்கும் இடையிலே ஒற்றுமையின்மையையும், பகைமை உணர்வையும் ஏற்படுத்தும் காரணிகளாக விளங்குவதை அவதானிக்கலாம். இந்தியாவில் ஹிந்தி மொழியும், பாகிஸ்தானில் உருதுமொழியும், இலங்கையில் சிங்களமொழியும், நேபாளத்தில் நேபாளமொழியும் உத்தியோக பூர்வமொழிகளாகப் பெரும்பான்மை ஆட்சியாளர்களினால் அந்தஸ்து வழங்கப்பட்டமை இப்புதிய நாடுகளின் ஒருங்கிணைப்பிற்கும், ஒருமைப்பாட்டிற்கும் பாதகமாக அமைந்ததனைப் பின்னர் நடந்த சம்பவங்களின் மூலம் விளங்கிக் கொள்ளலாம். பங்களாதேசத்தின் உதயமே இதற்கு நல்ல உதாரணமாக அமைகின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் மொழியும், மதமும் இப்புதிய அரசுகளில் அரசியல் முரண்பாடுகளுக்கான காரணங்களாகத் தோற்றமளித்தாலும், அவை அந்நாடுகளின் பெரும்

பான்மை இனத்தவரின் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார மேம்பாட்டினை மையமாகக் கொண்டு அவர்களால் உருவாக்கப் பட்டவைகளாக இருப்பதனை அறிந்து கொள்ளலாம். பிரித்தானிய ரிடமிருந்து அரசியலதிகாரம் கைமாறப்பட்ட ஒரு தசாப்தத்திற்குள் ளேயே இந்நாடுகளில் பெரும்பான்மையினரின் மொழி 'உத்தியோக பூர்வ மொழியாக' ஏற்றம் பெற்றிருப்பதனைக் கண்டு கொள்ளலாம்.

மொழியானது ஒருவனது சமூக வாழ்வில் தனிப்பட தொடர்பு சாதனமாக மட்டுமல்லாது பல்வேறு வழிகளிலும் சிறப்பைப் பெறு கின்றது. ஒருவனது கலாசாரத்தின் மூலமாகவும், அதனுடைய வெளிப் பாடாகவும், மற்றையோரிடமிருந்து அவனையும், அவனைச் சார்ந்த மொழி பேசுவோனையும் வேறுபடுத்திக் காட்டும் மூலமாகவும் அமைந் துள்ளது. அத்துடன் அம்மொழியைப் பேசுவோரை ஒன்றிணைக்கும் பலமிக்க கருவியாகவும், வலுமிக்க கூட்டு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான அடிப்படையாகவும் அமைந்துள்ளது. [1] இவ்வாறு மொழி பெறும் முக்கியத்துவத்தையே பேராசிரியர் கேர்ணி பின்வ ருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"Language was fundamental to the Identity of each community and intimately bound up with the community's distinctive culture and way of life. The issue became the principal focus of mounting communal rivalry and tensions."[2]

மொழியானது இங்கு நாம் பார்த்தவைகளிலும் மேலான முக்கி யத்துவமுடையதென்பதைப் பேராசிரியர் எலி கெடுரி கூறுவதில் இருந்து விளங்கிக் கொள்ளலாம். அவர் மொழியை இன்னோர் தேசிய இனத்திலிருந்து வேறுபடுத்துவதற்கும், ஒரு தேசிய இனம் என்று அடையாளம் காட்டுவதற்கும், அது தொடர்ந்து இயங்குவதை அடை யாளம் காண்பதற்குமான ஒரு அலகாகக் குறிப்பிடுகின்றார். இன்னும் மேலாக மொழிமூலமாக அமைந்த அத்தேசிய இனம் (Nation) தனக் கென ஒரு அரசைத் தானாக அமைப்பதற்கும் உரிமையுடையது என்கின்றார்.

"Language is the external and visible badge of those differences which distinguish one nation from another; it is the most important criterion by which a nation is recognized to exist and to have the right to form a state on its own."[3]

தென்னாசியப் பிராந்தியத்தில் பிரித்தானியர் வெளியேறியதைத் தொடர்ந்து உருவாகிய புதிய அரசுகளில் மொழியானது அரசியல்



நடவடிக்கைகளில் முக்கிய பங்கை மிக விரைவிலேயே பெறலாயிற்று. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பங்களாதேசம் ஆகிய அரசுகளில் மொழியுடன் இணைந்து செயற்பட்ட இன்னோர் அம்ச மாக மதம் காணப்படுகின்றது. இப் பிராந்தியத்தின் அரசியல், பொருளாதார, சமூக, சமய நடவடிக்கைகளில் மொழியும், மதமும் நன்கு பின்னிப் பிணைந்து செயற்படுவதனைக் காணமுடிகின்றது. அனைத்திலும் பெரும்பான்மை மொழியைப் பேசுவோரும், பெரும் பான்மை மதத்தைப் பின்பற்றுவோரும் தத்தம் அரசியல் பொருளா தார சமூக நலன்களுக்காக மொழியையும், மதத்தையும் கருவிகளாகப் பயன்படுத்தியமையால் இப் பிராந்திய அரசுகளில் வாழும் ஏனைய சிறுபான்மை இன மக்கள் மொழி, மத அடிப்படைகளில் பாதிக்கப் பட்டிருப்பதனையும், இரண்டாந்தரப் பிரசைகளாக நடைமுறையில் இருப்பதனையும் கண்டுகொள்ளலாம். மிக அண்மையில் பங்களா தேசத்தில் இஸ்லாம் அரச மதமாக்கப்பட்டமையும், பாகிஸ்தானி லும் அப்போக்கு வலுவடைந்திருப்பதனையும் அவதானிக்கலாம். இவ்வாறு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தோர் மொழி, மதம் அடிப்படையில் தங்கள் நலன்களைப் பேண முற்பட்டமை இப் புதிய அரசுகளின் தேசிய ஒருமைப்பாட்டிற்கும், ஐக்கியத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன.[4] சுதந்திரத்தின் பின்பாக இலங்கையிலே இடம்பெற்ற சம்பவங்கள் அந்நாட்டின் தேசிய ஐக்கியத் திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பாரிய அச்சுறுத்தலாக விளங்கு வதனை இன்றுவரை காணமுடிகின்றது.

சுதந்திரத்தின் பின்பான இலங்கையிலே அங்கு வாழும் பெரும் பான்மைச் சிங்கள மக்களுக்கும், சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு மிடையிலான உறவுகளில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டிருப்ப தனைக் காணலாம். அதிலும் முக்கியமாக 1956 யூனில் சிங்கள மொழி அரசகரும மொழியாகச் சட்டமாக்கப்பட்டதிலிருந்து இவ்வு றவுகளில் மட்டுமல்ல இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு ஆகிய வற்றிலும் வேண்டத்தகாத விளைவுகள் ஏற்படுவதற்குக் காரணமா யிற்று. இத்துன்பகரமான நிகழ்வைப் பேராசிரியர் எஸ். அரசரெத் தினம் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது இங்கு கவனித்தற்குரியது.

"The 'Sinhala - only' legislation, as it came to be known, was the beginning of a tragic history of Sinhalese-Tamil ill feeling in the country."[5]

சிங்கள மொழியை அரச கருமமொழியாக்கியமை மட்டுமல்ல பௌத்த மதத்தினை அரசமதமாக்க வேண்டுமென்ற கோரிக்கையும் பின்னர் அது இலங்கை அரசின் நடவடிக்கைகளில், அரசியலமைப்பில் தனித்துவமான இடம் ஒன்றைப் பெற்றுக் கொண்டமையும் ஏனைய சிறுபான்மை இன, மொழி, மத மக்களிடையே கசப்புணர்வை ஏற்படுத்தியது. இவ்வகையில் சிங்கள மொழியும், பௌத்த மதமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவைகளாக இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வாழ்விலே வலுமிக்க சக்தியாகத் தொடர்ந்தும் இயங்கி வருவதனைக் காணலாம். ஒரு புறத்தில் சிங்கள, பௌத்த மக்களிடையே பலமான உறுதிப்பாட்டையும், ஒற்றுமையுணர்வையும் பரந்தளவிலே ஏற்படுத்திய போதும், அதாவது சிங்கள பௌத்த தேசியத்தை வளர்ச்சிப்படுத்தியபோதும் மறுபுறத்திலே இலங்கையின் ஏனைய சிறுபான்மை இன, மொழி மதத்தைச் சார்ந்த மக்களையும் இணைத்துச் செல்லும் உண்மையான இலங்கையர் தேசிய வாதத்தை வளர விடாமலும் செய்தது. [6]

இலங்கையில் அரசியல் இன முரண்பாடுகளுக்கு ஏதுக்களாக மொழியும், மதமும் இருந்தமையை விளக்கிக் கொள்வதற்கு சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளுதல் அத்தியாவசியமானதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்காலில் இலங்கையின் தென்பாகத்தில் பௌத்த, சிங்கள மக்கள் மத்தியிலே தேசிய உணர்வு ஏற்பட்டு இன, மத, மொழி அடிப்படையிலான தேசியவாதம் ஒன்று எழுச்சி பெறத் தொடங்குகின்றது. கிறிஸ்தவ மதத்தையும், மிஷனரி நடவடிக்கைகளையும், ஏகாதிபத்திய செல்வாக்கினையும் எதிர்த்து வளரத் தொடங்கிய இவ்வியக்கம் ஆரம்பத்தில் பௌத்த மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றுப் பின்னர் சிங்கள மொழியையும் தன்னுடன் இணைத்துச் சிங்கள பௌத்த அடையாளத்தைக் கொண்ட கலாசார தேசியவாதமாக வளர்ச்சி அடைந்தது. [7] இது சிங்களமொழி, சிங்கள இனம்,பண்பாட்டம்சங்கள், பௌத்தமதம், அவர்கள் வரலாறு, தர்மதீப, ஸீகதிபக் கோட்பாடுகள், புராணமரபுகள், ஐதிகங்கள் என்பவற்றிற்குத் தனி முதன்மை கொடுத்துச் சிங்கள தேசியத்துக்குப் புத்துயிர் ஊட்டுவதாக அமைந்தது. அதேநேரம் இத்தீவு வாழ் மற்றைய மக்களின் இன, மொழி, மத, வரலாறு, பண்பாட்டம்சங்கள் பொறுத்துச் சமத்துவமாக நோக்காத தன்மை கொண்டதாகவும் வளர்ச்சி அடைந்தது. ஒரு மதமும், ஒரு மொழியும், சிங்கள, பௌத்த தேசிய வாதத்தின் இன்றியமையாத தனித்துவ அம்சங்களாக அமைந்த



போதும் நாட்டின் ஒரு பிரதேசமல்லாது முழுநாடுமே அதற்குரிய தளமாகக் கொள்ளப்பட்டது. இதனாலே தான் இவ்வியக்கம் வலுப்பெற்ற காலத்தில் பிறமொழி பேசுபவருடனும், பிறமதத்தவருடனும் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. அதேசமயம் கண்டியர் தேசியவாதத்தையும் [8] ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வர்க்கத்தினரது இலங்கையர் தேசியவாதத்தினையும் [9] மேவி மேலெழுந்தது. இக்கலாசாரத் தேசியவாதமானது அன்னிய ஆட்சிக்கும், கிறிஸ்தவ அம்சங்களுக்கும், மேலைத்தேய வாழ்க்கை முறைக்கும் எதிரானதாக வளர்ச்சி பெற்றாலும் பின்னர் இலங்கைத் தீவில் வாழ்ந்து வந்த பிற சமூகங்களுக்கு எதிரானதாக மாற்றம் பெற்றது. இப்பின்னணியிலே தான் இலங்கைத் தமிழ் மக்களிடையே காலங்கடந்த நிலையில் தோன்றி வளர்ச்சி பெற்ற இலங்கைத் தமிழ்த் தேசியவாதத்தை விளக்கிக் கொள்ள முடியும். ஆனால் சிங்கள பௌத்த மக்களிடையே வளர்ச்சி பெற்றது போன்ற வலிமைமிக்க கலாசார தேசியவாதம் இலங்கைத் தமிழர் பொறுத்து இலங்கை சுதந்திரமடைந்த காலம் வரை உருவாகவில்லை எனலாம்.

சிங்கள அரசியல் தலைவர்களும், சிங்கள மக்களும் மேற்பார்த்த இன, மொழி, மத அடிப்படையிலான தேசியவாதத்தை (Ethnic Nationalism) இலங்கை முழுவதும் தழுவிய இலங்கையர் தேசியவாதத்துடன் சமப்படுத்திக் கொண்டதுடன்,வேறான இவ்விரண்டையும் ஒன்றாகக் கருதிக் கொண்டனர். வரலாற்று ரீதியான மரபு, புராண ரீதியான ஆதாரங்களை இதற்குச் சான்றாகக் கொண்டனர். இந்நிலையானது இலங்கையில் வாழ்ந்த ஏனைய இன, மொழி, மத மக்களை அன்னியப்படுத்தியதாகவும், அவர்களுடன் முரண்பட வைத்ததாகவும் அமைந்தது. இலங்கையின் ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு பொறுத்துப் பெரும்பான்மைச் சிங்கள மக்களுடன் இணைந்து போகாமல் இருப்பதற்கு சிங்கள தேசியவாதத்தை இலங்கையர் தேசிய வாதம் என்று பெரும்பான்மைச் சிங்கள மக்கள் கருதிச் செயற்பட்டமையே காரணமாகும். இவ்வாறு கருதியமையைப் பேராசிரியர் கே. எம். டீ. சில்வா தூரநோக்கற்ற, யதார்த்தமற்ற மனப்பாங்கு என்று குறிப்பிடுகிறார்.

This was a short - sighted and unrealistic attitude. [10]

அத்துடன் பௌத்தமதமும், சிங்களமொழியும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய வகையிலே பின்னிப்பிணைந்திருப்பதால் ஒன்றினை விட்டு மற்றதனைப் பிரித்துப் பார்க்க முடியாதென்றும், சிங்கள மொழி

இத்தீவில் வீழ்ச்சியுற்றால் அதனுடன் தொடர்பான பௌத்த மதமும், கலாசார மரபுகளும் அழிந்து போய்விடுமென்ற ஒருவகை அச்ச உணர்வே சிங்களமொழியைப் பேணிப்பாதுகாத்து, வலுப்படுத்துவதான உந்துதல் நடவடிக்கையை மேற்கொள்ள வைத்ததென்றும் குறிப்பிடுகிறார். [11] அதன் காரணமாகவே சிங்கள மொழியை அடிப்படையாகக் கொண்ட தேசியவாதத்தை இலங்கையர் தேசியவாதமாக மாற்றிக் கொண்டனர் எனவும் காட்டுகின்றார். இவ்வாறு மாற்றிய நிலையானது சிங்கள மக்களையும், இலங்கைத் தமிழ் மக்களையும் பாதித்தது என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றார், இவர் குறிப்பிட்ட அச்ச உணர்வை சிங்கள அரசியல்வாதி ஒருவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

"In this country the problem of the Tamil is not a minority problem. The Sinhalese are the minority in Dravidastan. We are carrying on a struggle for our national existence against the Dravidastan majority."[12]

பொதுவாகவே இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்கள் இந்தியாவுடனோ அல்லது அதன் ஒரு பகுதியுடனோ ஒப்பிட்டுத் தம்மைச் சிறுபான்மை இனத்தவர் என்ற அச்ச உணர்விற்கு ஆட்படுத்தியிருந்தமை அவர்கள் மொழி, மதம் பொறுத்து மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குக் காரணமாகவும் அமைந்தது. சிங்களத் தலைவராகிய டி. எஸ். சேனநாயக்கா இந்தியாவுடன் ஒப்பிடுகையில் தாங்கள் சிறுபான்மையோர் என்றும், அநீதிக்கு ஆளாயினோர் எனவும், தங்களுக்கென உடைய ஒரேயொரு நிலத்துண்டே இத்தீவு என்றும், அதனைத் தமதாக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தமை கவனத்தில் எடுத்துக் கொள்ளத்தக்கது.

"We Sinhalese have only this small bit of land to ourselves. We want this country for ourselves."[13]

சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கிருந்த இந்தச் சிறுபான்மை இன உணர்வு (Majority people with minority complex) இலங்கைத் தமிழ் மக்களுடன் முரண்படும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் காரணமாயிற்று. ஆனால் தற்கால அரசியல் சூழ்நிலைகளையும், புவிசார் அரசியலையும் நன்கு விளங்கிக்கொண்டால் சிங்களத் தலைவர்களிடம் காணப்பட்ட இந்த அச்ச உணர்வு தேவையற்றது என்பதுடன் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும், ஒருங்கிணைப்பிற்கும் மாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வைந்தது என்பதனையும் அறிந்துகொள்ளலாம். இத்தகைய நடவடிக்கைகளே இன்று இலங்கை எதிர்நோக்கியிருக்கும் பாரிய அச்சுறுத்தல்களுக்குக் காரணமாகும்.



சிங்கள மக்களுக்கு இருந்ததைப் போன்ற அச்ச உணர்வு இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இருந்தது. தமிழ்க் காங்கிரசின் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் சிங்கள மேலாதிக்க அச்ச உணர்விற்கு எதிராகவே (Sinhalese Domination) அவரது ஐம்பதுக்கம்பது திட்டம் காணப்பட்டது. சட்டசபையிலே 'சமபலப் பிரதிநிதித்துவம்' (Balanced Representation) என்பதாக அது வெளிப்பட்டது. அதாவது பெரும்பான்மை மக்கள் பெறும் ஆசனங்களுக்குச் சமமானதாகச் சிறுபான்மை மக்கள் பெறும் ஆசனங்கள் இருக்க வேண்டுமென்பதாக இருந்தது. அத்துடன் மந்திரிசபையில் ஒரு சமூகத்தைச் சேர்ந்தோர் அரைப் பகுதிக்கு மேல் இருக்கக் கூடாதென்றும் தமிழ் மக்கள் கேட்டுக் கொண்டனர். [14] சோல்பரிகமிஷன் முன் வைக்கப்பட்ட இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் இச்சிங்கள மேலாதிக்க அச்ச உணர்வானது 1956 இல் சிங்கள அரசகருமமொழி சட்டம் இயற்றப்பட்டதிலிருந்து தீவிரமடைந்தது.

இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலிருந்து தனிச்சிங்களச் சட்டம் இயற்றப்படும் 1956 ஆம் ஆண்டு வரை ஆங்கிலமே அரசகருமமொழியாக விளங்கியது. எனினும் இலங்கைக்குச் சுதந்திரம் கிடைக்கு முன்னரே இலங்கையில் சிங்களமும், தமிழும் அரசகருமமொழிகளாக இருக்க வேண்டுமென்ற கருத்து இலங்கை அரசியல்வாதிகளின் மனதிலே இருந்து வந்துள்ளது. இதற்கு ஆதாரமாக 1944 சட்டசபையிலே நிதி மந்திரியாக இருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் ஆங்கிலத்திற்குப் பதிலாகச் சிங்களமே அரசகருமமொழியாக ஒரு குறிப்பிட்ட காலத்துள் ஆக்கப்பட வேண்டுமென்ற பிரேரணை கொண்டு வரப்பட்டு, தமிழும் அரசகருமமொழியாக இருக்க வேண்டுமென்ற திருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. [15] ஆனால் செயலளவில் ஒன்றும் நடைபெறாமல் ஆங்கிலமே இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் அரசகருமமொழியாக இருந்து வந்தது. இடையிடை ஆங்கில மொழிக்கு எதிராகவும், சுதேச மொழிகளுக்குச் சார்பாகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். 1950 இல் ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல "Our People are slaves because they are being governed through a foreign Language"[16] எனவும்;

கொல்வின் ஆர். டீ. சில்வா The Government of the country must function through the association and co - operation of the people. People cannot co - operation in an administration that is carried out in a language they cannot understand. That is the simple and short case for the immediate adoption of the nationa languagc.[17]

எனவும் கூறியிருப்பதனைக் காணலாம்.

1951 ஆம் ஆண்டு ஐக்கியதேசியக்கட்சி அரசில் மந்திரியாக இருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தனது சிங்கள மகாசபா மாநாட்டில் நடத்திய வருடாந்தக் கூட்டத்தில் சிங்களம் மட்டும் தான் இலங்கையின் அரசகருமமொழியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினார். இத்தீர்மானத்தை ஐக்கிய தேசியக்கட்சி ஏற்கும்படி சிங்கள மகாசபா கேட்டிருந்தது. ஆனால் ஐக்கியதேசியக்கட்சி ஏற்க மறுத்த நிலையில், ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப்பதவிக்குத் தான் வர முடியாத நிலையில் பண்டாரநாயக்கா இதனைச் சாட்டாக வைத்துத் தனது மந்திரி பதவியை ஜூலை 1951 இல் இராஜினமாச் செய்தார்.[18] மிகவிரைவிலேயே சிங்கள மகாசபையைக் கலைத்துவிட்டு 1951 செப்டம்பரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தாபித்துக் கொண்டார். தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அரசகருமமொழி மாற்றம் பொறுத்து அக்கறையின்றி இருப்பதாகவும், காலவரையறை ஒன்றை ஏற்படுத்துவதில் தோல்வி அடைந்து விட்டதாகவும் குற்றம் சாட்டினர். சிங்கள மொழியையும், பௌத்தமதத்தையும் இரு ஆயுதங்களாகக் கொண்டு இலங்கையில் அரசியலதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கண்ட பண்டாரநாயக்கா வெகுதிறமையாகவே அவற்றைக் கையாள முற்பட்டார்.

1944 இலிருந்து ஏறக்குறைய ஒரு தசாப்தம் வரை இலங்கையின் அனைத்துப் பிரதான அரசியல் கட்சிகளும் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு தேசியமொழிகளையும் அரசகருமமொழிகளாக ஏற்றிருந்தன. இருமொழிகளுக்கிடையிலான தொடர்பு பற்றி சிலர் ஆலோசனை செய்தபோதும் சிங்கள மொழி பேசும் பிரதேசங்களில் சிங்களமும், தமிழ்மொழி பேசும் பிரதேசங்களில் தமிழும் அல்லது நாடு முழுவதும் இவ்விருமொழிகளும் அரச கருமமொழிகளாக இருக்க வேண்டுமென்பது அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஆங்கிலம் அரசகரும மொழியாக விளங்கியதற்கும், ஆங்கிலமொழி மூலமான கல்விக்கும் எதிராக அமைந்த சுயபாஷா இயக்கம் மிகவிரைவிலே ஆங்கிலத்திற்கு எதிராக சிங்களமும், தமிழும் என்ற நிலையிலிருந்து மாறி



சிங்களம் மட்டுமே அரசகருமமொழி என்ற கோரிக்கையை முன்வைக்கலாயிற்று.

இலங்கையுட்படத் தென்னாசிய நாடுகள் அனைத்திலும் அரசகருமமொழி அல்லது உத்தியோக மொழி அந்தஸ்து (Official Language) என்பது அம்மொழி பேசுவோரின் பொருளாதார மேம்பாட்டினை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். "Official Language" usually became the language of public administration. ஒரு நாட்டின் உத்தியோக மொழி என்பது அந்நாட்டின் பொது நிர்வாகம் நடாத்தப்படும் மொழி என்ற அந்தஸ்தைப் பெறுகின்றது. பொது நிர்வாக சேவையில் தொழில் வாய்ப்புக்கள், பதவி உயர்வு, சமூகத்தில் உயர் அந்தஸ்து, வருமானத்திற்கான வாய்ப்புக்கள், கல்வி போதனை என்பனவற்றில் அம்மொழியைப் பேசுவோர் மேம்பாடு அடைவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது.[19] அத்துடன் மொழி அடிப்படையிலான இன அடையாளத்தை, உணர்வை வலுப்படுத்துவதாகவும் அமைகின்றது. இப் பின்னணியில் இலங்கையில் சிங்களமொழி அரசகரும மொழியாக்கப்பட்டதனை விளங்கிக்கொள்ளலாம்.

1952 இன் பின்பாகக் குறிப்பாக அரசகருமமொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களமும் தமிழும் என்ற சமநிலை மாறி 'சிங்களம் மட்டும்' என்பது வலுமிக்க கோரிக்கையாக மாறத் தொடங்கியது. இந்தக் கோரிக்கையானது ஆங்கிலேயராட்சியில் அரசாங்கப் பதவிகளுக்குத் தமிழர்களுடன் போட்டியிட்ட சிங்கள புத்திஜீவிகள் மத்தியிலே தனிப்பட்ட முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் இக் கோரிக்கை சிங்கள பழைமைவாதிகளை ஒன்றிணைக்கும் மூலமாகவும், அதன் வழியாகச் சமூகத்திலே உயர்ந்த அந்தஸ்தையும், பெரும் அங்கீகாரத்தையும் பெற வைத்த ஒன்றாகவும் கருதப்பட்டது. தனிப்பட உயர்குழாத்தினரை மட்டுமல்லாது (elite) சாதாரண சிங்களப் பொதுமக்களையும் (Mass) கூட இது கவர்ந்தது. மேலும் இதுவரை சிங்கள மக்களிடையே காணப்பட்ட தாழ்நிலச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என்ற இரு பிரிவினரையும் ஒற்றுமைப்படுத்தியதாகவும். மேலைத்தேசச் செல்வாக்கிற்கு எதிராகப் பழைமைவாதிகளின் கிளர்ச்சிகளின் அடையாளமாகவும் செயற்பட்டது. சிங்கள மக்களிடையே காணப்பட்ட தீவிரத்தன்மை கொண்டோரை ஒன்றிணைத்து 1956ஆம் ஆண்டளவில் பலம் மிக்க சமூக மூலமாக உருவாக்கியதும் இக் கோரிக்கையே.

The idea appealed the both to Sinhalese elite and the Sinhalese masses — to the former because of their career opportunity its adoption would provide, and to the latter because Sinhalese was their idiom and its use would facilitate their relations with the public services among other things. It united the Kandyan and low — country Sinhalese and came to symbolize the traditionalist revolt against the impositions of the west. It was the unifying issue of the whole militant protest of this group, which by 1956 had become the majority social element.[20]

இலங்கையின் அரசாங்க பொதுச்சேவையில் அதிக இடங்களைச் சிங்களவர் பெறவேண்டுமென்ற விருப்பம் அரசகரும மொழியாகச் சிங்களம் மட்டும் இருக்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் நெருங்கிய வகையிலே தொடர்பு கொண்டிருந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் அரசாங்க பொதுச்சேவையில் இலங்கைத் தமிழர் அவர் தம் குடித்தொகையுடன் ஒப்பிடுகையில் கூடிய அளவு விகித இடங்களைப் பெற்றிருந்தனர்.[21] முக்கியமாக வட இலங்கையில் கிறிஸ்தவ மிஷனரி நடவடிக்கைகளின் மூலமும், இந்துக் கல்வி நிறுவனங்களின் வாயிலாகவும் சிறந்த ஆங்கிலக் கல்வியினை இப் பிரதேசத்தவர் பெற்று வந்தனர். அத்துடன் இப் பிரதேசத்தின் வளமற்ற தன்மையும் விவசாய நடவடிக்கைகளைப் பெரிய அளவில் மேற்கொள்வதற்குத் தடையாக அமைந்திருந்தது. அதனால் இங்குள்ள படித்த இளைஞர் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும், மலாயாவிலும் அரசாங்க, இடைநிலைப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டனர். 1922 இன் பின்பாக மலாயாவில் வாய்ப்புக்கள் தடைப்படவே இலங்கையின் மற்றைய பகுதியிலே வேலைவாய்ப்புக்களைப் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர். இக்காலத்திலேதான் சிங்களப் பகுதிகளிலே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, வர்த்தகம் என்பன குறைவடைந்து வந்தன. அதே நேரம் ஆங்கிலக்கல்வி பெற்ற சிங்களவர் தொகை அதிகரித்து வந்ததுடன் அவர்களும் அரசாங்க வேலைவாய்ப்புக்களில் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கினர். 1930 அளவில் அரசாங்க எழுதுவினைஞர், உயர் பதவிகளில் இருந்த சிங்களவர்களின் விகிதம் அதிகரிக்கலாயிற்று. அப்படியிருந்தும் சுதந்திரத்துக்கு முன்பான ஒரு தசாப்தத்தில் ஒய்வூதியம் பெறும் அரசாங்க பொதுச் சேவையில் தங்கள் குடித்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க ஏறத்தாள இரு மடங்கான பங்கினைத் தமிழர் பெற்றிருந்தனர். இலங்கையின் குடித்தொகையில் தமிழர்



களுடன் ஒப்பிடுகையில் ஆறு மடங்கு அதிகமான குடித்தொகை விகிதத்தைக் கொண்ட சிங்களவர் இத்தகைய பதவிகளில் தமிழர் பெற்றிருந்தவையுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கிற்கும் குறைந்தளவான பதவிகளையே பெற்றிருந்தனர்.[22] 1946 இல் இலங்கை சிவில் சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டோரில் ஏறத்தாள அரைப்பங்கினர் தமிழர்களாகவும் நீதிச்சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டோரில் மூன்றில் இரு பங்கினர் தமிழர்களாகவும் இருந்தனர்.[23] இத்தகைய நிலைமைகள் இயல்பாகவே சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கெதிரான வெறுப்புணர்வைத் தூண்டி விட்டன. அரசாங்கப் பதவிகளைப் பெறுவதற்கான கடும் போட்டியில் சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்பதனை ஏற்படுத்துவது சிங்கள மக்கள் பெருமளவிலான இப்பதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பாக அமையும் என்றும், ஆங்கிலேயர் ஆட்சியின் போது பெரும்பான்மைச் சிங்கள மக்களுக்கு இழைக்கப் பட்ட அநீதியை நிவர்த்தி செய்யும் என்றும் அவர்களால் நம்பப் பட்டது.

"If the Sinhalese became the only language of government, it was felt, an advantage in access to public service employment would be obtained by the Sinhalese, which would correct the imbalance created under colonial rule and compensate the Sinhalese for past injustices.[24]

சிங்களம் மட்டும் அரசகருமமொழியாக்கும் நடவடிக்கையிலே சிங்கள மக்களுள் ஒரு சிறிய பிரிவினரே முன்னின்று ஆரம்பத்தில் உழைத்தனர். மத்திய வகுப்பிலிருந்து தோற்றம் பெற்ற கல்வி கற்ற சிங்கள பௌத்த சமூகத்தவரே இம் முயற்சியில் முன்னின்றனர். சாதாரண சிங்கள வெகுஜனங்களை மொழி, மத உணர்வினைப் பயன் படுத்தித் தங்கள் பின்னால் அணி திரளச் செய்வதில் இவர்கள் பெரு வெற்றி கண்டனர் எனலாம். சிங்கள வெகுஜனங்களின் நலன்களிலும் பார்க்க இப் படித்த சிங்கள, பௌத்த வகுப்பினரின் நலன்களில் இவர்கள் கூடிய அக்கறை கொண்டிருந்தனர். உண்மையிலே தாங்கள் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், பொருளாதார மேம்பாடு அடைவதற்குமான தம் சுயநல நோக்கிற்காக மொழி, மத, இன உணர்வு அடிப்படையில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனையே ஜி. சி. மெண்டிஸ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"The only way they could attain their objects was by developing the Sinhalese language and rehabilitating Buddhism, two

factors with which they thought their own development was bound up."[25]

கல்விகற்ற சிங்கள பௌத்த மத்திய வகுப்பினர்தான் பொருளாதார போட்டிகளின் காரணமாக இலங்கைத் தமிழர் மீதும், தமிழ் மொழி மீதும் எதிர்ப்புணர்வுகளைத் தீவிரமாக வளர்த்து தம் அரசியல் நலன்களைப் பேண முற்பட்டவர்களாவர். தமிழ் மக்கள் சிங்கள மேலாதிக்கத்தினரால் அச்சமடைய, சிங்கள மக்களோ தமிழ்கலாசார மேலாதிக்கத்தினால் பாதிக்கப்படுவோம் என்று அஞ்சினர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தன் அரசியல் அபிலாஷைகளை அடைய முற்பட்டதன் பின்னர் தமிழ்மொழி பற்றியும் தமிழர் பற்றியும் கூறிய கருத்துக்களை இங்கு பார்ப்பது பொருத்தமானதாகும்.

......Felt that as the Tamil language was spoken by so many millions in other countries, and possessed a much wider literature and as the Tamil-speaking people had every means of propagating their literature and culture, it would have an advantage over Sinhalese which was spoken only by a few million people in this country. They felt that not only in the Northern and Eastern Provinces was there a majority of Tamils, but that there was a large number of Tamil people in the Sinhalese Provinces... and that ..all this would create a situation when the natural tendency would be for the use of Sinhalese to shrink and probably in the course of time almost to reach the point of elimination.[26]

இலங்கையின் மொத்தக் குடித்தொகையில் 70 சதவீதமாகவும், இலங்கைக் குடியுரிமை பெற்றோரில் 80 சதவீதமாகவும் விளங்கும் சிங்கள மக்களின் மொழியுடன் சமத்துவமான உரிமை கேட்பதற்கு தமிழ்மொழி பேசுவோருக்கு தகுதி இல்லை என்பதாக இவர்களின் வாதம் அமைந்தது. சிங்களத்தையும், தமிழையும் அரசகருமமொழியாக்குவது நாட்டைத் துண்டாடவே வழிவகுக்கும் என்றும், ஒருவர் மற்றவரின் மொழியைப் படிப்பதற்கு எந்தத் தூண்டுதலும் இல்லையென்றும், நாடு முழுவதும் தமிழுக்குச் சம அந்தஸ்துக் கோருவது முன்னைய 'ஐம்பதுக்கம்பது' கோரிக்கையை ஞாபகப்படுத்துவதாக அமைகிறதென்றும் சிங்களவர் தரப்பில் கூறப்பட்டது. அவர்களைப் பொறுத்துப் பெரும்பான்மையோரின் மொழியை அரசகரும மொழியாகச் சிறுபான்மைத் தமிழர் ஏற்பது நியாயமானது எனவும் வற்புறுத்தப்பட்டது.



It was claimed that two official languages were unnecessary and undesirable and that the rightful position of the majority, denied under colonial rule, should be restored by declaring Sinhalese the sole official language.[27]

'சிங்களம் மட்டும்' போராட்டத்தில் சாதாரண சிங்கள மக்களைப் பொறுத்தளவில் பரந்தளவிலான வலுமிக்க ஆதரவு கொடுக்கப்பட்டது. தனிப்பட்ட ஒவ்வொரு சிங்களவரும் தனது மொழியுடன் தன் எதிர்கால நல்வாய்ப்பும், அதன் மூலமாகத் தனது கௌரவம், சுயமரியாதை தங்கியிருப்பதாகவும் கருதிக் கொண்டனர். இப்போராட்டம் மூலமாக வலுமிக்க சிங்கள இன உணர்வின் அடிப்படையிலான ஒற்றுமையைச் சிங்கள மக்கள் ஏற்படுத்திக் கொண்டனர். மொழி இயக்கமானது சிங்கள மக்களைப் பொறுத்தவரை ஒன்றிணைந்த, பெருமைமிக்க அவர்களின் மீள் எழுச்சிக்கும், சுய உரிமையை வலியுறுத்துவதற்குமான அடையாளச் சின்னமாகக் கருதப்பட்டது.

1944 — 1954 எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவல இருவரும் சிங்களமும் தமிழும் சம அந்தஸ்து உள்ள அரச கரும மொழிகளாக இருப்பதை ஏற்றுக் கொண்டனர். ஆனால் மொழியானது அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான மூலமாக மாற்றமடைந்ததைத் தொடர்ந்து இவ்விரு தலைவர்களைக் கொண்ட கட்சிகளும் தங்கள் கொள்கையை மாற்றிக் கொண்டன.[28] 1953, இல் S. L. F. P. தனது மொழிக் கொள்கையை மீள்பரிசீலனை செய்வதற்கு ஒரு செயற்குழுவை நியமித்தது. அது சிங்களம் மட்டும் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தாலும் 1955 ஆம் ஆண்டின் கட்சியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேதான் அதற்கான அங்கீகாரம் பெற்றது.[29] V. L. L. S. P யும், பாஷா பெரமுனவும் இக்கோரிக்கைக்கு ஆதரவு வழங்க L. S. S. P யும் கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்தும் சிங்களமும், தமிழும் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தின.

தீவிரமாக வளர்ந்து வந்த சிங்களம் மட்டும் இயக்கமானது ஐக்கிய தேசியக் கட்சியின் மொழிக் கொள்கை பொறுத்துச் சிக்கலை ஏற்படுத்தியது. நாடு பூராவும் சிங்கள மக்களிடையே இவ்வியக்கமானது மிகப் பெரும் செல்வாக்கைப் பெற்று வளர்ந்தது. அடுத்த பொதுத் தேர்தலிலே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் இவ் விருப்பத்திற்கு மாறாகப் போக முடியாத சூழ்நிலை காணப்பட்டது. அதே சமயம் இரு

மொழிக் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி உறுதியாக ஆதரித்திருந்தது. கட்சியின் தலைமைத்துவம் ஆங்கிலம் கற்ற மேலைத்தேய தன்மை கொண்ட, வர்த்தக சிறப்புத் தொழிற்துறை சார்ந்ததாக, இன உணர்வு குறைவாகக் கொண்டதாகக் காணப்பட்டது. ஓரளவிற்குத் தமிழ் மக்களையும் இணைத்துச் செல்லும் தன்மை கொண்டதாக இக்கட்சி காணப்பட்டது. 1948 இல் ஐக்கிய தேசியக் கட்சியின் முதற் தலைவரான டி. எஸ். சேனநாயக்கா பின்வருமாறு பேசியிருந்தார்.

There is no question of one community being inferior or superior to any other community. All people have got equal rights... If I failed to appreciate the arguments of my friend when he appealed on behalf of one community, it was because I do not differentiate between one community and another. I treat them all alike.[30]

பிரதமராக இருந்த சேர். ஜோன் கொத்தலாவலவும் சிறுபான்மையோர் நலன் பொறுத்து அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார்.[31] ஒரு தடவை வானொலிச் செய்தியின் போது பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"We ... cannot afford to think in terms of narrow sectarianism, for as I have often said, the country belongs to us all whether we are Burghers, Muslims, Tamils, or Sinhalese.[32]

சிங்கள மக்கள் தங்கள் மொழியையும், கலாசாரத்தையும் பாதுகாக்கச் சிங்களத்தை அரசாங்க மொழியாக்க வேண்டுமெனக் கருதினால், அவர்களைப் போலவே தமிழ் மக்களும் தம் மொழி, கலாசாரத்தைக் காக்கத் தமிழை அரசாங்க மொழியாக்கவேண்டும் எனக் கேட்பது நியாயமானது என டி. எஸ். சேனநாயக்கா குறிப்பிட்டார்.[33] 1950 இல் கூட்டப்பட்ட ஐக்கியதேசியக் கட்சி விசேட கூட்டமொன்றில் "Promoting the national languages of the country i.e. Sinhalese and Tamil...to be the official language...on terms of equality" என்பது வலியுறுத்தப்பட்டது.[34]

டி. எஸ். சேனநாயக்கா பதவியிலிருந்தபோது அரசாங்க சபையின் செயற்குழுவின் ஆலோசனைப்படி ஆங்கில மொழிக்குப் பதிலாகச் சிங்களத்தையும் தமிழையும் உத்தியோக மொழிகளாக மாற்றியமைப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அரசகரும மொழி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதன் இறுதி அறிக்கையிலே பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.



"To make Sinhalese and Tamil the official languages of th country in the shortest possible time."[35]

ஜோன் கொத்தலாவல அரசாங்கமும் சிங்களத்தினையும், தமிழையும் நாட்டின் அரசாங்க மொழிகளாக்குவது என்ற பழைய கொள்கையினின்றும் 1955 வரை விலகவில்லை. 1954 இல் அரசகருமமொழிப் பிரச்சினையின் அடிப்படையிலே சிங்கள மத்தியதர வர்க்கத்தினர் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் அணி திரளலாயினர். இக்காலத்தே உருவாகிய லங்காஜாதிக குரு சங்கமயவும், அகில இலங்கைப் பௌத்த சம்மேளனமும் சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக்கப்பட வேண்டுமென்ற கோஷத்தை நாடெங்கும் முழங்கின. இந் நிலையில் பிரதமராகவிருந்த ஜோன் கொத்தலாவல உத்தியோக பூர்வ விஜயமொன்றை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டிருந்தார். அங்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த வைபவம் ஒன்றிலே கூறிய கருத்துக்கள் தென்னிலங்கையிலே ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிரான தீவிர வெறுப்புணர்வை வளர்ப்பதாக அமைந்தது. இக் கூட்டத்திலே இலங்கைத் தமிழர்களுக்கு சிங்களமும், தமிழும் அரசாங்க மொழிகளாக இலங்கை பூராவும் இருப்பதற்கான அரசியலமைப்பு விதிகளை ஏற்படுத்துவதாக உறுதி கூறியிருந்தார்.[36]

"... The U. N. P. of which I am the Head, stands for development through co-operation. It eschews communalism and all forms of sectionalism in politics. It gave a clear indication of its mind on the language problem when it adopted a resolution that the Tamil and Sinhalese languages should have identical status through out the Island. This resolution has been adopted by the government Parliamentary Party and my government intends to uphold it steadfastly."[37]

என்று குறிப்பிட்டதன் மூலம் தனது சமத்துவக் கொள்கையை வெளிப்படுத்தி இருந்தார். ஆனால் பிரதமரின் யாழ்ப்பாணப் பேச்சு சிங்கள இனவாதிகளைத் தூண்டுவதாக அமைந்தது. இவர்களும் இவர்களது கட்சிகளும் 'சிங்களம் மட்டுமே' அரசகரும மொழியாக இருக்க வேண்டுமெனத் தீவிரமாகக் கோஷமிடத் தொடங்கினர்.

இதன் விளைவாகப் பாஷா பெரமுன, பௌத்த மண்டலய போன்ற பல்வேறு இயக்கங்களும் நாடெங்கும் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டின் வர்த்தக முயற்சிகளில் பெரும்பாலானவை தமிழ் மக்கள் கைவசமாக இருப்பது ஒரு தேசியப் பிரச்சினை என்றும் அநீதியானது என்றும் கூறித் தமிழர்களுடன் தொடர்புற்ற அனைத்தையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற ஓர் இயக்கமும் கொழும்புவாழ் சிங்கள முதலாளிமாரால் ஆரம்பிக்கப்பட்டது. 'சிங்களம் மட்டும்' இயக்கத்தின் பிரதான தளபதியாகிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கா இவ்விடயம் தொடர்பாக தெரிவித்த கருத்தினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும்.

... The fact that in the towns and villages, in business houses and in boutiques, most of the work is in the hands of Tamil-speaking people will inevitably result in fear, and I do not think an unjustified fear, of the inexorable shrinking of the Sinhalese language. It is a fear that cannot be brushed aside and it is a fear that is creating this position. [33]

சிங்களம் மட்டும் அரசகருமமொழி இயக்கத்திற்குச் சிங்கள மக்கள் மத்தியிலே வளர்ந்து வந்த அமோக ஆதரவினாலும், அதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் அதன் தலைவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் சிங்கள, பௌத்த மக்களிடையே ஏற்பட்ட ஆதரவின் காரணமாகவும் ஐக்கிய தேசியக்கட்சி இதுவரை கடைப்பிடித்து வந்த இருமொழிக் கொள்கையை 1955இன் இறுதியிலே கைவிட வேண்டியதாயிற்று. மொழிப் பிரச்சினையை அரசியல் கருவியாக்கி அதன் மூலம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் வழியையே ஐக்கிய தேசியக் கட்சியினரும் பின்பற்ற வேண்டியதாயிற்று. சிங்களம் மட்டும் இயக்கத்தின் வளர்ந்து வந்த அமோக செல்வாக்கிற்கு, தாக்கத்திற்கு (Pressure) அடிபணிந்த U. N. P. யினர் இருமொழிக் கொள்கையைக் கைவிட்டுப் பாராளுமன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தல் மூலம் சிங்களத்தை மட்டும் அரச கருமமொழியாக்குதல் என்பதற்குப் பொதுமக்கள் அங்கீகாரம் பெற முற்பட்டனர். [39] 1956 பெப்ரவரி 18 இல் களனியில் நடந்த வருடாந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மகாநாட்டிலே சிங்களம் மட்டுமே இந்நாட்டின் அரசகரும மொழியாக இருக்க வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.



"Sinhalese alone should be made the state language of Ceylon." [40]

1956இன் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுத்தேர்தல் விஞ்ஞாபனமும் இதனைத் தெளிவாக வெளிப்படுத்துவதாக அமைந்தது. [41]

சிங்களம் மட்டும் அணிக்குள் ஐக்கிய தேசியக் கட்சி சேர்ந்து கொண்ட சில நாட்களுள் இதுவரை சிங்களம் மட்டும் இயக்கத்தைத் தீவிரமாகக் கொண்டு நடத்திய குழுக்கள் ஒன்றிணைந்து (Mahajana Eksath Peramuna-People's United Front) மகாஜன எக்ஷத் பெரமுன என்ற பெயரில் கூட்டணி ஒன்றை அமைத்துக் கொண்டன. இக் கூட்டணியிலே S. L. F. P பெரியதும், மிக முக்கியத்துவம் வாய்ந்த கட்சியாகக் காணப்பட்டதுடன் அதன் தலைவரே இப் புதிய கூட்டணியின் தலைவருமானார். M. E. P. உடனடியாகவே சிங்களம் மட்டும் அரசகருமமொழியாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தது. அதே சமயம் சிறுபான்மையோரின் மொழி தமிழ் என்ற வகையில் அதற்கு உரிய அந்தஸ்து கொடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டது.

"This will not involve the suppression of such a minority language as Tamil, whose reasonable use will receive due recognition." [42]

1956 பொதுத் தேர்தலில் M. E. P. யின் முக்கிய கோரிக்கையாக மொழி, மதம், கலாசாரம் -- சிங்களம், பௌத்தம், சிங்கள பௌத்த கலாசாரம் இவற்றைப் பேணிப் பாதுகாப்பதாகக் காணப்பட்டது. அத்துடன் நாட்டில் காணப்பட்ட குறிப்பிட்ட சிறுபான்மையோர் சிங்கள பௌத்தர்களின் பங்கவர்களாக உணர்வு ரீதியாக அடையாளம் காட்டப்பட்டனர். U. N. P. , M. E. P. ஆகிய இரு பிரதான அரசியல் கட்சிகளும் பெரும்பான்மைச் சமூகத்தவரிடமே தங்கள் பிரசாரங்களை மேற்கொண்டன. இவ்விரு கட்சிகளுமே தமிழ்மொழி பேசப்படும் தொகுதிகளில் தங்கள் வேட்பாளர்களை நிறுத்த முடியாமல் இருந்தன. இப்பகுதிகளில் சமஷ்டி அரசியலமைப்பைக் கோரிய சமஷ்டிக் கட்சி (F. P.) தமிழ் வாக்காளரின் பிரதான அரசியற் கட்சியாக விளங்கியது. தேர்தல் தொகுதி அரசியலானது இறுக்கமான வகையிலே இனவாத வழியிலே பிரிக்கப்பட்டிருந்தது. இச்சூழலில் உண்மையான தேசியக்கட்சிகளான மாக்ஸிசக் கட்சிகளுக்கு அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வாய்ப்பு இல்லாதிருந்தது.

1956 இன் பொதுத்தேர்தல் 'இலங்கை வரலாற்றில் திருப்புமுனையாகவும், அனேகமாக ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தியதாகவும் காணப்படுகின்றது.[43] இலங்கையின் அரசியலில் 25 வருடங்களுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்திய மேலைத்தேய மயமாக்கப்பட்டிருந்த உயர் குழாத்தின் (உத்தியோக, வர்த்தகத்துறை) அதிகாரத்தை பதவியிழக்கச் செய்தது. அவர்களது இடத்திலே தேசியவாத புத்திஜீவிகளையும், சிங்களம் கற்ற உத்தியோக வகுப்பினரையும் பதவியேற்றியது. அரசியல் அதிகாரத்தின் பரப்பளவை அகலமாக்கியதுடன் (அதிகரித்ததுடன்)முன்னரிலும் பார்க்க இலங்கையின் ஜனநாயகத்தைக் கூடியளவு உண்மைத் தன்மையுடையதாக்கியது. இலங்கை அரசியலின் இயல்பையும், உள்ளடக்கத்தையும் மாற்றியதுடன் புதிய பெறுமானங்களை, இன்னும் மேலாக அரசியலரங்கிலே புதிய சொற்பதங்களையும் அறிமுகப்படுத்தியது.

It resulted in the dethronement of the westernized elite, both professional and commercial which had dominated the politics of Ceylon for over 25 years. In their place it enthroned the nationalist-minded elite and the Sinhalese educated professionall classes. It thus broadened the base of political power and in a sense made Ceylon's democracy more genuinely democratic"[44]

1956 ஏப்ரல் பொதுத்தேர்தலில் M. E. P. கூட்டணி பெற்ற வெற்றி உறுதியானதாக இருந்தாலும் பெரும் செலவினைக்கொண்டு ஈட்டப்பட்ட ஒன்றாகும். பெரும்பான்மைச் சமூகத்தவரின் கிளர்ச்சியூட்டும் நம்பிக்கைகளையும், விருப்பங்களையும் அடிப்படையாகக் கொண்டு பெற்ற இவ்வெற்றி அவற்றை நிறைவேற்ற முற்படும் பொழுது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், ஒருங்கிணைப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. அத்துடன் நாட்டின் பொருளாதார அடிப்படைகளையே பலவீனப்படுத்தியதாகவும் அமைந்தது. M. E. P. கூட்டணி பதவிக்கு வந்தவுடனேயே தான் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆரம்பித்தது. அவ்வகையில் ஆங்கிலத்திற்குப் பதிலாகச் 'சிங்களம் மட்டும் அரச கருமமொழி' மசோதாவை அவசரமாகத் தயாரித்து 1956 யூனில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

1926 களிலே 'எங்கள் அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு சமஷ்டி முறையே' என்று குறிப்பிட்டு அதற்காதரவாகப் பல கட்டுரைகளையும் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா எழுதியிருந்தார்.[45] (Federation as the only solution to our political Problems)அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான மூலமாகமொழி மாற்றப்பட்டதன் பின்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சமஷ்டி முறைக்கு முற்றிலும் எதிரானவராக மட்டுமல்லாது, தமிழ் மொழி பிரதேசரீதியிலான அந்தஸ்தைப் பெறுவதையும் சிங்களம் மட்டும் அரசகருமமொழி மசோதா விவாதத்தில் கடுமையாக எதிர்த்திருந்தார்,



"I am entirely in agreement with the Hon. member fo Ruwanwella that making of Tamil as a regional language wil eventually lead to a federal form of government. What are the Tamil regions in this country? Do you think they are restricted the Northern and Eastern Provinces alone? All the areas where to the Tamils are resident in the Central, Uva and Sabragamuwa Provinces could be claimed for their purpose to be Tamil areas or Tamil regions. I do not like the use of a regional language at all in this way. I say make Sinhalese the official language and give due recognition if necessary regionally for the use of the Tamil language in the various branches of the national services..."[46]

இம்மசோதா விவாதத்தின் போது ஜோன் கொத்தலாவல S. L. F. P. யின் இந்த நடவடிக்கையினால் தமிழ் பேசும் மக்கள் அடையப்போகும் இன்னல்களைப் பின்வரும் வகையிலே எடுத்துக்காட்டினார். இலங்கை வாழ் மக்களில் ஒரு பெரும் பகுதியினரின் அடிப்படை உரிமைகளைப் பறித்து, அவர்களை அடக்கி வைப்பதற்காகத் திட்டமிட்டுக் கொண்டுவரப்படுகிறது என்றும், ஐக்கிய இலங்கை இதன் மூலம் பிளவுபட்டு விட்டது என்றும் குறிப்பிட்டார்.

"... What did the M. E. P. say? We want justice and fairplay Today we have a Bill which when closely examined, clearly shows that it has been deliberately brought in this form to suppress a large section of the people of this country and deprive them of their fundamental rights... A united Ceylon has today been divided by the action of this government."[47]

இம்மசோதா பற்றித் தம் கருத்தினைத் தெரிவித்த இடதுசாரி சிங்களத் தலைவர்களுள் ஒருவரான கலாநிதி கொல்வின் ஆர். டி.

சில்வா பின்வருமாறு அரசின் வெறுக்கத்தக்க இனவாத நடவடிக்கையைக் கண்டித்தார்.

"The Tamil-speaking people had every reason to live in fear and anxiety about their rights in this country for the government by its obnoxious and communal acts like this forfeited the confidence the Tamil speaking people had placed in it..."

மேலும் அவர் குறிப்பிடுகையில்,

Two torn little bleeding states may yet arise out of one little state ... ready for the imperialists to mop up that which imperialism has only recently disgorged.[48]

இன்னோர் இடதுசாரித் தலைவரான லெஸ்லி குணவர்த்தனா இலங்கையின் ஒருமைப்பாட்டிற்குப் பாதகமாக அமைந்து நாடு பிளவு படுவதற்கு வழிவகுக்கலாம் என்று எடுத்துக் கூறினர்.

"There is the graver danger... if those people... feel that a grave and irreparable injustice is done to them, there is a possibility of their deciding even to break away from the rest of the country."[49]

இவ்விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள்,

"The imposition of Sinhalese as the sole official language of this country must inevitably and inexorably put an end, even if that is not your real objective today, to the Tamil nation and the Tamil people as such"[50]

என்று குறிப்பிட்டார். இன்னோர் தமிழ் அரசியல் தலைவர் இது பற்றிப் பின்னர் குறிப்பிட்டபோது சிங்களம் மட்டும் சட்டம் ஆக்கப் பட்டவுடனேயே இந்நாடு சிங்களமொழி பேசுவோரையும், தமிழ் மொழி பேசுவோரையும் கொண்ட நாடாகப் பிளவுபட்டு விட்டது என்று குற்றஞ் சாட்டினர்.[51]

இலங்கையில் மொழிப் பிரச்சினையானது முக்கியமாக மத்திய வகுப்பினரின் (petty bourgeoisie) வர்க்க நலன்களுடன் தொடர்பு டையதாகவே காணப்பட்டது. உழைக்கும் மக்களைப் பொறுத்தவரை



நூலகம்

மொழிப்பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்திருக்கவில்லை.[52] ஆனால் நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்த மத்திய வகுப் பினரிடையே மொழி பற்றிய கோஷமானது வலிமைமிக்க உணர்வி னையும், மிகுந்த முக்கியத்துவத்தையும் கொண்டதாக அமைந்தது. கிறிஸ்தவ மயமான, ஆங்கிலக் கல்வி கற்ற ஒரு வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சமுதாயத்திலே பொருளாதார, சமூக, அரசியல் துறைகளிலே செல்வாக்கில்லாதிருந்த முற்குறிப்பிட்ட மத்திய வகுப் பினர் அத்தகைய செல்வாக்கினைப் பெறுவதற்கான ஒரு வழியாகச் சிங்களம் மட்டும் அரச கருமமொழி என்பதனைக் கொண்டனர். இவர்களுள் சிங்கள ஆசிரியர், மாணவர்கள், இளைஞர், ஆயுள்வேத வைத்தியர், பௌத்த பிக்குமார் ஆகிய நான்கு பிரிவினர் இம் மொழிப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். இப்பிரிவினர் அனைவரும் தங்கள் குறைபாடுகள் அனைத்தும் சிங்களம் அரச கரும மொழியாக அந்தஸ்துப் பெற்றவுடன் தீர்ந்து விடுமென்று நம்பினர்.

"They were after all, the experts in Sinhalese culture and language, and if their proficiency received state recognition, naturally they themselves would rise in status. If Sinhalese were made the state language, differential pay, educational facilities, and job opportunities would no longer favor the English speaking elite. And as it was seen from the village, vast numbers of government jobs would immediately be opened to their students if English were displaced and Sinhalese promoted."[53]

சிங்களம் மட்டும் மொழிக்கிளர்ச்சியில் சிங்கள இளைஞர், மாண வர்கள் தாங்கள் பெருமளவிலான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் ஈடுபட்டிருந்தனர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீட்டர் கெனமன் இவ்விவாதத்தில் கலந்துகொண்டு சிங்களம் மட்டும் சட்டத்தால் உருவாக்கப்பட்ட பொருளாதார மாயையை, பொய்த் தோற்றத்தை, (Economic illusions) சிங்கள இளைஞர் வேலைவாய்ப்புக்களைப் பெறலாம் என்ற தவறான நம் பிக்கை கொண்டிருப்பதை எடுத்துக் காட்டினர்.

We had one argument from the representative of the local Klu Klux Klan ... he made a statement that this is a bill to solve the employment problems of the Sinhalese ... why do you think all these S. S. C. students and others are stirred to such an extent? ... Many of them believe that immediately this bill

is passed they will all get jobs, that their economic problem will be solved.[54]

தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் இம் மசோதா பற்றிய விவாதம் நடைபெற்றபோது இடதுசாரிச் சிங்களத் தலைவர்களும், தமிழ்ப் பிரதிநிதிகளும் இம்மசோதா உருவாக்கத்திற்கான உண்மை நோக்கினையும், இதனாலேற்படப்போகும் பாரதூரமான விளைவு களையும் எடுத்துக்காட்டியிருந்தனர். இன்று இலங்கையில் நடை பெறும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது இவ்விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய தலைவர்களின் தீர்க்கதரிசனமிக்க கருத்துக் களை நன்கு உணர முடிகின்றது. முன்னெச்சரிக்கையாக அன்று அவர்கள் கூறிய விடயங்கள் இலங்கையின் அரசியல், பொருளா தார, சமூக வாழ்வில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியிருப் பதைக் கண்டுகொள்ளலாம்.

M. E. P. அரசாங்கத்தின் முதலாவது நடவடிக்கையாக,

"the Sinhala Language shall be the one official language of Ceylon"

என்று பிரகடனப்படுத்தும் சிங்கள அரச கருமமொழிச் சட்டம் அமைந் தது. 1956 யூன் 5இல் கொண்டு வரப்பட்ட இம்மசோதா யூன் 14 ஆம் திகதி M. E. P., U. N. P. பாராளுமன்ற அங்கத்தவர் களின் ஆதரவுடன் சட்டமாகியது. இதற்கு எதிராக L. S. S. P., C. P. பாராளுமன்ற அங்கத்தவர்கள் வாக்களித்தனர்.

இலங்கையிலே சிங்களம் மட்டும் அரசகரும மொழிச்சட்டம் இயற்றப்பட்டதன் பின்பாக அதன் அரசியல், பொருளாதார, சமூக வாழ்வு பாரதூரமான விளைவுகளுக்கு உட்பட்டது. இலங்கை அரசி யலிலே இனவாதப் பண்புகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண் டாம் தசாப்தத்திலிருந்து வெளிப்படத் தொடங்கியிருந்தாலும், 1956 இல் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்தின் பின்னர் தீவிரமான வகையிலே இலங்கையின் இருபெரும் சிங்கள, தமிழ் இனங்களுக் கிடையே செயற்படுவதனைக் காணலாம். இலங்கையின் ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு, அதன் பொருளாதார, சமூக முன்னேற்றம், வளர்ச்சி எல்லாவற்றிற்கும் பெருந்தடையாக இனவாதப் பண்புகள் செயற் பட்டன. ஒரு நாட்டினம் என்ற கருத்து வலுவிழந்து, இரு முனைப்பான, எதிரான தன்மைகள் கொண்ட தேசிய இனங்கள் என்ற கருத்து வலுப்



பெற்றதாக மாறுகின்றது. இரு மொழிகளும் சமமான அந்தஸ்து உடையன என்ற நிலை மாறி உத்தியோக பூர்வமாக சிங்கள மொழி உயர்ந்த அந்தஸ்தினையும், தமிழ் மொழி தாழ்ந்த அந்தஸ்தினையும் பெற்றுக்கொண்டமை நாட்டின் பிரஜைகள் என்ற வகையில், சிங்களப் பெரும்பான்மை மக்களின் மேலாதிக்கத்தை வலியுறுத்தும் தன்மை யுடையதாகவும், தமிழ் பேசும் சிறுபான்மை மக்களின் தாழ்ந்த நிலையை எடுத்துகாட்டும் அடையாளமாகவும் அமைந்தது. இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நலன்கள் பொறுத்துச் சிங்கள மக்களுக்குச் சாதகமானதாகவும், தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமானதாகவும் அமைந்த இம் மொழிச் சட்டம் அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக மாற்றிவிட்டது.[55] இந்நிலைமையைத் தான் பின்வரும் கூற்று அழகாக எடுத்துக்காட்டுகின்றது.

The adoption of Sinhalese as the official language without recognition of Tamil seemed to members of the Tamil community to reduce them to a state of inferiority and to cast doubt on their full membership in the polity.[56]

1956 இல் மொழிப் பிரச்சினை வலுப்பெற்றதைத் தொடர்ந்து இலங்கையின் தேசிய அரசியலின் பிரதான நீரோட்டத்திலிருந்து (mainstream) வடக்குக் கிழக்கிலிருந்த தமிழ்ப் பிரதேசங்கள் அன்னியப் படுத்தப்பட்டன. மொழியை அடிப்படையாகக் கொண்டு சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் தங்கள் சுய அடையாளங்களை வலுப்படுத்தி, மொழிவாரித் தேசியவாத வளர்ச்சிக்கு அடிகோலின. சிங்கள மக்கள் மத்தியிலே சிங்கள மொழியையும், பௌத்த மதத்தையும் மையமாக வைத்து அரசியல் நடாத்த அவர்களின் இரு பிரதான கட்சிகளும் முற்பட்டன. அவ்வாறே இதற்கு எதிரான முறையில் தமிழ்மொழியை மையமாகவைத்துத் தமிழர் அரசியலில் தமிழரசுக்கட்சி 1956 இலிருந்து மேலாதிக்கத்தைப் பெற்றுக்கொள்கின்றது. தமிழரசுக்கட்சி இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சமஷ்டி அமைப் பொன்றை ஏற்படுத்துவதைத் தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது. 1960இல் அக்கட்சி தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சுதந்திரத்தை அடைவதற்காகத் தங்களின் முழுக்கவனத்தை யும் செலுத்தப்போவதாக அறிவித்தது. கட்சி ஆரம்பித்த காலத்தில் இருந்து இவர்கள் பாராளுமன்றத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர் களாகவும், எந்தச் சிங்களக் கட்சியுடனும் ஒத்துழைக்க விரும்பாதவர் களாகவும், தாங்கள் ஒத்துழைப்பதற்கு எந்த ஒரு சிங்களக் கட்சி யையும் அடையாளம் காணமுடியாதவர்களாகவும் விளங்கினர்.

Since its origin the F. P. has been isolated in parliament, unwilling to co - operate with any Sinhalese party and unable to find a Sinhalese party willing to co - operate with it. While it has promised to support all progressive measures in the economic and social sphere introduced by any government in office. [57]

அதேசமயம் இக்கட்சி பதவிக்கு வரும் எந்த அரசாங்கமும் பொருளாதார, சமூகத் துறைகளில் எடுக்கும் முற்போக்கான நடவடிக்கைகளுக்குந் தம் முழு ஆதரவையும் வழங்குவதாக உறுதியளித்தது.

மொழிப் பிரச்சினை வலுபெற்றுச் சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து U. N. P , M. E. P ஆகிய இரு பிரதான கட்சிகளுமே இலங்கையின் கட்சி முறைமையில் இனரீதியான பிளவினை அறிமுகம் செய்தன. அதனால் இரு சமூகங்களுமே தேசிய அணியிலான அரசியல் சக்திகளாக இயங்குவதற்குத், தடையாகின. அதனால்தான் முதன்முதலாக மாற்று அரசாங்கத்தைத் தேர்வு செய்யும் பணி சிங்களப் பிரதேசங்களுக்கு மட்டும் கிடைக்கலாயிற்று. இவ்வகையிலே தமிழ்ப் பிரதேசங்கள் தேசிய நீரோட்டதிலிருந்து புறக்கணிக்கப்படலாயின. இதன் காரணமாகப் பெரும்பான்மையினரின் பிரதான அரசியல் கட்சிகள் எவையுமே தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து தம் கட்சி சார்ந்த அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவது பொறுத்து அக்கறையில்லாதிருந்தன. மொத்தத்தில் தமிழ் மக்களது வாக்குகள் அவர்கள் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தேவையற்றனவாகக் காணப்பட்டன.

Since the eruption of the language issue and the espousal of 'Sinhala' only' by both U. N. P. and the M. E. P. had introduced communal cleavage into the Party system...... Communities now prevented a national alignment of political forces, there was for the first time, if only in the Sinhala area a choice between alternative governments. [58]

1956 இல் பொதுத் தேர்தலையும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற அபிவிருத்திகளையும் வைத்து வளர்ச்சி பெற்ற சிங்கள தமிழ் எதிரெதிர் நிலைமையே 1956 களின் பின்பான இலங்கை அரசியல் கட்சி முறைமையின் அடிப்படையாக அமைந்துள்ளது. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரை இலங்கையின் அரசியல் நடவ



டிக்கைகளின் மையமாகச் சிங்கள - தமிழ் எதிரெதிர் நிலைமையே காணப்பட்டது. ஆட்சியதிகாரம் பெறுவதற்காக இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் தம் துருப்புச் சீட்டுக்களாகச் சிங்கள, தமிழ் முரண்பாடுகளையே பயன்படுத்தின. முரண்பாடுகளின் விளைவாக ஏற்பட்ட இனவாத உணர்வுகள் இலங்கையின் தேசிய நலன் கருதிய அரசியல் கட்சிகள் வளர்ச்சி பெறாமைக்கு வழிவகுத்ததுடன், நீவின் அரசியல் முறைமையில் புற்று நோய்போல் தீங்கு விளைவிப்பதாக அமைந்துவிட்டது.

**The Ceylonese party system can be explained in terms of the exploitation of Sinhala -- Tamil polarity by different parties with different style and with different objectives.** [59]

சிங்கள அரசகருமமொழிச் சட்டம் தமிழர்களின் விருப்பத்திற்கு மாறாகச் சிங்கள மொழித் தேர்ச்சியினைக் கட்டாயப்படுத்தியதுடன், அவர்களின் வேலை வாய்ப்புக்களில் பெருமளவிலான வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது. தமிழ் பேசும் மக்களுக்குத் தனிச் சிங்களத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அரசதிணைக்களங்களில் உபயோகிக்கும் படிவங்கள் தனிச் சிங்களத்திலேயே இருந்தன. மூன்று மொழிகளிலும் இருந்த பெயர்ப்பலகைகள் கூடத் தனிச்சிங்களத்திலே மாற்றியமைக்கப்பட்டன. அரச சேவையில் புதிதாகச் சேருபவர்கள் மூன்று வருட காலத்துள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும், இன்றேல் வேலையிலிருந்து நீக்கப்படும் ஆபத்து இருந்தது. சிங்களம் அரசகருமமொழியாக்கப்படும் முன்பு அரச சேவையில் சேர்ந்தவர்கள் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்குள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் அவர்களுக்கு உயர் பதவிகளோ, தரம் உயர்த்துதலோ, வருடாந்த சம்பள உயர்வோ கிடையாது. இத்தனிச் சிங்களச் சட்டத்தால் ஏராளமான தமிழ் அரசாங்க உத்தியோகத்தர் பாதிக்கப்பட்டனர். மாறாகச் சிங்கள மக்களுக்கு அரசாங்க, தனியார்துறை வேலைவாய்ப்புக்களிலும், பதவி உயர்விலும் பெருமளவு சலுகைகளை வழங்கியது. இந்நிலையைப் பேராசிரியர் ஊர்மிலா பட்ணிஸ் பின்வருமாறு விளக்குகிறார்.

Objectively the grant of official status to Sinhala provided the Sinhala educated middle class prospects for better opportunities for employment and promotion in public services. In a scarce resource society, with the state being the largest employer, the language issue was thus not merely an emotive issue but was also infused with hard economic implications. [60]

மொழிக் கொள்கை பொறுத்து இரு பிரதான அரசியல் கட்சிகளும் ஏற்படுத்திய திடீர் மாற்றமானது சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டனர் என்று கருத வைத்தது. தமிழர்களைப் பொறுத்து இம்மொழி மாற்றமானது தமிழர் கலாசாரம், மொழியுரிமை, வேலைவாய்ப்புக்களில் புறக்கணிப்பு, அரசியலில் சமத்துவமற்றநிலை ஆகியனவற்றில் மட்டுமன்றிச் சிங்களப் பெரும்பான்மையினரின் மேலாதிக்க ஆபத்திற்கும் வழி வகுத்த ஒன்றாகக் கருதப்பட்டது. அதனால் தான் தமிழ்மொழியின் முக்கியத்துவம் பற்றி ஒரு தமிழ்ப் பாராளுமன்ற அங்கத்தவர் குறிப்பிட்டதனை இங்கு காட்டுவது பொருத்தமாகும்.

We speak often and repeatedly about the language that is so fundamental to us. Language is the basis of our culture, and our nationality. [61]

இதேபோல் தமிழரசுக்கட்சித் தலைவர் இராசமாணிக்கம்,

"the Sinhalese - Tamil problem in Ceylon is not a mere matter of language. It is one that affects our very existence as a national entity in this country. [62]

எனக்குறிப்பிட்டதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இவ்வகையில் தனிச்சிங்களச் சட்டமானது தமிழ்மொழிக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவமான இருப்பிற்கும் (Separate existence of the Tamil - Nation) அச்சுறுத்தலாக அமையும் என்று எடுத்துக் காட்டப்பட்டது.

இலங்கையின் தமிழ் பேசும் மக்களைப் பெருமளவு பாதித்த இம்மொழிச் சட்டத்தை அவர்கள் சார்ந்திருந்த கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்பன கடுமையாக எதிர்த்தன. தமிழரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் இம்மொழிப் பிரச்சினைக்குத் தகுந்த தீர்வு வேண்டுமெனில் அது,

"Autonomous Tamil linguistic state within Federal Union of Ceylon" as the only way of protecting the "Cultural freedom and identity of the Tamil speaking people"

என்றவாறு அமைந்தது. [63] இவ்வாறே தமிழ்க் காங்கிரஸின் கோரிக்கைகளாகத் தாய்மொழி மூலம் கல்வி கற்றல், சொந்தமொழி



மூலம் அரசுடன் தொடர்பு கொள்ள, பதில்பெற, சகலஅலுவல்களையும் ஆற்ற உரிமை பெறல், இலங்கையின் அரசாங்க மொழியாகவும், தேசியமொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப்படுதல் என்பன அமைந்தன. [64]

இவற்றின் பின்னணியில் சிங்களம் மட்டும் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அன்று தமிழரசுக் கட்சியின் தலைமையில் பாராளுமன்றத்திற்கு முன்னால் அமைதி முறையிலான ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஆனால் சிங்களம் மட்டும் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களினாலும், அவர்கள் குண்டர்களினாலும் இந்த ஆர்ப்பாட்டம் வெறித் தாக்குதலுக்கு இலக்காகியது. அதே நேரம் கிழக்கிலங்கையில் மட்டக்களப்பிலும், கல்ஓயாக் குடியேற்றத் திட்டத்திலும் சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான இனக் கலவரம் ஆரம்பித்து 100 க்கு மேற்பட்ட உயிர்களைப் பலி கொண்டது. [65] கலவரத்தைத் தொடர்ந்து நாட்டில் தீவிரமான இன உணர்வுகள் இரு இனங்கள் மத்தியிலும் வலுப்பெறலாயிற்று. தமிழர்களின் கோரிக்கை பலம் பெற்ற அதே சமயம் சிங்களம் மட்டும் தீவிரவாதிகளின் விட்டுக் கொடாத தன்மையும், விறாப்பும் அதிகரித்தன.

தமிழ் மக்களினதும், தமிழரசுக் கட்சியினதும் தீவிரமான எதிர்ப்பை அடுத்து மொழியுரிமை உட்பட்ட அவர்களினது கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு அகிம்சை முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஒரு கால அவகாசம் கொடுத்ததைத் தொடர்ந்து எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் ஓர் உடன்பாட்டினைக் காணும் நோக்குடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டது. இதன் விளைவாக ஜூலை 26, 1957இல் பண்டாரநாயக்கா – செல்வநாயக்கம் ஒப்பந்தம் என்று பலராலும் அறியப்பட்ட ஓர் உடன்பாடு இரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்டது. [66] மொழிப்பிரச்சினை குறித்து "recognition of Tamil as the language of a national minority என்றும், "the language of administration of the Northern and Eastern Provinces should be Tamil"

என்றும் சட்டவாக்கம் ஏற்படுத்துவற்கு உடன்பாடு காணப்பட்டது. அத்துடன் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களின் அரசியல் தன்னாதிக்கத்தையும், (Tamil Political Autonomy) சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவும் அதிகாரங்களைக் கொண்ட, தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கைகளை நிறைவேற்றும் தன்மை கொண்ட

பிரதேச சபைகள் ஏற்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.[67] இப் பிரதேச சபைகள் விவசாயம், கல்வி, அரசாங்க ஆதரவிலான குடியேற்றத் திட்டங்களில் குடியேற்ற வாசிகளைத் தேர்ந்தெடுப்பது உட்படப் பல துறைகளில் அதிகாரங்களைக் கொண்டதாக அமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சியினரின் உத்தேச சத்தியாக்கிரக நடவடிக்கையும் இதன் மூலம் கைவிடப்பட்டது.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்பாக எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிறுபான்மையினர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். அதன் வெளிப்பாடாகத்தான் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தமே காணப்பட்டது. இன்று வரை அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவதில் இருந்து அதன் முக்கியத்துவத்தை நாம் விளங்கிக் கொள்ளலாம். பண்டாரநாயக்காவே,

"Safeguard the position of the Sinhalese while, at the same time, meet reasonably the fears of the Tamils"

என்று ஒப்புக் கொண்டிருந்தார்.[68] ஆனால் உடனடியாகவே இவ்வொப்பந்தத்திற்கு தீவிர எதிர்ப்பு ஏற்படலாயிற்று. சிங்களம் மட்டும் இயக்கத்தின் அவரது ஆதரவாளர்களோ இவ்வொப்பந்தத்தைச் சிங்கள மக்களுக்கு இழைக்கப் பட்ட துரோகம் என்று பலமாகக் கண்டித்தனர். (a betrayal of the Sinhalese community) தீவிரவாத ஏக்சத் பிக்கு பெரமுன ஒப்பந்தத்தைக் கைவிடும்வரை சத்தியாக்கிரகம் இருக்கப் போவதாக அச்சுறுத்தியது.[69] U. N. P. யினரே ஒப்பந்தம் இன அடிப்படையில் நாட்டைப் பிரித்து விட்டது என்று குற்றஞ் சாட்டினர். எந்த இனவாத சக்திகளைப் பயன்படுத்தி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினாரோ அந்த சக்திகள் இப்போது அவருக்கே எதிரானவையாகச் செயற்பட்டன. அதே இனவாத சக்திகளை U. N. P.யும் பயன்படுத்தியது. தென்னிலங்கையில் ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தீவிரமானபோது தமிழர்களோ சிங்கள அரசாங்கம் தங்களை அவமானப்படுத்தி விட்டதாக எதிர்ப்புத் தெரிவித்தனர். பண்டா – செல்வா ஒப்பந்தம் மூலம் பண்டாரநாயக்கா சிங்கள மக்களைத் தமிழருக்கு காட்டிக் கொடுத்து விட்டார் என U. N. P. தீவிர இனவாதக் கோஷங்களை முன் வைத்தது. இவ்வொப்பந்தத்தினை ஒரு சவப்பெட்டியுள் (coffin) வைத்து 'Down with Bandaranaike - Chelvanayagam pact' எனத் தீவிர எதிர்ப்புப் பிரசாரத்தை மேற்கொண்டது. முதல் அடி (First Step) என்ற வகுப்புவாத



நூலினை வெளியிட்டுச் சிங்கள மக்களிடையே இனத்துவேஷத்தைக்
ளைறியது.[70] சிங்கள சியரட்ட போன்ற பத்திரிகைகளின் மூலம்
மக்களிடையே இனவாத உணர்வுகள் தூண்டி விடப்பட்டன. பிரசா
ரத்தின் மூலம் மட்டும் பண்டா – செல்வா ஒப்பந்தத்தைந் நடை
செய்ய இயலாதெனக்கண்டு, கொழும்பு விக்ரோறியா பாலத்திலிருந்து
கண்டி தலதாமாளிகைக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில்
பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டதன் மூலம் தீவிர எதிர்ப்பு
வெளிப்படுத்தப்பட்டது.[71] 1958 மார்ச்சில் இலங்கைப் போக்கு
வரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வண்டிகள் சிங்கள சிறி எழுத்
துப் பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகளுடன் யாழ்ப்பாணத்திற்கு
அனுப்பப்பட்டன. தமிழரசுக் கட்சியினர் மொழியுணர்வு அடிப்படை
யில் சிங்கள சிறி அழிப்புப் போராட்டமொன்றை ஆரம்பிக்கச், சிங்க
ளப் பகுதிகளில் தமிழ் எழுத்து அழிப்புப் போராட்டம் ஒன்று ஆரம்
பமாகி நாட்டின் குழப்ப நிலையை மேலும் மோசமாக்கியது. ஒப்பந்
தத்திற்கெதிராக எழுச்சியடைந்த இனவாத சக்திகளின் முன் எதிர்
நிற்கவியலாத எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சி
யினால் தவிர்த்திருக்கக் கூடிய சிறி எதிர்ப்புப் போராட்டத்தைச் சாட்
டாகக் கொண்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதாக அறிவித்தார்.[72]
இச்சூழ்நிலையில் இன உணர்வுகள் மோசமடைந்து நாடு பெரும் இனக்
கலவரத்திற்கு உட்பட்டது. தமிழரசுக் கட்சியின் மகாநாட்டிற்குச்
சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் கவிழ்க்கப்பட்டுப் பிரயாணிகள்
தாக்குதலுக்கு இலக்காகினர். நாடு பூராவும் வதந்திகள் பரப்பப்பட்டுந்
கொலைகள், கொள்ளைகள், தீவைப்புக்கள் பரவலாக இடம்பெற்றன.
நூற்றுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கா
னோர் சிங்களப் பிரதேசங்களிலிருந்து அகதிகளாக வடக்குக் கிழக்குத்
தமிழ்ப் பிரதேசங்களுக்கு வந்து சேர்ந்தனர்.[73]

சிங்கள — தமிழ் இனக் கலவரம் நடந்து நான்கு நாட்கள் சென்ற
பின்னர் சட்டமும், ஒழுங்கும் நிலைநாட்டப்பட அவசரகாலச் சட்டம்
பிறப்பிக்கப்பட்டது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில பாராளு
மன்ற அங்கத்தவர்களும், சிங்களத் தீவிரவாதக் கட்சியான ஜாதிக
விமுக்தி பெரமுனவின் தலைவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.
கலவரம் அடங்கிய நிலையில் பண்டாரநாயக்கா தமிழ்மொழி
விசேட உபயோகம் ("Reasonable Use") சட்டத்தை இயற்றினர்.[74]
இம்மசோதா பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது
தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர் தடுப்புக் காவலில்
இருந்தனர். தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் இச்சட்ட மூலம்
நிறைவேற்றப்படுவதை ஆட்சேபித்து அனேகமாக எல்லா எதிர்க்கட்சி

அங்கத்தவர்களுமே சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.[75] இச் சட்டத்தின்படி பாடசாலைத் தரத்திலும், பல்கலைகழகத்தரத்திலும் தமிழ்மொழி மூலம் கல்வி கற்பதற்கான உரிமை, பொதுச் சேவை நுழைவுப் பரீட்சைகளைத் (Public Service Entrance Examination) தமிழ்மொழி மூலம் எடுக்கும் வாய்ப்பு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத் (Prescribed administrative purposes) தேவைகளுக்காகத் தமிழ்மொழியைப் பயன்படுத்தும் உரிமை என்பன வழங்கப்பட்டன. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகளை (சரத்துக்களை) ஆக்குவதற்கான அதிகாரம் பிரதம மந்திரியிடமே கொடுக்கப்பட்டிருந்தது.[76]

இதன் கீழ் இயற்றவேண்டிய சட்டவிதிகளை இந்த அரசு இயற்றாததால் வெறும் கண்துடைப்பாகவே தமிழ்மொழி (விசேட உபயோகம்) சட்டம் காணப்பட்டது. இந்த சட்ட விதிகளை இயற்றுவதற்கு ஏழு வருடங்களுக்கு மேலாகச் சென்றதிலிருந்து அரசின் விருப்பற்ற நிலையை அறிந்து கொள்ளலாம். அவை கூடத் தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதன் விளைவாக ஏற்படுத்தப்பட்டவையாகும். பேராசிரியர் கே. எம். டீ. சில்வா இவ்விதிபற்றிப் பின்வருமாறு கூறியுள்ளது மிகப்பொருத்தப்பாடுடையதாகும்.

"It was significant concession, but it did not mollify the Tamils. In any case although the bill was approved by Parliament the regulations necessary for its implementation were not passed till 1966, when Dudly Senanayake was Prime Minister. [77]

ஒரு ஜனநாயக அமைப்பிலே அம்மக்கள் விளங்கிக் கொள்ளும் மொழியிலே நிர்வாகம் செய்யப்படுவதற்கு அவர்கள் சட்டரீதியான உரித்துடையவர்கள் மட்டுமல்ல, அரசாங்கமும் தனது கடமையாக அதனைக் கொள்ள வேண்டும். ஆனால் இலங்கையில் தமிழ் மக்கள் பொறுத்து அந்த உரிமை இன்று வரை வழங்கப்படாததோடு, அரசாங்கமும் அதனைத் தனது கடமையாகக் கொள்வதில் அக்கறையின்றி உள்ளது.

In deed, in a democracy the people can legitimately claim and goverment have a duty to ensure that the administration is conducted in a language which the people can understand. [78]

1959 செப்டம்பரில் எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் குழப்பமான



நிலைதோன்றியது. 1960இல் நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலும் மொழி, இன அடிப்படையிலான இனவாத சக்திகள் மேலோங்கி நின்றன. 1960 மார்ச்சில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் U. N. P. 50 பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றிய நிலைமையானது அவர்கள் தொடர்ந்தும் அதிகாரத்திலிருப்பதற்கு எந்தக் கட்சியினதும் ஆதரவு பெறாத நிலையில், தமிழரசுக்கட்சியுடன் அரசியல் பேரம் பேசலுக்கு வழிவகுத்தது. தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பாகக் கருதிய தமிழரசுக் கட்சியினர் தமிழ்மொழி, பிரதேசம், குடியுரிமை மற்றும் பல்வேறு உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சில கோரிக்கைகளை முன் வைத்து ஒத்துழைப்பு நல்கத் தயாராக இருந்தனர். இவை 1957இல் செய்யப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தை அனுசரித்தவையாகக் காணப்பட்டன. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய மொழியாகத் தமிழை அங்கீகரித்தல், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் தமிழை ஏற்றுக் கொள்ளல், குடியேற்றம் மற்றும் அதிகாரங்கள் உள்ள பிரதேச சபைகளை அமைத்தல், இந்தியத் தமிழர்களின் நன்மை கருதிக் குடியுரிமைச் சட்டங்களை தாராளமயப்படுத்தல் என்பனவற்றைக் கொண்டனவாகத் தமிழரசுக் கட்சியின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அமைந்தன.[79] ஆனால் U. N. P. யினர் இக்கோரிக்கைகளைப் பண்டா – செல்வா ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளை நெருங்கிய வகையிலே ஒத்திருப்பதாகக் கூறி மறுத்து விட்டனர். பின்னர் S. L. F. P. யுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் விளைவாகப் பண்டா – செல்வா ஒப்பந்த அடிப்படையில் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் திருமதி பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட S. L. F. P. யினால் தீர்த்து வைக்கப்படும் என்ற உறுதிமொழி கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் டட்லி சேனநாயக்காவின் சிறுபான்மை அரசாங்கம் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் தோற்கடிக்கப்பட்டது.[80] இதன் பின்னணியிலேதான் 1960 ஜூலைத் தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிர தமிழ் இன எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி, மக்களிடையே இனவாத உணர்வைத் தூண்டி விடுவதன் மூலம் வெற்றி பெற முயற்சித்தது. 1960 ஆம் ஆண்டில் U. N. P. யினரின் தமிழ் எதிர்ப்பு பேரினவாதம் (Anti - Tamil Chauvinism) உச்சநிலையை அடைந்தது. 1956 பொதுத் தேர்தலிலே U. N. P. யினர் தம் கட்சியில் உள்ள தமிழ் அங்கத்தவருடன் சிங்களம் மட்டும் கொள்கையை அமுல்படுத்த மாட்டோம் என்று இரகசிய உடன்படிக்கை செய்தனர் என்ற S. L. F. P. (M. E. P.) யின் குற்றச்சாட்டு 1960 ஜூலைத் தேர்தலிலே

மாறி S. L . F. P. யுடன் F. P. யினர் சிங்கள மக்களின் நலன்களுக்கு மாறாக இரகசிய உடன்படிக்கை செய்தனர் என்று U. N. P யினர் கூறித் தமிழ் எதிர்ப்பு வாதத்தை வளர்த்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற முயன்றனர்.[81] இவ்வாறு இனவாதத்தைப் பயன்படுத்தி இலங்கைத் தமிழ் பேசும் மக்களையும், அவர் தம் பிரதான கட்சியாகிய தமிழரசுக் கட்சியையும் இரண்டு பிரதான சிங்களக்கட்சிகளும் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியிலே பயன்படுத்திக் கொண்டன.

*1960* ஜூலை பொதுத் தேர்தலில் S. L. F. P. பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதன் மூலம் அதன் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமரானார். ஆட்சியமைப்பதற்கு F. P. யின் ஆதரவு தேவைப்படாத நிலையில் இத்தேர்தலின் போதும், அதற்கு முன்னும் அக்கட்சியுடன் காணப்பட்டிருந்த வாக்குறுதிகளைப் புறக்கணித்துச் சிங்களம் மட்டும் அரசகருமமொழிக் கொள்கையை மிகவும் கடுமையாகப் பின்பற்ற முற்பட்டார். சிங்களம் மட்டும் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருந்த 1961 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இலங்கை முழுவதிலும் நிர்வாக மொழியாகச் சிங்களம் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்பதனைக் கடுமையாக அமுல்படுத்த முற்பட்டார்.[82] இதனைத் தொடர்ந்து F. P. அரசாங்கத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, தனது மொழியுரிமையுட்பட்ட கோரிக்கைகளை பெறும் முயற்சியாக அகிம்சை முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

*1960* தேர்தலில் S. L. F. P. சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டத்தைத் தொடர்ந்தும் பூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு மக்கள் அங்கீகாரத்தை வேண்டி நின்றது. *1956* பொதுத் தேர்தலைப் போலவே இத்தேர்தலிலும் மொழியே பிரதான விடயமாக ஆக்கப்பட்டது. கணவரின் கொள்கைகளைத் தொடர்ந்து அமுல் செய்வதற்குத் தங்களைத் தொடர்ந்து தெரிவு செய்யுமாறு வேண்டிய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தமிழ்மொழி பொறுத்தும் கணவரின் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றுவார் என்று தமிழ் பேசும் மக்களால் எதிர்பார்க்கப்பட்டது. அவர்களது தேர்தல் அறிக்கையிலும் தமிழ் பேசும் மக்களுக்குத் தீங்கிழையாத வகையில் சிங்கள அரசகரும மொழிச்சட்டம் அமுல் செய்யப்படுமென்றும், எஸ். டபிள்யூ. ஆர். டி., பண்டாரநாயக்காவின் தமிழ்மொழி (proposal for the use of Tamil might be revived) உபயோகம் சரத்துக்கள் திருத்திய முறையிலே நடைமுறைப்படுத்தப்படும் என்று குறிப்பிடப்



பட்டிருந்தது.[83] ஆனால் இவற்றுக்கு மாறாகத் தனது ஆட்சியின் ஆரம்பத்திலேயே நீதிமன்றங்களில் சிங்கள மொழியைப் பயன்படுத்துவதற்கான நீதிமன்ற மொழிச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது.[84] தமிழ்மொழி பேசும் பிரதேசங்களான வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உட்படச் சகல தரத்து நீதிமன்றங்களிலும் சிங்களத்தைத் திணிக்கும் இச்சட்டம் ஆங்கிலத்திற்குப் பதிலாக என்று கொண்டு வரப்பட்டாலும், தமிழ்பேசும் மக்களின் மொழியுரிமையைப் பாதித்த ஒன்றாகவே அமைந்தது. நாட்டில் மீண்டுமொரு முறையாக மொழி, இன உணர்வைக் கிளப்பிய இச்சட்டத்திற்கு எதிராக F. P. யினால் *1961* ஜனவரி *2* இல் ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுத் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புணர்வு காட்டப்பட்டது. தொடர்ந்து அகிம்சை வழியிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தமிழரசுக் கட்சி ஆரம்பித்தது.

*1961* பெப்ரவரி *20* ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய இடங்களுக்கும் பரவி அவ்வவ் மாவட்ட அரசாங்கக் காரியாலயங்கள் இயங்க முடியாத நிலைக்குக் கொண்டு வந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்திய இயக்கமாகவும், அவர்கள் மொழியுரிமையைப் பெறுவதற்கும், அவர்கள் பொறுத்து அரசாங்கம் மேற்கொண்டு வரும் பாரபட்சமான கொள்கைகளைக் கண்டிக்கும் இயக்கமாகவும் இது அமைந்தது. இப் போராட்டம் குறித்துத் தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"that all the Tamil speaking people of the country were united in the defence of their language rights and in their opposition to the Government's discriminatory policies."[85]

இரண்டாவது மாதத்தையும் எட்டிய நிலையில், அரசாங்கத்தின் நீதி அமைச்சருக்கும், தமிழரசுத் தலைவர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த கட்டத்தில், அவசரகால நிலைமை நாட்டில் பிரகடனப் படுத்தப்பட்டு, வடக்குக் கிழக்கிற்கு இராணுவம் அனுப்பப்பட்டு, தமிழ்த் தலைவர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டு அகிம்சை முறையிலான போராட்டம் பலாத்காரமான முறையிலே ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினால் அடக்கப்பட்டது.

அவசரகால நிலைமையைப் பிறப்பித்து நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆற்றிய

உரையின் சில பகுதிகளை இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமான தாகும்.

"Mr. Chelvanayagam's demands had been "so unreasonable that they could not be ever considered by the government and asserted that, "the Federal party by its action made it abundantly clear that their real objective is to establish a Separate State".

"room for grave concern as to whether certain political organizations in the North and East are not in fact endeavouring to paralyse the administration in these places with a view to establishing a separate state."[86]

பின்னால் வலுப்பெற்ற தனிநாட்டுக் கோரிக்கைக்கான காரணங்களுள் அரசாங்கங்களின் திட்டமிட்ட கொள்கைகள் மட்டுமல்ல அவர்களது பேச்சுக்களும் தனி நாட்டுக் கோரிக்கை வலுப் பெறுவதற்குக் காலாக இருந்தன என்பதை இத்தகைய பேச்சுக்கள் மூலம் கண்டு கொள்ளலாம். மேலும் பிரதமர் "the Federal leaders have challenged the lawfully established government of this country with a view to establishing a separate state"[87]

என்று குறிப்பிட்டார். அடிக்கடி, தமிழ்த் தலைவர்கள் தங்கள் கோரிக்கை தனிநாட்டுக் கோரிக்கை அல்ல என்று மறுப்புத் தெரிவித்திருந்தனர். சிறுபான்மையோர் பிரச்சினைகளை நன்கு விளங்கித் தீர்த்துக் கொள்வதற்குப் பதிலாக இத்தகைய கூற்றுக்களைக் கூறுவதன் மூலம் பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே தமிழ் பேசும் மக்களுக்கெதிரான இன உணர்வினையும், பகைமையுணர்வினையும் இத் தலைவர்களினால் வளர்க்க முடிந்தது.

தமிழ் பேசும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தம் மொழியுரிமை தொடர்பான எந்த நடவடிக்கையும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காஅரசினால் மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் கணவரால் இயற்றப்பட்ட 1958 ஆம் ஆண்டு தமிழ்மொழி விஷேட உபயோகம் சட்டத்தினை அமுல்படுத்துவதற்கான எந்த விதிகளும் இயற்றப்படாது அச்சட்டம் புறக்கணிக்கப்பட்டது. 1962 இன் சிம்மாசனப் பிரசங்கத்தின் போது பொது நிர்வாகத் துறையிலும், நீதி மன்றுகளிலும் சிங்கள அரசகரும மொழியை அமுல்படுத்துவதற்கான தீவிரமான கொள்கை அமுல்படுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டதுடன், 1958இன்



தமிழ் மொழி விஷேட உபயோகம் பற்றிய சட்டம் பற்றிக் குறிப்பிடப்படாதும் விடப்பட்டது.

"A vigorous policy of implementation of the official languag act will be adopted in the Public Administration and in the court of law."[88]

அதிகார வர்க்கத்திடையே சிங்கள மொழித் தேர்ச்சி பதவி உயர்வுக்கான மூலமாக அமுல் செய்யப்பட்டது. ஊக்கத் தொகை, வருடாந்த சம்பள உயர்வு, பதவி உயர்வு இவற்றுடன் அரசகரும மொழித் தேர்ச்சி பிணைக்கப்பட்டது. சிங்கள மொழியை கற்பதற்காக அரசாங்க அலுவலர் இடையே ஊக்குவிப்பு அளிக்கப்பட்டது. சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு முன்னேற்றத்தை வழங்கிய இச் செயல் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைப் பெருமளவு பாதித்தது. அவர்களது பொருளாதார முன்னேற்றம் பதவி உயர்வு சிங்கள மொழி காரணமாகத் தடை செய்யப்பட்டது. 1956 இன் பின் சேவையில் அமர்த்தப்பட்ட அரசாங்க அலுவலர் மூன்று வருடத்துள் சிங்களத் தேர்ச்சியினைப் பெறாது விடத்து பதவியிழக்க வேண்டியிருந்தது.[89] 1964 இல் இதுவரை சிங்களத் தேர்ச்சித் தகுதித் தேர்வில் சித்தியடையத் தவறிய அரசாங்க ஊழியர் கட்டாய ஓய்வில் அனுப்புவதற்கான ஒழுங்குபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்ப் பிரதேசங்களின் நிர்வாகத்தில் சிங்களத்தை பயன்படுத்துவதற்கான ஒழுங்குபாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன.

1960 இன் பின்பான S. L. F. P. யின் ஆட்சியானது அவர்கள் பாராளுமன்றத்தில் பெற்றிருந்த பெரும்பான்மைப் பலத்தை அடிப்படையாகக் கொண்டு பெரும்பான்மையினரின் எதேச்சாதிகாரத் தன்மையினதாக அமைந்தது. அதாவது ஏனைய சிறுபான்மையினங்களின் நலன்களோ, அவர்களது குறைபாடுகளோ இவ்வாட்சியில் கவனிக்கப்படாமல் இருந்தன. முழுக்க முழுக்கப் பெரும்பான்மைச் சிங்கள, பௌத்த மக்களின் நலன் பேணிய ஆட்சியாகவே காணப்பட்டது. இதனையே திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

We have removed the disabilities placed on ,the majority of our people by the foreign ruler. The language and the religion of the majority .. have been developed and their rightful place ensured. While respecting the rights of minorities, the Government, mindful

of its obligations to the majority of the people, has restored their lost rights.[90]

இவ்வகையில் இலங்கையில் சிங்கள, தமிழ் உறவுகள் பொறுத்து மேலும் பிளவினை ஏற்படுத்திய ஆட்சியாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் காலப்பகுதி காணப்படுகின்றது.

1964 யூலில் S. L. F. P. யின் பாராளுமன்றப் பெரும்பான்மை பலம் குறைவுற்றதைத் தொடர்ந்து அது L. S. S. P. யுடன் சேர்ந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைத்துக் கொண்டது. பெருமளவிற்கு சமஜமாஜிகளின் விருப்பிற்கிணங்க மொழிக் கொள்கை பொறுத்து ஓர் இணக்கம் காணப்பட்டது.[91] அதாவது சிங்கள, தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இலங்கை அரசகருமமொழிச் சட்டத்தையும், தமிழ்மொழி (விசேஷட உபயோகம்) சட்டத்தையும் அமுல் படுத்துவதாக அப்பொழுது திட்டம் காணப்பட்டது.

ஆனால் எந்த நடவடிக்கையும் இது தொடர்பாக ஆரம்பிப்பதற்கு முன்னர் 1964 டிசம்பரில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் S. L. F. P., L. S. S. P. கூட்டரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது.

இலங்கையில் அரசியல் வளர்ச்சி பொறுத்து 1965 இன் பொதுத் தேர்தல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. 1956 இலிருந்து தொடர்ச்சியாக இரு தடவை ஆட்சியைக் கைப்பற்றிய S. L. F. P. யைத் தோற்கடித்தமை, பாராளுமன்ற மட்டத்தில் வலுமிக்க அரசியல் பங்களிப்பை இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு வழங்கியமை பொறுத்தும் முக்கியத்துவம் பெறுகின்றது. 1956 களில் இருந்து இலங்கையின் பிரதான அரசியலோட்டத்தில் பங்கு பெற முடியாமல் இருந்த தமிழரசுக்கட்சியும், தமிழ்க் காங்கிரசும் முதன் முறையாகப் பங்கு பெற வாய்ப்பளித்த தேர்தலாகவும் இது அமைந்தது. பிரதான சிங்கள அரசியல் கட்சி ஒன்றுடன் சேர்ந்து பாராளுமன்றத்தில் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும், 1956 இன் பின் முதன் முதலாக மந்திரிசபையில் தமிழர் ஒருவர் இடம்பெறுவதற்கு வாய்ப்பையும் அளித்த தேர்தலாகவும் 1965 இன் பொதுத் தேர்தல் காணப்படுகின்றது. மீண்டும் மொழி அடிப்படையிலான இனவாதம் வளர்ச்சி அடைவதற்கு ஒரு வகையில் பங்களிப்பைச் செய்த தேர்தலாகவும் இது அமைகின்றது.

1965 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலானது இது வரை அரசாங்கத்தை அமைத்திருந்த S. L. F.P. க்கு 41 ஆசனங்களையும் எதிர்க்கட்சியாக இருந்த U. N. P. யிக்கு 66 ஆசனங்களையும் அதனை ஆதரித்த T. C. க்கு 3 ஆசனங்களையும், F. Pக்கு 14 ஆசனங்களையும் வழங்கியது.[92] S. L. F. P. கூட்டணி 55 ஆசனங்களைப் பெற்றிருந்தது. இந்நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கேற்ற தனிப் பெரும்பான்மையை எந்தவோர் சிங்களக் கட்சியும் பெறாத நிலையில் F. P. யுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தை அமைக்கும் நோக்கம் இரு கட்சிகளுக்குமே காணப்பட்டது. ஆனால் அரசாங்கத்தைத் தான் அமைக்க விரும்பிய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தமொன்றினைச் செய்து கொண்டார். இதன் மூலம் தமிழரசுக் கட்சியினர் ஆதரவு பெற்று அவர்களையும் அங்கமாகக் கொண்ட தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுகின்றது. 1960 இல் S. L. F. P. யால் ஏமாற்றப்பட்டமையும், தமிழ் மக்கள் நலன்களைப் புறக்கணித்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நடந்து கொண்ட விதமும் F. P. யின் ஆதரவைநாடிய U. N. P. யுடன் ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கு வழி வகுத்தது.[93]



டட்லி-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்படும் இவ் ஒப்பந்தமானது தமிழ் பேசும் மக்களுக்கான பல்வேறு உரிமைகளையும் வழங்குதல் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அதாவது தமிழ் மொழிக்கான நியாயமான அளவு உபயோகம் (the reasonable use of Tamil) அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்ட மாவட்டசபைகளின் உருவாக்கம், குறிப்பிட்ட காலத்துள் சிங்களத் தேர்ச்சி அடையாத அரச தமிழ் ஊழியருக்குக் கால அவகாசம் அளித்தல் போன்ற சில அடிப்படை உரிமைகளை அளிப்பதாக அமைந்தது. தேசிய அரசாங்கம் இன, மத, சமூக வேறுபாடின்றிச் சகலருக்கும் நீதியின் அடிப்படையிலும், மனித உரிமையின் அடிப்படையிலும் செயலாற்றும் எனவும், பௌத்த மதத்திற்குரிய ஸ்தானம் அளிக்கும் அதே வேளை ஏனைய மக்களின் வழிபாட்டுச் சுதந்திரங்கள் மதிக்கப்படுமென்றும், சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையில் உத்தியோக மொழிச் சட்டத்தின் கீழ் தேவையான ஒழுங்கு விதிகள் இயற்றப்படும் எனவும் தனது சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவித்தது.[95]

தமிழ்பேசும் மக்கள் எதிர் நோக்கிய மொழிப் பிரச்சினையே தேசிய அரசாங்கத்தின் கவனத்திற்குத் தமிழரசுக்கட்சியினரால் முதலில் கொணரப்பட்டது. சிங்கள அரசகருமமொழிச் சட்டத்தின் கீழ் தமிழ் மொழியின் அந்தஸ்துக் குறைக்கப்பட்டுத் தமிழ் பேசும் மக்கள்

இரண்டாம் தரக் குடிமக்களாக்கப்பட்டிருந்தனர். 1964 இல் இச் சட்டம் கொண்டுவரப்பட்டு 8 வருடங்களின் பின் F. P. அங்கத்தவர் ஒருவர் இச் சட்டம் பற்றிக் குறிப்பிட்டது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

"The Sinhala only policy of this Government means not merely the elimination of the Tamil language from its due place in the public life of this country but the shutting out of the Tamil-speaking people of this country from the political, economic and cultural life of Ceylon"[96]

1965 இன் U. N. P. யின் தேர்தல் அறிக்கையிலே அக் கட்சி இப் பிரச்சினைக்கு ஏற்ற தீர்வொன்றினைக் காண்பது தனது நோக்கம் என்று குறிப்பிட்டிருந்தது.

"We shall summon a round table conference to discuss ways and means of unifying the nation within the frame work of Sinhala as the official language of the state. As Sinhalese is spoken by the largest number of the permanent citizens, it is natural that this language should be adopted as the unifying language. Provision will be made for the use of Tamil so that no harm is caused to any permanent citizen who does not know the official language."[97] என்பதாக இருந்தது. டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழ் நிர்வாக மொழியாகவும், பதிவேட்டு மொழியாகவும் அங்கீகரிக்கப்படுமென்றும், இலங்கை எங்கணும் தமிழ் பேசும் மகன் ஒருவன் தமிழில் கருமமாற்றும் உரிமை இருக்க வேண்டும் என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்டது.[98] தேசிய அரசாங்கம் இதன் பிரகாரம் 1966 ஜனவரி 8 ஆம் திகதி தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகள் ஒன்றினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அம் மாதம் 11ஆம் திகதி அங்கீகரித்தது.[99] எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட 1958 இன் தமிழ்மொழி சட்டத்தின் விதிகளாகவே இவை காணப்பட்டன. உண்மையில் எட்டு வருடங்கள் கழித்து அது இயங்குவதற்கான சட்ட விதிகள் அல்லது ஏற்பாடுகள் இப்போது தான் கொண்டுவரப்பட்டன. அதன் கீழ் பின்வரும் உரிமைகள் தமிழ்மொழிக்கு வழங்கப்பட்டன.

The Tamil Language was to be used in the Northern and Eastern Provinces "for the transaction of all Government and public



business and the maintenance of Public records", for communication between Northern and Eastern Provinces, local government bodies and Central Government and throughout the island for correspondence between government officials and private individuals who were educated in Tamil. This apart, all statutes, Proclamations, notifications, forms, and other publications issued or used by public bodies were to be translated and published in Tamil as well as Sinhalese. The use of Tamil for this specified purposes was to be without prejudice to the operation of the official language Act No. 33 of 1956, which declared the Sinhala language to be the one official language of Ceylon.[100]

இவ்விதிகளின் படி வடக்குக், கிழக்கு மாகாணங்களில் பதிவேடுகள் உட்பட எல்லா நிர்வாக வேலைகளுக்கும் தமிழும் உபயோகிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது. நாட்டின் எப்பாகத்திலும் அரசாங்க நிறுவனங்கள், கூட்டுத் தாபனங்கள் முதலியவற்றோடும், தமிழில் கடிதத் தொடர்பு கொள்ள, தமிழில் பதில்பெறத் தமிழில் கல்வி கற்க எவருக்கும் உரிமை உண்டென விதிக்கப்பட்டதோடு அதன் பொருட்டு அரசாங்கப் பிரசுரங்கள், வர்த்தமானிகள், பெயர்ப் பலகைகள், படிவங்கள், யாவும் தமிழில் அச்சிடப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. அன்றியும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சட்ட நடவடிக்கைகள் தமிழில் நடாத்தப்பட்டுத் தமிழிலேயே பதியப்படுவதற்கு நீதிமன்ற மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றும் பிரதமர் டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொண்டார்.[101]

மேலும் இத் தேர்தலுக்கு முன்பாக S.L.F.P. அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட சிங்கள மொழித் தேர்ச்சியின்மையால் தமிழ் அரச ஊழியர் கட்டாய ஓய்வில் அனுப்பப்படும் முறை வாபஸ் பெறப்பட்டது. அரசாங்க பதவிகளுக்கு அலுவலர்களை சேர்ப்பதற்கு நடாத்தப்படும் பொதுச்சேவைப் பரீட்சைகள் சிங்களத்திலும், தமிழிலும் நடாத்துவதற்கான உடன்பாடு ஏற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. தமிழ் மொழி மூலம் பரீட்சையில் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் நியமனம் கிடைத்ததிலிருந்து மூன்று வருடங்களுக்குள் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென்றும், சிங்கள மொழி மூலம் நியமனம் செய்யப்பட்ட அரச ஊழியர் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுவதற்கு தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தி பெற வேண்டும் என்றும் உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. இவ்வகையில் தமிழரசுக் கட்சி

னர் தங்கள் குறைந்த பட்சக் கோரிக்கையாக வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தமிழர் இலங்கை முழுவதும் அரசாங்கத்துடன் தமிழ் மொழி மூலம் தொடர்பு கொள்ளவும், பொதுச் சேவைப் பதவிகளுக்கு அம் மொழி மூலம் போட்டியிடவும் வாய்ப்பு இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டனர். இவ்வகையில் இலங்கையின் அரசகரும மொழி சிங்களம் மட்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொள்ளவும் தயாராக இருந்தனர். அத்துடன் U. N. P. மந்திரி சபையில் உள்நாட்டமைச்சராகப் பதவி வகித்த எம். திருச்செல்வம் சிங்கள மொழி நாட்டின் ஒரே அரசகருமமொழி என்ற சிங்கள மக்களின் விருப்பமும், தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்களின் நிர்வாக மொழியாகத் தமிழ் இருக்கவேண்டுமென்ற தமிழர்களின் விருப்பமும் முரண்பாடுடையவை அல்ல என்று குறிப்பிட்டார். எதிர்க்கட்சியினருக்கு சிங்கள மொழி அரசகரும சட்டத்திற்கு மாறாகப் போவது தமது அரசாங்கத்தின் நோக்கு அல்ல என்றும் உறுதி கூறியிருந்தார்.

Our government has no intention to undo the official language act at all"[102]

இது குறித்து அமைச்சரவையில் இருந்த ஜே. ஆர், ஜெயவர்த்தனா முதன் முறையாக F. P. யினர் சிங்களம் மட்டும் கொள்கையையும், இலங்கை முழுவதும் அரசகரும மொழியாகச் சிங்களம் இருப்பதனையும் ஏற்றுக் கொண்டனர் என்று குறிப்பிட்டார்.[103] எப்படியிருந்த போதும் F. P. யினர் புத்திசாலித்தனமான வகையில் இவ்வுடன்பாட்டைத் தற்காலிகத் தீர்வாக ஏற்றுக் கொண்டதாகவும், தங்கள் இறுதி நோக்கு சமஷ்டி முறையும், மொழிகளுக்குச் சமஅந்தஸ்து பெறுவதும் என்று குறிப்பிட்டிருந்தனர்.[104]

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை ஓரளவு தீர்க்கும் நோக்குடன் U. N. P. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் S. L. F. P. தலைமையிலான கூட்டணி எதிர்க்கட்சியினால் கடுமையான கண்டனத்திற்கு இலக்காகின. இலங்கையின் அரசியல் வளர்ச்சிப் போக்கில் மீண்டுமொரு முறையாகத் தீவிர இனவாத உணர்வுகள் எழுச்சி அடைவதனைக் கண்டுகொள்ள முடிகின்றது. 1956, 1960 பொதுத் தேர்தல் காலங்களில் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்குடன் இனவாத உணர்வுகள் அரசியல் கட்சிகளினால் தூண்டிவிடப்பட்டிருந்தன. ஆனால் 1965 பொதுத்தேர்தல் காலத்தில் ஒப்பீட்டடிப்படையில் முன்னைய தேர்தல் காலங்களிலும் பார்க்க



இனவாதமானது குறைந்தளவு முக்கியத்துவத்தையே பெற்றிருந்தது. ஆனால் தேர்தலின் பின் பிரதான சிங்கள அரசியல் கட்சியொன்று பிரதான தமிழ் அரசியல் கட்சியொன்றுடன் சேர்ந்து தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைந்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முற்பட்டபொழுது அதனைச் சாட்டாக வைத்துத் தீவிர இனவாத உணர்வை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், அதன் கூட்டுக் கட்சிகளும் கக்குவதைக் காணலாம். இதன் காரணமாக 1965இன் பின்பான இக்காலப்பகுதி முழுவதிலும் அரசியல் அபிவிருத்திகள் பொறுத்து இனவாதமானது பிரதான இடத்தைப் பெற்றுக் கொள்கின்றது. இக் காலப்பகுதியில் பிரதான மாக்ஸிய கட்சிகள் கூடத் தமிழுக்கும், சிங்களத்திற்கும் சமத்துவம் என்ற நிலையிலிருந்து விலகித் தீவிர சிங்கள இனவாதத்துக்குள் அமிழ்ந்து விடுவதனையும் அவதானிக்கலாம்.

தேர்தல் முடிவடைந்ததும், தேசிய அரசாங்கம் மொழிக்கொள்கை தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தன. அரசாங்கம் தமிழ் மொழி தொடர்பாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்வதாக அறிவிப்பதற்கு முன்பாகவே தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பது சிங்கள மக்களின் நலன்களுக்குத் தீங்கு செய்யக் கூடியது என்று எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டனர். அவர்களது வெளியீடுகள் தமிழ்மொழிக்குச் சில சலுகைகளை வழங்குவதனைக் குறிப்பிட்டு அரசாங்கம் தமிழரசுக் கட்சியினரின் நோக்கங்களையும், கொள்கைகளையும் முதன்மைப்படுத்தத் தொடங்கி விட்டதென்றும், சிங்கள மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன எனவும் எதிரான பிரசார யுத்தத்தினை அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொண்டனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றும் அரச அலுவலர் தமிழ் மொழியில் சித்தி பெற வேண்டுமென்று பேச்சுவார்த்தைகளின் போது குறிப்பிட்டவற்றைப் பெரிதுபடுத்தி S.L.F P.யின் வார ஏடான 'சிங்கள' (Sinhale) சிங்கள சமூகத்திற்கு தமிழ்மொழி என்ற தலைப்பில் இனவாத உணர்வினை வளர்ச்சிப்படுத்தலாயிற்று[105] (Sinhale Janatavata Demala Bhasava - Tamil Language for the Sinhala community.)

S. L. F. P. கூட்டணியில் இருந்த L.S.S,P., C. P. இரண்டுமே இதுவரை தாங்கள் பல கஷ்டங்களுக்கும் மத்தியில் கடைப்பிடித்து வந்த இருமொழிக் கொள்கையைக் கைவிட்டுச் சிங்களப் பேரினவாத அலைக்குள் இழுத்துச் செல்லப்படுகின்றன. சிங்களத்தொழிலாள

வர்க்கம் இனவாத உணர்வினால் ஈர்க்கப்பட்டு, அதன் தலைவர்களும் அவ்வழி செல்வது தவிர்க்க முடியாததாகியது. 1965இன் பொதுத் தேர்தல்களில் S. L. F. P. தலைமையிலான கூட்டணியின் தோல்விக்குச் சிறுபான்மை மக்களின் ஆதரவின்மையே காரணம் என்று தேர்தல் முடிவுகளின் கணிப்பீடுகள் காட்டியிருந்தன.[106] இப்பின்னணியில் இரு பிரதான மாக்ஸிய கட்சிகளும் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு இனவாத உணர்வைப் பயன்படுத்தலானார்கள். இந்நிலையை கலாநிதி. குமாரி ஜெயவர்த்தனா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

One of the most critical developments of the 1960's was the spread of chauvinist ideology among the working people led and encouraged by the two main marxist parties of Sri Lanka.[107]

டட்லி – செல்வா ஒப்பந்தத்திற்கெதிராக L. S. S. P. தனது பத்திரிகையில் எழுதியிருந்த 'Tear the Pact' என்ற தலைப்பிலான ஒரு சிறு குறிப்பே அது எந்தளவிற்கு இனவாதத்துள் சரணடைந்து விட்டது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

Patriotic organisations are making rapid preparations to hold a series of meetings throughout the country to mobilise public protest against the Dudley - -Chelvanayagam Pact which betrays the birthright of the Sinhalese.[108]

1966 இன் ஆரம்பத்தில் தமிழ்மொழி உபயோக சட்டவிதிகள் பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்தும் இம் மூன்று கூட்டணிக் கட்சிகளும் அதே இனவாத உணர்வைப் பயன்படுத்தி அறிக்கை விட்டதனைக் காணலாம். அறிக்கையில் அரசகருமமொழிச் சட்டந்தைப் பலவீனப்படுத்துவதுடன், இலங்கை முழுவதும் சிங்களம் அரசகரும மொழியாக வருவதைத் தமிழ் மொழி உபயோக சட்ட விதிகள் தடை செய்கின்றன என்றும் குறிப்பிட்டன. அதற்கும் மேலாக இலங்கையை இரு தனித்துவமான, வேறுபாடான அரச அலகுகளாகப் பிரிக்கும் தமிழரசுக் கட்சியின் அடிப்படை நோக்கினை U. N. P. தலைவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்றும் குறிப்பிட்டன.

The leaders of the U. N. P. have accepted the fundamenta aims of the Tamil Arasu Kadchi (Federal Party) which seeks to divide Ceylon into two separate and distinct state units.[109]



சிங்களம் மட்டும் சட்டம் அமுலாக்கப்பட்டதிலிருந்து ஏறத்தாள 10 வருடங்களின் பின் தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை தொடர்பாகச் சில சலுகைகளைத் தேசிய அரசாங்கம் வழங்கிய போது தங்கள் அரசியல் இலாபம் கருதி, இக்கூட்டணி எதிர்க்கட்சியினர் இனவாத உணர்வினைப் பயன்படுத்தி நாட்டின் பல பாகங்களிலும் எதிர்ப்பு ஊர்வலங்களையும், அரசியல் வேலைநிறுத்தங்களையும் நடத்தினர்.[110] இவர்கள் ஆதரவில் நடாத்தப்பட்ட மேதின ஊர்வலங்களின் போதும் இனவாத உணர்வுகள் தூண்டி விடப்பட்டன.

தேசிய அரசாங்கத்தின் தொடர்ச்சிக்குத் தமிழரசுக்கட்சியின் ஆதரவு மிகவும் அத்தியாவசியமாக இருந்தது. அத்துடன் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த இரண்டாவது பெரிய கட்சியாகவும், தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமைப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திய கட்சியாகவும் அது காணப்பட்டது. இந்த நிலைமைகளை எதிர்க்கட்சியினர் தமக்குச் சாதகமாக, இனவாத அரசியலைக் கொண்டு நடாத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டனர். இவ்வகையில் மொழித்தீர்வு ஒன்று ஏற்படுவதனைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சி எடுத்த நடவடிக்கைகளுக்கு தமிழ் செனட் அங்கத்தவர் ஒருவர் பின்வருமாறு விளக்கம் கொடுக்கின்றார்.

',because they think that the only way in which the Sri Lanka Freedom Party can come back to power is by raising this communal question, by keeping alive the language question, and keeping alive all the political problems of the minorities in this country."[111]

இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் மொழிப் பிரச்சினை உட்பட அரசியல் பிரச்சினைகளை தொடர்ந்தும் வைத்திருப்பதன் மூலமே இனவாதத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றலாம் என்று S. L. F. P. எண்ணுவதனால் தான் மொழிப் பிரச்சினைத் தீர்வுக்கு எதிரான இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்று செனட்டர் குறிப்பிட்டது பொருத்தமானதாகவே இருக்கின்றது.

S. L. F. P. சிங்கள மகா சபையிலிருந்து தோற்றம் பெற்ற காலத்திலிருந்து அது பூரணமாக ஒரு சிங்களக் கட்சியாகவே வளர்ச்சி பெற்றது. சிங்களம் மட்டும் அரசகரும மொழிக் கோரிக்கையின் ஆரம்ப கர்த்தாக்கள் என்ற வகையிலும், பௌத்த மதத்திற்கு அதி முக்கியத்துவம் அளித்த வகையிலும், சிங்கள, பௌத்த மக்களின் நலன்களில்கூடிய அக்கறை கொண்ட கட்சி என்றதோற்றப்பாட்டினைப்

(image) பெற்றிருந்தது. U. N. P. க்கு இத்தகைய தோற்றம் சிங்கள பௌத்த மக்கள் மத்தியிலே இருக்கவில்லை என்றே கூறல் வேண்டும். இப்பின்னணியில் மொழிப் பிரச்சினைக்கான தீர்வு பொறுத்து U. N. P. அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குக் கடும் எதிர்ப்பினை S. L. F. P. யினால் காட்ட முடிந்தது. U. N. P. கட்சியினர் தமிழரசுக் கட்சியினருடன் சேர்ந்து அரசாங்கம் அமைப்பதற்காகச் சிங்கள இனத்தின் நலன்களை அடகு வைக்க முடியாது என்பதாக இவர்களின் வாதம் அமைந்தது.[112]

இத்தகைய கடும் எதிர்ப்பின் காரணமாக டட்லி சேனநாயக்கா தலைமையிலான அரசாங்கம் மொழிப் பிரச்சினை தொடர்பாக டட்லி-செல்வா ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைப் பூரணமாக அமுல் நடத்த முடியாமல் போயிற்று. தமிழ் மொழி உபயோகச் சட்ட விதிகள் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு அங்கீகரிக்கப் பட்டதைத் தவிர அமுல் நடத்துவதற்கான வேறெந்த நடவடிக்கையும் மொழிப் பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்படவில்லை. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் சிங்கள ஊழியர்களுக்குத் தமிழ்த் தேர்ச்சி கோருவது என்பதும் கைவிடப்படலாயிற்று.[113] தமிழ் மொழி உபயோகச் சட்ட விதிகள் நடைமுறைப் படுத்தப்பட்டதாகப் பெயரளவில் சொல்லப்பட்டதே தவிர நடைமுறையில் அமுலாக்கப்படாமல் இருந்தது. அதனால் தமிழ் மொழிக்கான இரண்டாம் தர நிலை எவ்வகையிலும் மாற்றம் பெறாது தொடர்ந்து காணப்பட்டது. அவ்வாறே டட்லி–செல்வா ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட மாவட்ட சபைகள் அமைப்பது என்பதும் மொழித் தீர்வுக்குக் காட்டப்பட்ட கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து 1968 இல் கைவிடப்படுகின்றது. இனவாத அரசியல் நடவடிக்கை காரணமாக மீண்டுமொரு முறையாகச் சிங்கள அரசியல் தலைவர்களினால் தமிழ் அரசியல் தலைவர்கள் ஏமாற்றப்படலானார்கள். மீண்டுமொரு முறையாகத் தீவிர இனவாத அரசியல் நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தடையாகின.

இவ்வாறு இனவாதமானது உச்ச நிலையை அடைந்திருந்த கட்டத்திலே 1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் இடம் பெற்றது. இது வரை எதிரணியில் கூட்டணிகளாக விளங்கிய S. L. F. P., L. S. S. P. C. P. ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து ஐக்கிய முன்னணி (U. F.) என்ற பெயரில் தேர்தலில் போட்டியிட்டன. 1970 மார்ச்சில் நடைபெற்ற இத்தேர்தலில் ஐக்கிய முன்னணி 151 ஆசனங்களில் 116ஐக்



கைப்பற்றி 2/3 பங்குப் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியை அமைத்தது. 1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அதிகாரத்திற்கு வந்த போதே இலங்கை மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப, புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க முற்பட்டிருந்தார். 1965 – 70 களில் தேசிய அரசாங்கம் அமைத்த அரசியல் திட்ட சீர்திருத்தக் குழுவில் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் இலங்கைப் பாராளுமன்றம் இறைமை பெற்றிருக்கவில்லை என்று கூறி S. L. F. P., L. S. S. P, C. P, கூட்டணியினர் பங்கு பற்ற மறுத்து விட்டனர். ஆனால் 1970 பொதுத்தேர்தல் அறிக்கையிலே,

To permit the members of parliament you elect to function simul-tanoously as a uconstituent Assembly to draft, adopt and operate a new constitution[114]

என்று குறிப்பிட்டிருந்தனர், இதன் அடிப்படையில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்றப் பிரதிநிதிகளையும் அரசியல் நிர்ணய சபையாக இயங்குவதற்கு அழைப்பு விடுத்திருந்தார். அதில் இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகள் யாவும் கலந்து கொண்டன. தமிழரசுக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட இலங்கையை ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசியல் திட்டவரைவுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சியும் விலகிக் கொண்டது. அவ்வாறே U. N. P. கொண்டு வந்த பிரேரணைகளும் தோற்கடிக்கப்பட்டன.

1970ஆம் ஆண்டு பதவியேற்ற ஐக்கிய முன்னணி அரசாங்கம் உருவாக்கிய அரசியல் திட்டம்[115] 1972, மே மாதம் 22ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது. இது இலங்கை மக்களின் அபிலாஷைகளுக்குப் பதிலாகப் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்த அரசியல் திட்டமாக அமைந்தது எனலாம். முற்றிலுமாகத் தமிழ் பேசும் மக்களின் நலன்களையும் சிங்கள தமிழ் மக்கள் உறவினையும் புறக்கணித்த ஒன்றாகவே இது காணப்பட்டது. இதனையே பேராசிரியர் கே. எம். டீ. சில்வா பின்வருமாறு பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

the adoption of the new constitution in 1972 was the critical starting point of a new phase in communal antagonism in the Island, especially in regard to relations between the Sinhalese and the Indigenous Tamils.[116]

பெரும்பான்மைச் சிங்கள அரசியல் கட்சிகளான U. N. P. யும் S. L. F. P. யும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு சோல்பரி அரசியல் திட்டத்திலே காணப்பட்ட சில அம்சங்கள் ஓரளவு தடையாகக் காணப்பட்டன. முக்கியமாக பிரித்தானிய முடிக்கு இந்நாட்டின் மீதிருந்த சகல அதிகாரங்கள், உரிமைகள் என்பனவும், நீதித் துறையிலே பிரித்தானியப் பிரிவுக்கவுன் சிலுக்கு முறையீடு செய்யும் முறைமையும், சிறுபான்மையோர் நலன் பொறுத்து வழங்கியிருந்த காப்பீடுகளும் இங்கு குறிப்பிடத்தக்கன.[117] இவையனைத்தும் புதிய குடியரசு அரசியல் திட்டத்தினால் நீக்கப் பட்டன.

இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டாகிய 1948இலிருந்து 1972 வரை நடைமுறையிலிருந்த எந்த அரசியல் திட்டத்திலும் அடிப்படை உரிமைகள் பற்றி விவரிக்கப்படாததுடன் மொழி, மதம் பொறுத்து எந்தப் பிரகடனமும் செய்யப் படாதும் இருந்தது. சோல்பரி அரசியல் திட்டத்தில் 29ஆம் சரத்து 2ஆம் பிரிவு பின்வரும் விடயங்களில் சட்டங்கள் இயற்றப்படக் கூடாது என்று குறிப்பிட்டது.

1. வேறொரு இனத்தையோ மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்கு விதிக்காத சட்டக் கட்டுப்பாட்டினை எந்த ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்கு ஏற்படுத்தும் சட்டங்கள்.

2. வேறு எந்த இனத்தையோ அல்லது மதத்தையோ சேர்ந்த ஆட்களுக்குக் கொடுக்கப்படாத வாய்ப்புக்களையோ, சிறப்புரிமைக ளையோ ஒரு இனத்தையோ அல்லது மதத்தையோ சேர்ந்தவர்க ளுக்கு வழங்கக் கூடிய வகையில் சட்டங்கள் இயற்றக் கூடாது.

1972 இன் புதிய அரசியல் திட்டத்திலே ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் சிறுபான்மையோர் காப்பீடுகள் அகற்றப்பட்டுப் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் மேலாதிக்கம் இம் மக்கள் மீது ஏற்படுத்தப் படலாயிற்று. இவர்களது அங்கத்தவர்கள் இல்லாத அரசியல் நிர்ணயக் குழு இவர்களைக் கட்டுப்படுத்தும் அரசியல் திட்டத்தை உருவாக்கி நடை முறைப்படுத்தலாயிற்று. இனவாத அலைக்குள்ளே சரணாகதியடைந்திருந்த இடதுசாரிக் கட்சிகளான L. S. S. P யும், C. P யும் இப்புதிய அரசியல் திட்டத்தை உருவாக் குவதில் ஒரு முக்கிய இடத்தை வகித்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. இவர்கள் உட்பட S. L. F. P. தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் நடை

நூலகம்



பெற்ற சம்பவங்களை மனத்தில் கொண்டு இப்புதிய அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தியது.

இப்புதிய அரசியல் திட்டத்திலே இலங்கையில் 25 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த சிங்களம் மட்டும் கொள்கைக்கு அரசியல் அமைப்பு ரீதியிலான உயர்ந்த அந்தஸ்துக் கொடுக்கப்பட்டு அதன் தனி முதன்மை நிலைநாட்டப்பட்டது.

இவ்வரசியல் திட்டத்தின் 3 ஆம் அத்தியாயம் கருத்து வேறுபாடு களுக்குரிய மொழி பற்றிக் குறிப்பிடுகின்றது.[118] சிங்களமொழி அரச கரும மொழி, நீதிமன்றமொழி என்ற வகையில் தனி முதன்மையான இடத்தைப் பெற்றுக் கொண்டது. தமிழ்மொழியின் உபயோகம் 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தமிழ்மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டத்துக்கிணங்க இருக்க வேண்டுமென்று 8 ஆம் சரத்தின் 1 ஆம் உபபிரிவு கூறுகின்றது. ஆனால் 8 வது சரத்தின் 2 ஆம் உபபிரிவு 28 ஆம் இலக்க தமிழ்மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் ஆக்கப் பட்டு நடைமுறையில் உள்ள விதிகள் அரசியல் திட்டத்தின் ஏற்பாடாக எவ்வகையிலும் பொருள் கொள்ளக் கூடாது என்று கூறுகின்றது.[119] இவ்வகையில் முன்னைய ஆட்சியில் தாம் தீவிரமாக எதிர்த்த 1966 ஆம் ஆண்டின் தமிழ்மொழி உபயோகச் சட்ட விதிகளைச் செல்லாத தாக்கியது. அதே சமயம் ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1958 ஆம் ஆண்டின் தமிழ்மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டத்தினை அமுல் படுத்துவதற்கான சரத்துக்களை இயற்றாதிருந்தது. இவ்வரசியல் திட்டத்தின் 9 வது சரத்து 1 ஆம் பிரிவு சட்டங்கள் யாவும் சிங்களத்தில் ஆக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட 2 ஆம் உபபிரிவு அவ்வாறு இயற்றப்படும் ஒவ்வொரு சட்டத்தினதும் தமிழ் மொழிபெயர்ப்பு இருந்திருத்தல் வேண்டும் என்கிறது. ஆனால் சட்டத் தேவைகளுக்கான பெறுமானத்தை (Valid) சிங்களமொழிமூலசட்டமே பெறும் என்றும் கூறப்பட்டது.

1972 இன் அரசியல் திட்டத்தின் 3 ஆம் அத்தியாயம் 11 ஆம் சரத்து நீதி மன்றங்களின் மொழி பற்றிக் கூறுகின்றது. இலங்கை முழுவதும் நீதிமன்றங்கள், நியாயசபைகளினதும் மொழி சிங்கள மாதல் வேண்டும் என்றும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேறு வகையில் ஒழுங்கு செய்யலாம் என்றும் குறிப்பிடுகின்றது. இச்சரத்தின் 3 ஆம் உபபிரிவின் ஒரு பகுதி அவர்களது வழக்குரைகள், விண்ணப் பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பவற்றைத் தமிழில் சமர்ப்பிக் கலாம் என்பதுடன் அந்நடவடிக்கைகளில் தமிழிலும் பங்கு கொள்ள

லாம் என்றும், அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிங்களமொழி பெயர்ப்பு ஒன்று அதன் பதிவேடுகளின் பொருட்டுத் தயாரிக்கப்படச் செய்தல் வேண்டும் என்கிறது. இதிலிருந்து வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் தமிழ் மக்கள் தமிழில் தமது வழக்குகளை எடுத்துரைக்க முடியாதென்பதும் தெளிவாகியது. இந்நிலையை பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் பின்வருமாறு வர்ணித்துள்ளார்.

They left no room for doubt that the Tamil language would have a distinctly inferior position in the country's administration and legal set up.[120]

ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1958 ஆண்டின் தமிழ்மொழி விஷேட ஏற்பாடு சட்டத்திற்கான விதிகளை இயற்றாமலிருந்ததுடன், இச்சட்டத்திற்குச் சிங்களமொழிக்கு வழங்கியதைப் போன்ற அரசியல் திட்டரீதியான அந்தஸ்தை வழங்காதும் இருந்தது. இவ்வகையில் தமிழ் பேசும் மக்களின் நியாயமான மொழியுரிமைகளைக் கூட வழங்காதிருந்தமை தமிழ் பேசும் மக்களின் இரண்டாந்தர நிலையை எடுத்துக் காட்டியது. இப்புதிய அரசியல் திட்டமானது அரசகருமமொழி, சட்டவாக்கமொழி, நீதிமன்றமொழி என்பவற்றில் தமிழுக்கு உரிய இடத்தை அளிக்காததுடன், அவர்கள் மீது பெரும்பான்மை மக்களால் வல்லந்தமாகத் திணிக்கப்பட்டதாகவும் காணப்பட்டது. இதைத் தொடர்ந்தே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டமானது வேறு திசையிலே செல்ல வேண்டியதாயிற்று.

1977 ஜூலையில் நடந்த பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1978 பெப்ரவரியில் புதியதொரு அரசியல் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.[121] இலங்கைக்குப் புதிதான பல அம்சங்களைக் கொண்டிருந்த இலங்கை ஜனநாயக சோஸலி குடியரசின் அரசியல் திட்டம் மொழி பொறுத்தும் சில மாற்றங்களைச் செய்தது. இந்த அரசியல் திட்டத்தின் 18 வது சரத்து இலங்கையின் அரச கரும மொழி சிங்கள மொழியாதல் வேண்டும் என்று குறிப்பிடுகிறது. அதே சமயம் 19 வது சரத்து இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும், தமிழும் எனக் குறிப்பிடுகின்றது. இந்த சரத்தின் மூலம் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுள்ள தேசிய அந்தஸ்து மிகவும் சிறப்பானது என்று அரசாங்கத் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டாலும் இன்று வரை நடைமுறையில் பிரயோசனம் அற்றதாகவே அது காணப்படுகின்றது.



ஆனால் இத்தகைய அந்தஸ்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா 1957 இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா–செல்வா ஒப்பந்தத்திலே ஏற்றுக்கொண்டிருந்தமை கவனிக்கத்தக்கது.

அரசியல் திட்டத்தின் 21 ஆம் சரத்து 1 ஆம் பிரிவு ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையவர் என்கிறது. இது ஒரு மாணவன் தன் தாய் மொழியில் கல்வி பெறும் உரிமைக்குப் பாதகமாக அமையலாம் என்று வாதிடப்பட்டது. குறிப்பாகத் தமிழில் கல்வி கற்பதற்குப் போதியவசதிகள் அற்றிருக்கும். பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மாணவர் வேறுமொழிகளில் கற்கும் நிலை ஏற்படலாம் என்று எடுத்துக் காட்டப்பட்டது. அரசியல் திட்டத்தின் 22 ஆம் சரத்தின் 5 ஆம் பிரிவு பகிரங்க சேவை, நீதிச்சேவை, உள்ளூராட்சிச்சேவை என்பவற்றுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சையில் தேசிய மொழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் பரீட்சிக்கப்பட ஒருவர் உரித்துடையவர் என்று குறிப்பிட்டாலும், அத்தகையோர் அவசியமான போது அரசகரும மொழியில் தேர்ச்சியுடையவராதல் வேண்டும் எனக் குறிப்பிடுகிறது. இச் சரத்து மறைமுகமாகத் தமிழ் மொழி மூலம் பரீட்சை எழுதி மேற்குறிப்பிட்ட சேவைகளில் நுழைவோர் அரசகரும மொழியான சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பதையே குறிப்பதாகக் கருதப்பட்டது.

இலங்கை முழுவதிலும் நிர்வாகமொழி, நீதிமன்றமொழி போன்ற அம்சங்களிலும் அரசகரும மொழியான சிங்கள மொழியே பயன்படுத்தப்படும் என்று அரசியல் திட்டம் குறிப்பிடுகின்றது. இத்தகைய ஒழுங்குபாடுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கூடத் தமிழ் மொழி இரண்டாவது இடத்தையே வகிக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது எனலாம். மொழி பற்றிய இந்த ஒழுங்கு பாடுகளில் பெரும்பாலான சரத்துக்கள் 1958 ஆம் ஆண்டின் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திலும், 1966 ஆம் ஆண்டின் தமிழ்மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதிகளிலும் இடம் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் 1978 இன் குடியரசு அரசியல் திட்டமும் மொழியுரிமை பொறுத்துத் தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றத் தவறியதாகவே காணப்பட்டது.

1956 ஆம் ஆண்டிலே சிங்களமொழி அரசகருமமொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல், பொரு

ளாதார, சமூக வாழ்க்கையிலே மொழிப் பிரச்சினையானது பெரும் பாதிப்பினை ஏற்படுத்தலாயிற்று. பெரும்பான்மைச் சிங்கள மக்களும், அவர்கள் அரசியல் தலைவர்களும் தம் அரசியல், பொருளாதார, சமூக நலன்களை முன்னேற்றுவதற்கான ஒரு வழியாக இதனைக் கொள்ள, சிறுபான்மைத் தமிழ் பேசும் மக்களோ, இந்நாட்டின் அரசியல், பொருளாதாரத்துறைகளில் தங்கள் நலன்கள் பாரதூரமான வகையிலே பாதிக்கப்படுவதற்கான ஒரு நடவடிக்கை எனக் கருதினர். சிங்களப் பொதுமக்களிலும் பார்க்க அவர்கள் அரசியல் தலைவர்கள் மொழிப் பிரச்சினையைத் தாங்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இலகுவான வழியாக மாற்றிக் கொண்டார்கள். இதனால் சிங்களப் பொது மக்களிடையே இனவாத உணர்வுகள் தூண்டி விடப்பட்டதோடு, 'இந்நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகத் துறைகளில் சிறுபான்மை மக்களுக்கு உரிய'இடத்தை வழங்குவதற்கு மறுப்பும் தெரிவிக்கப்பட்டது.

1956 இன் பொதுத் தேர்தலிலிருந்து நடைபெற்ற அனேகமான பொதுத் தேர்தல்களில், சிங்கள அரசியல் கட்சிகள் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு மொழிப் பிரச்சினையை மிகவும் பிரதான கருவியாகப் பயன்படுத்திக் கொண்டன. பொருளாதாரப் பிரச்சினைகள் முக்கிய இடத்தைப் பெறவேண்டிய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் மொழிப் பிரச்சினையே முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதனை அடிப்படையாக வைத்து வளர்க்கப்பட்ட இனவாத உணர்வே அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான இலகுவான வழியாக அரசியல் கட்சிகளால் கையாளப்பட்டது. இந்நிலையானது நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மறுத்ததோடு, அவர்களை இரண்டாம்தரக் குடிமக்களாகக் கருதவும் செய்தது. அத்துடன் நாட்டின் அரசியல் ஒற்றுமைக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும் மாறான வகையிலே பெரும்பான்மைச் சிங்கள மக்களின் ஏதேச்சாதிகார ஆட்சியைத் தமிழ் பேசும் மக்கள் மீது வல்லந்தமாகத் திணிக்கவும் செய்தது. தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்ட இந்த இனவாத அரசியலே நாடு இன்று எதிர்நோக்கியுள்ள துர்ப்பாக்கிய நிலைமைக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகும்.



## அடிக்குறிப்புக்கள்


1. Howard Wriggins, 'Problems of Communalism in South Asia' in **The Ceylon Journal of Historical and Social Studies**, New series Vol. IV Nos. 1 & 2 Jan. Dec. 1974, P. 139.

2. Robert N. Kearney, **Communalism and the Language in the politics of Ceylon**, Duke University Press, Durham N. C. 1967, P. 68.

3. Elie Kedourie, **Nationalism**, Hutchinson of London, 1979, P. 64.

4. For a more detailed discussion see, A. Jayaratnam Wilson, & Dennis Dalton (eds) **The States of South Asia : Problems of National Integration**, Vikas Publishing House Pvt. Ltd, New Delhi, 1982.

5. S. Arasaratnam, **Ceylon**, Printice Hall, New Jersey, 1964, P. 30.

6. See for a detailed discussion, Michael Roberts, 'Ethnic Conflict in Sri Lanka and Sinhalese Perspectives: Barriers to Accomodation', **Modern Asian Studies**, Vol. 12 Part 3, Cambridge University Press, July 1978.

7. Howard Wriggins, **Ceylon – Dilemmas of a New Nation**, Princeton University Press, Princeton 1960, Chapter VI pp. 169-210 and
Bruce Kapferer, **Legends of People Myths of State**, Smithsonian Institution Press, London, 1988 Chs. I, IV.

8. K. M. de Silva, (ed) **The University of Ceylon History of Ceylon** Vol. III University of Ceylon Press Board, Colombo, 1973, pp. 402, 494.

9. Ibid., pp. 381 - 407.

10. K. M. de Silva, **A History of Sri Lanka**, Oxford University Press, New Delhi, 1981, P. 496.

11. Ibid., P. 500 also see K. M. de Silva 'Nationalism... The Ceylon Journal of Historical and Social Studies Newseries Vol. IV Nos. 1 & 2 Jan -Dec 1974, pp. 56 – 72.
12. Ceylon, House of Representatives, Parliamentary Debates *(Hansard)* Vol. 48. Col. 1313 *(Sept. 3 1962)*.
13. Ceylon, Hansard (Legislative Council) 8 Nov. 1928.
14. A. Jayaratnam Wilson, Politics in Sri Lanka 1947-1973 Macmillan, London, 1974, p. 49.
15. Ceylon, State Council Debates 1944 I 745 - 70, 807 - 16.
16. Ceylon, House of Representative Dabates Vol. VIII Col. 481
17. Ibid., Vol. IX Col. 1344.
18. Robert N. Kearney, Communalism and .. P. 65.
19. Horward Wriggins, 'Problem of Communalism in South Asia' C J H S S p. 140.
20. Calvin A. Woodward, The Growth of the Party system in Ceylon, Brown University Press, Providence, RI, 1969, P. 120.
21. S. J. Tambiah, 'Ethnic Representation in Ceylon, Higher Administrative Services 1870 - 1946, University of Ceylon Review XIII, 2 - 3, *(April - July*, 1955) pp. 30 - 133.
22. Great Britain, Report of the commission on constitutional Reform (cmd. 7667, 1945) p. 49.
23. S. J. Tambiah, 'Ethnic Representation... op. cit. p. 133.
24. Robert N. Kearney, Communalism and ... p. 72.
25. G. C. Mendis, Ceylon Today and Yesterday, Lake house, Colombo, 1963, p. 170.
26. Ceylon, House of Representative Parliamentary Debates, Vol. 24, No. 1, Col. 843.

—



27. Robert N. Kearney, communalism and ... p. 73.
28. Kumari Jayawardena, Ethnic and class conflicts in Sri-Lanka, Centre for Social Analysis, Dehiwela, 1985, p. 63.
29. Ceylon, House of Representative Dabates Vol. 24 No. 1, Col. 840-41.
30. Ibid., Vol. II Cols. 3497 - 3498.
31. J. L. Fernando, Three Prime Ministers of Ceylon: an inside Story, M. D. Gunasena & Co, 1963, pp. 84-89.
32. U. N. P. Journal, 08 Jan. 1954.
33. Eelanadu 26, Feb. 1956.
34. Urmila phadnis, Religion and politics in Sri Lanka, Manohar, New Delhi, 1976, p. 264 and also the ceylon Observer, 18 December, 1955 Times of Ceylon, 30 September, 11October 1954
35. Urmila phadnis, Religion and politics ..... p. 265; Times of Ceylon 11 Feb. 1954.
36. A. Jayaratnam Wilson, 'Politics and Political Development Since 1948,' in K. M. de Silva (ed) Sri Lanka: A Survey, C. Hurst & Co., London; 1977, p. 296.
37. Prime Minister's Visit to Jaffna, Welcome Address and Reply, Jaffan 1954, p. 4.
38. S.W.R.D. Bandaranaike, Towards the New Era, Department of Information, Colombo, 1961, P. 394 - 95.
39. I D.S. Weerawardena, Ceylon General Election 1956, Gunasena, Colombo, 1960, pp. 13 - 19.
40. U. N. P., United National party Eighth Annual Conference and Mass Rally, Colombo,1956.

41. U. N. P., General Election 1956, Manifesto of the United National party, Colombo, 1956;
I, D. S. Weerawardena, op. cit., p. 55.

42. Mahajana Eksath Peramuna, Joint Programme of the Mahajana Eksath Peramuna, Colombo, 1956, p. 2.

43. S. Arasaratnam, Ceylon, p. 26.

44. Ibid., p. 26.

45. Ceylon Morning Leader 17 th July 1926, 19 th May-30 th June, 1926.

46. S.W.R.D. Bandaranaike, Towards the New Era p. 395

47. Ceylon, House of Representatives Debates Vol. 24, No.1, Col. 1477.

48. S. Ponniah, Satyagraha and the Freedom Movement of the Tamils in Ceylon, Jaffna, 1963, p. 101.
Ceylon, House of Representative Debates Vol. 24.No 1 (14 June 1956)

49. Ceylon, House of Representatives Debates Vol. 24, No.1 Col. 1105.

50. Ibid., Vol. 24, No. 1 Col. 939.

51. Ibid., Vol. 38. Col. 559.

52. Kumari Jayawardena, Ethnic and Class Conflict... p.63

53. Howard Wriggins, Ceylon - Dilemmas of a New Nation, pp. 338 - 39.

54. Ceylon, House of Representatives Debates Vol. 24, No.1 Col. 1701 (Hansard 14 June 1956)

55. Walter Schwarz, The Tamils of Sri Lanka, Minority Rights Group, London, 1975, p. 10.



56. Ceylon, House of Representatives Debates Vol. 39, Col. 410,
Ceylon, Senate Debates Vol. X Cols. 571 -627.

57. Calvin A. Woodward, The Growth of a Party System in Ceylon, p. 230

58. Ibid, pp. 103, 105.

59. P. C. Mathur, 'Origins and Development of South Asian Party System,' in P. C. Mathur, (ed) Government and Politics in south Asia Vol. 1, Jaipur, 1985, pp. 275-72

60. Urmila Phadnis, 'Ethnicity and Nation - Building in South Asia', South Asian Studies Vol. 14 Nos. 1 & 2 Jan.-Dec. 1979, Jaipur, p. 88.

61. Ceylon, House of Representatives Debates Vol. 36, Col. 409; Robert N. Kearney, 'Language and the rise of Tamil Nationlism in Sri Lanka' Asian Survey Vol. 18 No. 5, May 1978, p. 528.

62. S. M. Rasamanickam, Presidential Address 1TAK 7th Annual Convention 1961, Jaffna, ITAK, p. 8.

63. Horward Wriggins, Ceylon Dilemmas of a New Nation p. 264.

64. All Ceylon Tamil Congress, All Ceylon Tamil Congress 21st Annual Conference Souvenir, Jaffna, 1966, P. 12 (in Tamil)

65. Times of Ceylon 15 June 1956; Morning Times 4 July, 1956.

66. K. M. de silva Managing Elhnic Tensions in Multi Societies Sri Lanka 1880/1985 University Press of America, New york 1986 Appendices, p.398.

67. Robert N. Kearney, Communalism and the language in the Politics of Ceylon, P. 85.

68. S. W. R. D. Bandaranaike, 'Message by the Prime Minister', Sri Lanka Freedom Party Annual Number, 1958, Colombo.

69. Ceylon, House of Representatives Debates Vol. 31., Cols. 25 - 32; Wriggins, Ceylon Dilemmas of a New Nation pp. 266 - 67.

70. United National Party, First Step, Colombo, n. d., pp. 8, 11.

71. Ilankai Thamil Arasu Kadchi, I.T.A.K. Silver Jubilee Souvenir, Jaffna, 1974, p.35.

72. Ceylon House of Representatives Debates Vol. 31, Cols. 11-13.

73. See Tarzie Vittachi, Emergency 58, London, Andre Deutch, 1958.

74. See Tamil language (Special Provisions) Act No. 28 of 1958' in K. M. de Silva, Managing Ethnic Tensions in Multi Societies: Sri Lanka, Appendices, P. 395.

75. Ceylon, House of Representatives Debates, Vol. 31, Cols. 1938-40.

76. Tamil Language (Special Provisions) Act No. 28 of 1958

77. K. M. de Silva, A History of Sri Lanka, p. 515.

78. Report of the States Re - Organisation Commission, Govt of India, New Delhi, 1965 p. 46.

79. Ceylon, House of Representatives Debates, Vol. 38, Cols. 780 - 85.

80. K. M. de Silva, A History of Sri Lanka, p. 526.



81. Ceylon Observer 22, May 1960; Morning Times 28 March, 1956.

82. K. M. de Silva, A History of Sri Lanka p. 526

83. Sri Lanka Freedom Party, S. L. F. P. - Election Manifesto 1960, Colombo, 1960' p. 11.

84. Language of the Courts Act No. 3 of 1961.

85. S. J. V. Chelvanayakam, Presidential Address, Ilankai Tamil Arasu Kadchi Ninth National, Convention, 1964, I. T. A. K, Colombo 1964, p. 10, See more details in S. Ponniah, The Freedom Movement of the Tamils in Ceylon, Jaffna, 1963.

86. Keesing's Contemporary Archieves, April 29, May 6, 1961. p. 18074.

87. Ceylon News, 27, April 1961.

88. Ceylon Today XI 7, July 1962, p. 4.

89. Ceylon, Public Service Commission, A Guide to a Carreer in the Public Service, Govt. Press, Colombo n.d. pp. 5-6.

90. Ceylon Today XIV 2 Feb. 1965, p. 6 "Prime Minister's Independence Day Message."

91. Sri Lanka, 20 June, 1964; also see Robert N. Kearney, The Marxists, and coalition Government in Ceylon,' Asian Survey V 2 Feb. 1965, pp. 120 - 124.

92. A. J. Wilson Electoral Politics in an Emergent State, Cambridge University Press, London, 1975, p. 31.

93. Ceylon, House of Representatives Debates, Vol. 60 Cols. 643 - 46, 698 - 701.

94. Urmila Phadnis, Religion and Politics in Sri Lanka, P. 153.

95. Eelanadu, 10 April 1965.

96. Ceylon, House of Representativs Debates, Vol. 56, Col.247.

97. U.N.P., U N P. Election Manifesto, Colombo 1965, p.10.

98. I. T. A. K., I. T. A. K. Silver Jubillee Souvenir, p. 59.

99. Tamil language (Special provisions) Regulations. 1966 from the Dept. of Information and Publication, Sri Lanka Feb. 1966.

100. Ibid.

101. Please see in the Appendices - Dudley-Chelva Agreement; A. J. Wilson, Politics in Sri Lanka, p. 27.

102. Ceylon, Senate Debates Vol. 22 Cols. 628, 631.

103. Ceylon Daily News 28 July 1965.

104. Ceylon, House of representatives Debates, Vol. 60, Col. 683; Ceylon Daily News 7, June 1965.

105. Sinhale 8, August 1965.

106. Ceylon Daily News, 27, May 1965; Samasamajaya, July 1965, p. 4

107. Kumari Jayawardene, Ethnic and Class Conflict in Sri Lanka, p. 74.

108. Janadina, 23 Nov. 1965.

109. Ceylon Daily News, 5 Jan. 1965.

110. Ibid.

111. Ceylon, Senate Debates, Vol. 22 Cols. 497-498.

112. Ceylon, House of Representatives Debates, Vol. 60 Col. 200



113. ITAK, ITAK Silver Jubilee Souvenir, p. 48.

114. United Front, U. F. Election Manifesto 1970, Colombo, 1970

115. Sri Lanka, The Costitution of Sri Lanka (Ceylon), Dept. of Government Printers, Colombo, 1972.

116. K. M. de Silva, A History of Sri Lanka, p. 550.

117. A. J. Wilsorn, "Minority Safeguards in the Ceylon Constitution," C J. H. S. S., 1 (1) 1958, pp. 73 - 95

118. Sri Lanka, The Constitution of Sri Lanka 1972, Ch. 111

119. A. J. Wilson, Politics in Sri Lanka 1947 - 79, p. 220.

120. Ibid.

121. Sri Lanka, The constitution of the Democratic Republic of Sri Lanka, Dept. of Govt. Printers, Colombo 1978.

# அரசியல் முரண்பாட்டிற்கான மூலங்கள்

## 2 மதம்

இலங்கையில் இலங்கையர் தேசியவாதம் ஒன்று வளராமல் போனமைக்கும் சிங்கள, பௌத்தத் தேசியவாதம் வலுப்பெற்ற சக்தியாக இலங்கை அரசியலில் செயற்பட்டமைக்கும், சிங்கள மொழியும் பௌத்த மதமும் நெருங்கிய வகையிலே பிணைக்கப்பட்டிருந்தமையே காரணமாயிற்று. இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் அதிகாரத்திலிருந்த மேலைத்தேயமயமான மத்திய வகுப்பினருக்கும், சிங்கள மொழியில் கல்வி கற்ற பிரிவினருக்கும் இடையில் தேசியவாதம் பொறுத்து முக்கிய வேறுபாடு காணப்பட்டது. முதற்பிரிவினர் தேசியம் (Nation) எனும் பொழுது நாடளாவிய ஒன்றாகக் கொள்ள, மற்றவர் அதனை இனம் (Race) என்பதுடன் அடையாளம் கண்டனர். அவ்வாறே முதற் பிரிவினர் மதச்சார்பற்ற ஒன்றாகத் தேசியத்தைக் கொள்ள, மற்றவர் மதத்துடன் தேசியத்தை நெருங்கிய வகையிலே இணைத்துக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.[1] இதனால்தான் நாடு தழுவிய இலங்கையர் தேசியவாதம் ஒன்று வளர்ச்சி அடையாமல் சிங்கள மொழி, பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட சிங்கள, பௌத்த தேசியவாதம் வளர்ச்சியுற்று ஏனைய சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு மாறான வகையிலே செயற்படலாயிற்று. இத்தகைய போக்கு இலங்கையின் பல்லினத் தன்மை கொண்ட குடித்தொகையினரை இன, மொழி, மத அடிப்படையில் பிளவுபடுத்த வழிவகுத்தது. 1955 களிலிருந்து இலங்கைத் தேசியவாதத்தினதும் இலங்கையின் தேசிய அரசியலினதும் பிரதான அம்சங்களாக இன, மொழி, மதம் என்பன



இடம் பெறுவதனைக் காணலாம். இத்தகைய போக்கு இலங்கையின் தேசிய ஒற்றுமைக்கும், தேசிய ஒருங்கிணைப்பிற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் குந்தகம் ஏற்படுத்துவதாக அமைந்தது.

இலங்கையின் அரசியல் அபிவிருத்தியில் பௌத்தமதத்தின் பங்கினை விளங்கிக்கொள்வதற்கு இலங்கை வரலாற்றைப் புரிந்துகொள்வது அவசியமானதாகும். சிங்கள மக்களின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம் போன்ற நூல்களிலும், புராணக்கதைகளிலும் இலங்கையானது புத்தபகவானால் தனது கொள்கைகள் தூய்மையான முறையிலே பாதுகாக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட இடமாகவும், சிங்கள இனத்தின் தாபகனான விஜயன் புத்தபகவான் பரிநிர்வாண நிலையை அடையும் தறுவாயில் இலங்கையில் வந்திறங்கினான் எனவும், விஜயனாலும் அவன் கூட்டாளிகளினாலும் பௌத்தமதம் இங்கு தாபிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது.[2] அத்துடன் புத்தர் மூன்றுமுறை விஜயம் செய்த பெருமையைக்கொண்டதாகவும் இலங்கை கொள்ளப்படுகின்றது. சிங்கள பௌத்த மக்கள் மத்தியிலே வரலாற்றுக் காலத்தில் இருந்தே இத்தீவு தமக்கே உரித்தான பிரதேசம் என்ற கருத்து நிலவி வந்தது. அதாவது பௌத்த மதத்தின் புனிதத் தன்மையை நிலைநாட்ட, அதனைப் பாதுகாக்கத் தாமே தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் (Chosen people) என்ற கருத்து அதாவது தம்மதீபக் கருத்து (The Dhammadipla concept) மற்றையது ஸீகதீபக் கருத்து (The Sihadipa concept - Isiand of Sinhala people) அதாவது சிங்கள மக்களுக்குரித்தான தீவு என்பன நிலவிவந்தன. கி. பி. 5 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த பாளிநூல்களில் மட்டுமல்ல, சிங்கள இலக்கியங்களிலும், நாட்டுப் பாடல்களிலும், புராணக் கதைகளிலும் இவை இடம்பெற்றமை சிங்கள, பௌத்த மக்கள் மத்தியிலே இலங்கை சிங்கள, பௌத்த இராச்சியம் என்ற கருத்தைத் தவிர்க்க முடியாத வகையிலே உருவாக்கியிருந்தன.

காலத்திற்குக் காலம் இடம்பெற்ற தென்னிந்திய அரசியல் போட்டிகள், படையெடுப்புக்கள் பற்றிய தகவல்கள் சிங்கள, பௌத்த மக்கள் மத்தியிலே இனவாதக் கண்கொண்டே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. திராவிடர் குறிப்பாகத் தமிழர் படையெடுப்பாளர்களாக, தம்மக்கோட்பாடுகளை அழிப்பவர்களாகப் பாளி சிங்கள, புராண இலக்கியங்களிலே சித்திரிக்கப்பட்டுள்ளனர். மகாவம்சத்தில் துட்டகாமினி எல்லாளன் போராட்டம், சூளவம்சத்திலே கலிங்க மாகனின் ஆட்சி என்பன இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். கலிங்கமாகன் சிங்கள இராச்சியத்தை அழித்து வடக்கே சுதந்திர அரசினை நிறுவியமையும், நாயக்க மன்னர் ஆட்சியில் கண்டி இராச்சியத்தில் தென்

விந்திய செல்வாக்கு வளரச், சிங்களப் பிரதானிகள் செல்வாக்கு இழந்தமை போன்ற நிகழ்வுகள் சிங்கள பௌத்த மக்கள் பொறுத்து ஆரம்பத்திலிருந்தே சிங்கள பௌத்தர் அல்லாதோர் மீது விசேடமாகத் தமிழர் மீது வெறுப்புணர்வு ஏற்படக் காலாக அமைந்தன. உண்மையில் நாம் இதுவரை பார்த்த கருத்துக்கள் பிரித்தானியர் ஆட்சியின் போது வலுவிழந்தனவாகவே இருந்தன. ஆனால் பிரித்தானியர் அரசியலதிகாரத்தை மேலைத்தேய மயமான, ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினரிடம் ஒப்படைத்ததன் பின்பாக, அவர்களிடமிருந்து அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற முற்பட்ட சிங்களம் கற்ற மத்திய வகுப்பினராலும், அவர்கள் அரசியல் தலைவர்களினாலும் நாடு பூராவும் வேகமாக இக்கருத்துக்கள் பரப்பப்பட்டன. ஏனைய தேசிய இனங்களுக்கு மதிப்பளியாது பௌத்த சிங்கள தேசியவாதத்தை வலுப்படுத்த இக்கருத்துக்கள் உதவின.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பான காலத்தில் பௌத்த மதம் பெற்ற பங்கினை விளங்கிக் கொள்வதற்குப் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் பற்றி அறிதல் பயனுடையதாகும். பிரித்தானிய ஆட்சி, கிறிஸ்தவ மயமாக்கம், மிஷனரிமார் நடவடிக்கை ஆகியவற்றிற்கு எதிராக எழுந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், மதுபான ஒழிப்பு இயக்கம் என்பன சிங்கள பௌத்த தேசியவாத இயக்கத்திற்கு வலுவூட்டின.[3] அன்னிய ஆட்சியாளர்களுக்கும், மிஷனரிமாரின் நடவடிக்கைகளுக்கும் எதிராகச் சுதேச மதங்கள் தம்பண்பாட்டை நிலை நிறுத்த முயல்வது தேசிய வாதத்தின் ஆரம்ப வடிவமேயாகும். சமயப் போர்வையில் அரசியல் எதிர்ப்பை வெளியிடுதல் எல்லாத் தேசிய இனங்களினதும் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் அவதானிக்கக் கூடிய பொதுப்பண்பாகும். இதற்கமைய எழுந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், மதுபான ஒழிப்பு இயக்கம் என்பன சிங்கள பௌத்த தேசியவாத எழுச்சியின் முதற்படியாயின.[4] 1870களில் மிகத்துவத்தே குணானந்த தேரோ, ஸ்ரீ சுமங்கல தேரோ தொடர்ந்து அநகாரிக தர்மபாலா போன்றோர் கிராமிய மட்டத்தே தீவிர ஏகாதிபத்திய எதிர்ப்பு, கிறிஸ்தவ மயமாக்க எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1880களில் கிறிஸ்தவ மயமாக்கத்தை எதிர்த்துப் பௌத்த பாடசாலைகள், கல்வி முறை என்பன தோற்றுவிக்கப்பட்டன. பௌத்த பாடசாலைகளின் தோற்றம் பௌத்த சிங்கள தேசியவாதம் பொறுத்துக் குறிப்பிடத்தக்க அம்சமாயிற்று.

கிறிஸ்தவமிஷன் பாடசாலைகள் இம்மக்கள் பொறுத்து அன்னிய பாடசாலைகளாக, ஏகாதிபத்தியத்தினை வரவேற்கும் கல்வியாளர்



களை உருவாக்குவனவாக, கிறிஸ்தவ கலாசாரம் பரப்பும் கலைக் கூடங்களாகக் கருதப்பட்டன. இந்நிலையை மாற்றிச் சிங்களமொழி, சிங்கள கலாசாரம், பௌத்த மதம் வளர்ப்பதற்கும், சிங்களமொழி, பௌத்தமதம் என்ற உணர்வினை ஒவ்வொரு சிங்கள மகனின் உள்ளத்தில் ஊட்டுவதற்குமேற்ற தேசிய பாடசாலைகளின் தோற்றம் பௌத்த சிங்கள தேசியவாதத்திற்குத் துணைபுரிந்தது. கேணல் ஒல்கொட் (Colonel Olcott) வருகையும், பௌத்த பிரம்மஞான சங்கத்தின் தோற்றமும், Blavatsky அம்மையாரின் தொண்டும் பௌத்த கலாசார மறுமலர்ச்சி இயக்கத்திற்கு புத்துணர்வைக் கொடுத்தன. ஒல்கொட்டின் வருகையும் பௌத்த பிரம்மஞான சங்கத்தின் தோற்றமும் பௌத்த சிங்களப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், பௌத்த சிங்களக் கொடியின் தோற்றத்திற்கும், பௌத்த சிங்களக் கலாசாரத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின.[5] அவ்வாறே மதுபான ஒழிப்பு இயக்கமும் புதிய சிங்கள, பௌத்த தேசியத் தலைவர்களை உருவாக்கியது. இவ்விரு இயக்கங்களும் பௌத்த சிங்கள மக்களிடையிலான தேசிய உணர்விற்கு மேலும் வலுவூட்டின. இத்தகைய வலுமிக்க இயக்கங்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வளர்ச்சி பெற வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

இலங்கை வரலாற்றில் அன்னியர் ஆட்சியின்போது பௌத்தமதமானது பல்வகைகளிலும் பாதிப்புற்றது. பிரித்தானியர் ஆட்சியில் கிறிஸ்தவ மதம் பரப்பலினாலும், மேலைத்தேய மயமாக்கலினாலும். மிஷனரிமார்களின் நடவடிக்கைகளினாலும் அரசியல், பொருளாதார, சமூகத்துறைகளில் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டது. சிங்கள அரசர் காலத்தில் பௌத்த மதமும், பௌத்த சங்கமும் உன்னத நிலையைப் பெற்றிருந்தன. அக்காலத்தில் கல்வி வளர்ச்சி பொறுத்துப் பௌத்த சங்கமே முதன்மை நிலை அடைந்திருந்தது. பெரும்பாலான சிங்கள இலக்கியங்கள் கூடப் பௌத்த துறவிகளினாலே இயற்றப்பட்டிருந்தன. இத்தகைய முதன்மை நிலையைப் மீண்டும் அடைவதில் பௌத்த சங்கத்தினர் கூடிய ஈடுபாடு கொண்டவர்களாகக் காணப்பட்டனர். சுதந்திரத்தின் பின்பான காலப்பகுதியில் இவர்களது அரசியல் நடவடிக்கைகளிலிருந்து இதனை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

**1948** இல் டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் ஆட்சியை அமைத்துக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மதம் பொறுத்துத் தனிப்பட்ட ஆர்வம் எதுவும் கொண்டதாகக் காணப்படவில்லை. மேலைத்தேயப் பண்புகளும், தாராண்மைக் கொள்கைகளும், அவர்

களை மதம் பொறுத்து அதிக அக்கறை, ஈடுபாடு கொள்ளாமல் செய்தன. ஆங்கிலம் கற்ற. மேலைத்தேயமயமான அவர்கள் வாழ்க்கை முறையில் அரசியல் அபிலாஷைகளை அடைவதற்கு மதத்தைக் கருவியாகக் கொள்ளும் போக்கு காணப்படாதிருந்தது. அக்கட்சி பொறுத்தமட்டில் பௌத்தமோ, இந்துமதமோ, இஸ்லாமோ, கிறிஸ்தவமோ எம்மதமாகிலும் அவை சுயமாக வளர்ச்சியடைய வேண்டுமேயொழிய அரசு நாட்டின் மதத்துறையில் தலையிடக்கூடாது என்பதே கொள்கையாக இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி அரசு இவ்வாரம்ப கட்டத்தில் அரசியல் ரீதியில் மதம் பற்றிய கவனம் எதுவும் கொண்டிருந்ததென்றால் அது 1947 தேர்தலிலே "Don't give vote to the Marxists because if you do your religion, whatever it is, will be destroyed"

என்பதாகவே அமைந்தது.[6] 1948 – 52 வரையிலான ஆட்சிக் காலத்தே டி. எஸ். சேனநாயக்கா மதம் பொறுத்து வற்புறுத்திய கொள்கை என்னவெனில் மதம் என்பது மனிதனுடைய தனிப்பட்ட விடயம் என்பதும், தனது கட்சி ஒவ்வொரு மனிதனுடைய மத உரிமைக்கும், சுதந்திரத்திற்கும் பாதுகாப்பை அளிக்கும் என்பதாகவே இருந்தது.[7]

1950 ஆம் ஆண்டில் பௌத்த பிக்குகளின் குழுவொன்று பிரதமரைச் சந்தித்துப் பௌத்த மதத்திற்குத் தனிப்பட்ட அரச பாதுகாப்பும், ஆதரவும் வழங்கும்படி கோரிக்கை விடுத்தபோது பிரதமர் அதற்கு உடன்படாதவராக "The Buddha has pointed out the path of development and no state aid can take man there"[8] எனக்கூறி அரசு என்பது மதச்சார்பற்றதாக இருக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்தியிருந்தார். 1951 ஆம் ஆண்டு அகில இலங்கைப் பௌத்த காங்கிரசின் (ACBC) தலைவராக இருந்த டாக்டர் ஜி. பி. மலலசேகரா பௌத்தமதம் பெருமளவிற்குப் புறக்கணிக்கப்படுகின்றதெனவும், அந்நியராட்சியில் அது பல்வேறு இடையூறுகளுக்கும் உட்பட்டுத் தன்நிலை தளர்ந்துவிட்டது எனவும், தகுந்த பாதுகாப்பைப் பௌத்த மதத்திற்கு அளிக்கவேண்டுமெனவும் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவிற்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தார்.[9] பிரதமர் இது பற்றி விசாரணை செய்து பௌத்தமதத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் விசாரணைக்குழு ஒன்றினை நியமிக்க ஏற்பாடு செய்வதாகவும், அது சோல்பரி அரசியல் திட்டத்தின் சிறுபான்மையோர் காப்பீடாக விளங்கிய 29 வது சரத்து, 2 உபபிரிவு C. D. என்பவற்றுடன் முரண்படும் வகையில் அமையலாம் என்றும் தூதுக் குழுவினரிடம் குறிப்பிட்டிருந்தார்.[10] ஆனாலும் இவ்விசாரணைக்குழு



நியமனம் பொறுத்து அரசு தனிப்படப் பௌத்த மதத்திற்கு ஆதரவு என்ற நிலையில் அன்றி ஏனைய மதங்களின் கோரிக்கைகளுக்கும் இத்தகைய மதிப்பு அளிக்கப்படுமென்பதனை வலியுறுத்தியவராக, மத எதிர்ப்புச் சக்திகளிடமிருந்து அது எம் மதமாகிலும் பாதுகாப்பதே தனது அரசின் நோக்கமென்பதனையும் தெளிவுபடுத்தினார்.[11]

ஆனால் மிக விரைவிலேயே ஐ. தே. கட்சியின் மந்திரிகளுள் ஒருவராகிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசியல் அதிகாரத்தை மொழி, மதம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இனவாத உணர்வுகளைத் தூண்டி கைப்பற்ற முற்படுவதனைக் காண்கிறோம். சுதந்திரத்தின் பின்பாக U. N. P. அரசாங்கத்தின் நடவடிக்கைகள், ஆழமாக வேரூன்றியிருந்த சிங்கள, பௌத்த மக்களின் மனத்தாங்கல்களை தீர்த்திராத கட்டத்தில் இக்குறைபாடுகளை, அதிருப்திகளை முன் வைத்து அரசியல் இலாபம் தேடப் பண்டாரநாயக்கா முற்படுகின்றார். இப்பின்னணியில் தான் பௌத்தமதத்தையும், சிங்கள மொழியையும் அரசியல் அபிலாஷைகளை அடைவதற்காக மிகவும் திறமையாகக் கையாளுவதனை அவதானிக்கலாம். சிங்கள மகா சபையைப் புனரமைத்ததுடன் அவர் சிங்கள, பௌத்த மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கவும் முற்பட்டார். இவ்வகையில் 1950 களில் இருந்து பௌத்த மதத்திற்கு விசேட அரசியல் அமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதனை வற்புறுத்தி வருவதனைக் காணலாம்.[12] அவ்வகையில் நாடு முழுவதும் பௌத்த மதமே அரசாங்க மதமாக வேண்டுமென்ற கூக்குரலை எழுப்பத்தொடங்கினார்.[13]

The adoption of Buddhism as the state religion will Usher in an era of religio - democratic socialism. More than two thirds of the population of Ceylon are Buddhists, and it is therefore enevitable that Buddhism should be the state religion.[14]

இவ்வகையில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்கள மொழியைப் போலவே பௌத்த மதத்தையும் கருவியாகப் பயன்படுத்த ஆரம்பித்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரித்தானிய தாராண்மைவாதக் கருத்துக்களுக்கு ஏற்புடையவராக விளங்கிய பிரதமர் மதத்தில் அரசாங்கத் தலையீட்டினைக் கடுமையாகவே எதிர்த்து வந்தார். U. N. P. மந்திரி சபையிலிருந்து வேறு மந்திரிகளும் இக்கொள்கையை ஆதரித்தவர்களாகவே இருந்தனர். அமைச்சர். அமரசூரியா

போன்றவர்கள் பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்கலில் அக்கறை அற்றவர்களாக இருந்ததுடன், பௌத்த மதத்தினர் ஒழுங்காக நடந்து கொள்ளாதவிடத்து அது அரசாங்க மதமாகி விடுவதால் நன்மை ஏதும் ஏற்படப்போவதில்லை என்று வற்புறுத்தினர்.[15] இவ்வாறு டி.எஸ். சேனநாயக்கா நாட்டின் பிரதமர் பதவியை வகிக்கும் வரையும் ஐக்கிய தேசியக் கட்சியானது அரசியல் ரீதியில் மதச்சார்பற்றதாக, மதங்கள் பொறுத்து யாவற்றுக்கும் சம அந்தஸ்து வழங்கியதாக இயங்கியது. பிரதமரின் மரணத்தின் பின்னர் டட்லி சேனநாயக்காவும் தந்தையின் கொள்கையே பின்பற்றினார். சேர். ஜோன் கொத்தலாவல நாட்டின் பிரதமர் பதவியை வகித்த போதும் அவராட்சியின் ஆரம்ப கட்டத்தில் பௌத்தமதம் அரச மதமாக்கப்பட வேண்டுமென்பதற்கோ தனிப்படப் பௌத்த மதத்திற்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்பதற்கோ கட்சியினரிடையே ஆதரவு இல்லாதிருந்தது.[16]

ஆனால் இக்காலகட்டத்திலே பண்டாரநாயக்கா தலைமையிலான S. L. F. P சிங்கள மொழியை அரசாங்க மொழியாக்குவதில் கொண்டிருந்த அதேயளவு ஆர்வத்தைப் பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதிலும் கொண்டிருந்தது. சிங்கள, பௌத்த மக்களிடையே நீண்டகாலமாக வேரூன்றியிருந்த ஆழமான அதிருப்திகள், மனக்குறைகள், தங்கள் மொழி, மதம் பொறுத்துச் சுதந்திரத்தின் பின்பான U. N. P. யின் ஆட்சிக்காலத்தில் உன்னத நிலையை அடைய முடியாமல் போனமை – இவற்றையெல்லாம் S. L. F. P. பயன்படுத்திச் சிங்கள பௌத்த மக்களிடையே அதிக ஈடுபாடு கொண்ட கட்சியாகக் காட்டிக்கொண்டது. கட்சியின் பிரசாரமும் பௌத்த சிங்கள மக்களின் நீண்ட கால அதிருப்திகளை உடனடியாகத் தீர்த்து வைக்கும் தன்மை கொண்டதாக அமைந்தது. வரலாற்றுப் பின்னணியை வைத்து மொழி, மத, இனப்பற்றுக்கள் அளவுக்கதிகமாகவே தூண்டி விடப்பட்டன. கட்சியின் அரசியல் நடவடிக்கைகளிலே இனவாதப் பண்புகள் மேலோங்கி இருந்தன. சிங்கள, பௌத்த மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் தனிக்கட்சியாக S. L. F. P தன்னை இனம் காட்டிக் கொண்டது. இப்பின்னணியிலேயே சிங்கள பௌத்தர்களின் ஆதரவு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பெருகலாயிற்று. பௌத்த சங்கமும், அதன் பிக்குகளும் பண்டாரநாயக்காவின் பின்னால் அணிதிரண்டனர். இவ்வேளையில் தம் கட்சிக்கான ஆதரவு குறைந்து வருவது கண்ட ஜோன் கொத்தலாவல நெருங்கி வந்துகொண்டிருந்த பொதுத் தேர்தல் தமக்குச் சாதகமாக அமைய வேண்டியதன் காரணமாக இத்துணை காலமும் மதச்சார்பற்ற கட்சியாகக் கருதப்பட்டு வந்த



ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையினைப் பௌத்த மதமே அரச ஆதரவு பெற்ற மதமென மாற்றியமைக்கின்றார்.[17]

இத்தகையதொரு சூழ்நிலையில் தான் முழுப்பௌத்த உலகமும் மிக்க ஆர்வத்துடன் புத்த ஜயந்தி தினவிழாவைக் கொண்டாடும் நிகழ்ச்சியும் இடம் பெற்றது. இத்தினமானது புத்தர் பரிநிர்வாணமடைந்த 2500 ஆவது ஆண்டைக் குறிப்பதாக அமைந்தது. 1956 ஆம் ஆண்டு மே மாத பூரணை தினம் இந்நாளாகக் கொள்ளப்பட்டு, இதற்கு இருவருடங்களுக்கு முன்பாகவே புத்த ஜயந்தி தின விழா ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. ஐந்து தேரவாத பௌத்த நாடுகளைச் சேர்ந்த புலமை மிக்க பௌத்த பிக்குகள் பர்மாவின் தலைநகரமான ரங்கூனில் ஒன்றுகூடி ஆறாவது உலக பௌத்த காங்கிரசை (Sixth Great Buddhist Council) ஆரம்பித்து வைத்தனர். அங்கு பாளிமொழியில் உள்ளபௌத்த மத ஏற்பாடுகளைப் pali conon பதிப்பிக்கும் மாபெரும் வேலையும், உண்மைத்தன்மை வாய்ந்த திரிபிடகச் செய்யுள்களை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளும் தொடக்கி வைக்கப்பட்டன. பௌத்த மரபுகளின் படி புத்தரின் போதனைகள் 5000 வருடங்கள் நிலைத்து நிற்குமென்றும், அவ்வகையில் இவ் 2500 வது ஆண்டு பௌத்தமத வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்றும் கூறப்பட்டது. இப் பின்னணியில் பௌத்த தர்மமானது உலகெங்கணும் பரப்பப்பட வேண்டியதுடன், முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஆன்மிக விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்றும் கூறப்பட்டது.[18]

இலங்கை வரலாற்றில் புத்த ஜயந்தி தினமானது விசேட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைகின்றது. மகாவம்சத்தின் படி சிங்கள இனத்தின் தாபகனான விஜயன் புத்தர் மரணப்படுக்கையிலிருந்து பரிநிர்வாண நிலையை அடையும் நேரத்தில் இலங்கையில் வந்திறங்கியதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் புத்த பகவான் இலங்கையில் தன் மதம் நிலைநாட்டப்படுமென்றும், விஜயனும், அவன் கூட்டத்தினரும், இலங்கையும், மிகக் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சக்க தேவனிடம் (God Sakka) கூறியதாகவும் அறிகின்றோம்.[19] அவ்வகையில் 1956 ஆம் ஆண்டு இலங்கையுடன் மிக நெருங்கிய வகையிலே தொடர்புள்ள மூன்று முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்ற நினைவு ஆண்டாக அமைகின்றது. பௌத்த மதத்தின் 2500 வது ஆண்டு நிறைவையும், சிங்கள இனத்தின் வாழ்வையும், இலங்கை வரலாற்றையும் இணைத்த ஒரு தினமாக அமைகின்றது.[20] நாடு, இனம், மதம் மூன்றினையும் ஒன்றிணைத்ததாகப் புத்தஜயந்தி

விளங்கியதுடன் சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் எழுச்சிக்கும் வழி அமைத்ததாகக் காணப்படுகின்றது. இவ்வகையில் சிங்கள இனமானது புத்த பகவானின் ஆசிகளுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட இனமாகச் சித்திரிக்கப்படுகின்றது. இப் பின்னணியில் புத்த ஜயந்தி கொண்டாட்டங்கள் தனியே பௌத்த மதத்துடன் மட்டுமல்லாது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகவும் சிங்கள, பௌத்த மக்களால் கருதப்பட்டன.

முக்கியத்துவமுடைய புத்த ஜயந்தியினைக் கொண்டாட்டங்களை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கு அரசின் ஆதரவு இன்றியமையாததாக உணரப்பட்டது. டட்லி சேனநாயக்காவின் முயற்சி காரணமாக இவ்விழாவினைத் தேசிய மட்டத்தில் அரசாங்கத்தின் தீவிர ஈடுபாட்டுடன் கொண்டாட வேண்டுமென்ற பிரேரணை பிரதமர் ஜோன் கொத்தலாவல அவர்களால் கொண்டுவரப்பட்டு மந்திரி சபையும் அதனை ஏற்றுக் கொண்டது. இதனைத் தொடர்ந்து 1954 ஒக்டோபரில் பிரதமர் கொத்தலாவலையினால் (Lanka Bauddha Mandalaya) இலங்கை பௌத்த கவுன்சில் புத்த ஜயந்தி நடவடிக்கைகளை வழிநடத்தவும், ஒழுங்கமைக்கவுமென உருவாக்கப்பட்டது. இக் கவுன்சிலின் அங்குரார்ப்பணக் கூட்டமானது இலங்கையின் சுதந்திர நினைவு மண்டபத்தில் 2500 பௌத்த பிக்குகள் கூடியிருந்து பிரித் ஓத பௌத்த, சிங்கள பண்பாட்டம்சங்களுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

புத்த ஜயந்தி நிகழ்ச்சித் திட்டமானது இலங்கைப் பௌத்த கவுன்சிலினால் பெருமளவு அரசின் பணத்தினைச் செலவிடும் வகையில் உருவாக்கப்பட்டது. பௌத்த சங்கத் துறவிகளைக் கொண்டு பாளி திரிபிடகங்களைச் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கும் நடவடிக்கையும் சிங்கள மன்னரின் வழக்கத்தைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டது.[21] பௌத்த கலைக்களஞ்சியத்தைத் தயாரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாளி அறிஞரும் சோவியத் யூனியனில் இலங்கைத் தூதுவராக இருந்த டாக்டர் ஜி. பி. மலலசேகரா அதன் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பெருமளவிலான வெளிநாட்டு அறிஞர்களும் இம் முயற்சியிலே இணைந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.[22] அத்துடன் விஜயன் இலங்கையை வந்தடைந்த 2500 வது ஆண்டு நினைவு தினத்தைக் குறிக்கும் விதத்தில் பொதுவான சிங்களக் கலைக்களஞ்சியத்தைத் தயாரிப்பதற்கான வேலையும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. புத்தரது தந்ததாது இருப்பதாகக் கொள்ளப்படும் கண்டி தலதா மாளிகை பௌத்த உலகின் அதி வணக்கத்துக்குரிய



தலமாகக் கொள்ளப்பட்டது. புத்த ஜயந்தி நிகழ்ச்சியின் பிரதான நடவடிக்கைகளில் ஒன்றாகப் பௌத்தமத, தேசிய நினைவுச் சின்னங்களைப் புனர்அமைக்கும் பணி காணப்பட்டது.[23] புத்த ஜயந்தி பற்றி நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டதுடன் புத்தரின் போதனைகளைப் பரப்பும் வகையில் ஒலிபெருக்கிகள், படம் காட்டும் இயந்திரங்கள் (Film Projectors) நாடு பூராவும் பயன்படுத்தப்பட்டன. உள்ளூர் அரசாங்க அதிகாரிகளினால் நாடு பூராவும் ஏராளமான பொதுக் கூட்டங்கள் புத்த ஜயந்தி தொடர்பாக நடத்தப்பட்டன. பௌத்த மறுமலர்ச்சியையும், சிங்கள பௌத்த தேசியவாதத்தையும் கௌரவிக்கும் வகையில் தொண்டாற்றியவர்களுக்கு நாடு பூராவும் ஞாபகச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. பௌத்த பல்கலைக்கழகம் ஒன்றினை நிறுவுவது பற்றிப் பௌத்த கவுன்சில் ஆலோசித்திருந்தாலும் உடனடியாக அமைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படவில்லை.

இலங்கையில் அரசு – மதம் பொருந்த உறவுகளின் அபிவிருத்தியில் புத்த ஜயந்தி நடவடிக்கைகள் ஒரு முக்கிய கட்டத்தைக் (Landmark) குறித்து நிற்கின்றன. இத்தீவில் வாழ்ந்த பெரும்பான்மை மக்களின் வரலாற்றுடன் இணைக்கப்பட்ட மூன்று நிகழ்வுகளின் 2500 வது ஆண்டுக் கொண்டாட்டங்கள் சிங்கள, பௌத்த மக்களிடையே பெருமளவிலான ஆர்வத்தையும், ஈடுபாட்டையும், உணர்வினையும் ஏற்படுத்திய ஒன்றாக அமைந்தது. சுதந்திரமடைந்த ஒரு சில ஆண்டுகளில் இடம்பெற்ற இக்கொண்டாட்டங்கள் சிங்கள, பௌத்த இன, மொழி, மத உணர்வினைத் தூண்டி வளர்த்ததுடன், முன்னிலை மீட்சியை மையமாகக் கொண்டு செயற்படவும் காலாயிற்று. இலங்கையர் தேசியவாதத்தைப் புறக்கணித்துச் சிங்கள, பௌத்த தேசியவாதத்தை முதன்மைப்படுத்த வழி வகுத்ததாகவும் இக்கொண்டாட்டங்கள் அமைந்தன. B. H. Farmer கூறியது போல இந்நடவடிக்கைகளைத் தொடர்ந்து இலங்கையில் தேசிய வாதத்தின் புதிய அபிவிருத்தி (A New phase of Nationalism) ஒன்று ஏற்படுவதாயிற்று.[24] இப்புதிய தேசியவாதத்தின் அரசியல் நோக்காக இலங்கையர் தேசியத்திலிருந்து சிங்கள, பௌத்த மூலங்களை வேறுபடுத்தி, ஏனைய சமூகப் பிரிவினரின் மேலாகத் தங்களுடைய தனி முதன்மையை நிலைநாட்டுவது காணப்பட்டது. இந்நிலையைப் பேராசிரியர் அரசரத்தினம் அவர்கள் பின்வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

The Political aim of the new nationalism was to separate the Sinhalese element in the Ceylonese nation and seek to establish it above all other sections.[25]

இப்பின்னணியில் இடம்பெற்ற புத்த ஜயந்தினைக் கொண்டாட்டங்களின்போது அரசின் மதச்சார்பற்ற நிலையானது மறக்கப்பட்டதுடன், இவற்றிற்குப் பூரண ஆதரவும் வழங்கப்பட்டது. இவ்வாறு அரசாங்கம் பௌத்த மதத்துடன் தன்னை நெருங்கிய வகையில் அடையாளம் காட்டிக் கொண்டமை, பௌத்த மத விவகாரங்களில் அரசாங்கம் பெரிய அளவிலான தலையீட்டினைச் செய்வதற்கு முன்னுதாரணமாயிற்று.

இலங்கையில் பௌத்தமதத்தின் மறுமலர்ச்சியில் பலம் வாய்ந்த சக்தியாக அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் விளங்கியது. 1956 இன் பொதுத்தேர்தலில் அதன் நேர்முக, மறைமுகமான பங்கு மிகப் பெரும் முக்கியத்துவமுடையதாகக் காணப்பட்டதுடன், தொடர்ந்தும் அரசாங்கத்தில் செல்வாக்குமிக்க அமுக்கக் குழுவாக (Pressure Group) செயற்பட்டு வந்தது. பிரபலமிக்க பௌத்த தலைவர்களான சி. ஏ. கேவாவிதாரண, எவ். ஆர். சேனநாயக்கா, டி. பி. ஜெயதிலகா ஆகியோர் முயற்சியினால் 1918 இல் இந்நிறுவனம் தாபிக்கப்பட்டது. 1924 அளவில் அகில இலங்கை பௌத்த சங்கங்களின் காங்கிரஸ் என்று பெயர் பெற்று 1940 இல் அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் என்ற பெயரைப் பெற்றது.[26] 1955 இல் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒரு சட்டம் மூலம் காங்கிரஸ் செயற்படலாயிற்று. அச்சட்டத்திலே இந்நிறுவனத்தின் பொதுவான நோக்கம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“to promote foster and protect the interests of Buddhism and of the Buddhists and safeguard the rights and Privileges of the Buddhists” and “to represent the Buddhists and act on their behalf in public matters affecting their interests”.[27]

இக்காங்கிரஸின் பிரபல்யம் மிக்க தலைவராக 1939 இலிருந்து 1957 வரை டாக்டர். ஜி. பி. மலலசேகரா காணப்பட்டார். இந்த இரு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இவரின் ஆளுமையும், ஆற்றியதொண்டும் பௌத்த நடவடிக்கைகளுக்கு பெரும் உந்து சக்தியை அளித்தன. கண்டி தலதாமாளிகையில் 1950 இல் இடம்பெற்ற ஒரு கூட்டத்தில், உலக பௌத்த மகாநாடு ஆரம்பிக்கப்பட்டு அதன் முதல் தலைவராக டாக்டர் C. P. மலலசேகரா தேர்ந்தெடுக்கப்பட்டார்.[28] இத்தகைய ஒரு பலம் வாய்ந்த பின்னணியைக் கொண்ட அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் 1951 இல் அரசாங்கத்திடம் நாட்டில் பௌத்த மதத்தின் நிலைமையைப் பற்றி ஆராய ஒரு விசா



ரணைக் குழுவினரை நியமிக்க விடுத்த வேண்டுகோள் பலன் அளிக்காமல் போயிற்று. இச் சந்தர்ப்பத்தில் தாதுக்குழுவினர் Buddhism and the state என்ற தலைப்பிலான விண்ணப்பத்தைக் கொடுத்து பௌத்த மதத்தைப் புனரமைப்புச் செய்து அதற்குரிய இடத்தை வழங்கும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டது.[29] (To restore Buddhism to its rightful place) ஆனால் இக்கட்டத்தில் இந்த 26 பக்க அறிக்கை அதிக கவனத்தைப் பெறாத போதும் இதுவே பின்னர் பௌத்த விசாரணைக் குழுவினரால் பெரிது படுத்தப்பட்ட அறிக்கையாக மாற்றியமைக்கப்பட்டது. பௌத்த மதத்தின் இன்றைய நிலை பற்றி ஆராய காங்கிரசினால் வேண்டப்பட்ட உத்தியோகபூர்வ விசாரணைக் குழு நியமிக்கப்படாதமையினால் 1954 ஏப்ரல் மாதத்தில் தானாகவே பௌத்த விசாரணைக் குழு ஒன்றினை நியமித்தது. இக்குழுவின் கடப்பாடாகப் பின்வருவது அமைந்தது.

“Inquire into the present state of Buddhism in Ceylon and to report on the conditions necessary to improve and strengthen the position of Buddhism and the means whereby those conditions may be fulfilled”[30]

இவ்விசாரணைக் குழுவினர் சிங்கள, பௌத்த மக்கள் வாழும் பிரதேசங்கள் அனைத்திற்கும் பிரயாணம் செய்து பல தரப்பட்டவர்களிடமிருந்து அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து, நாடு பூராவும் 11 மாதங்களுக்கு மேலாக 6300 மைல்கள் பிரயாணம் செய்து, தனிப்பட்டோர், நிறுவனங்கள், பௌத்த சங்கத்தினர்' சங்கம் சாராதோர் (Laity, Sangha) ஆகியோரிடமிருந்து பல்வகைப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொண்டது. 1800 மேற்பட்ட சிங்கள மக்களும் 700 பௌத்த பிக்குகளும் தங்கள் சாட்சியங்களை விசாரணைக் குழுவினருக்கு அளித்தனர். இவர்கள் எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் மிகுந்த ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டார்கள் ஏற்கனவே புத்த ஜயந்தியைக் கொண்டாடுவதற்காக நாடு பூராவும் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு பௌத்த அமைப்புக்கள் இவ்விசாரணைக் குழுவினருக்கு மகத்தான வரவேற்பையும், பலத்த ஆதரவையும் வழங்கின.[31] பரவலாக விசாரணைக்குழுவின் சாட்சியங்களில் அரசாங்கத்திற்கெதிரான அதிருப்தி வெளிப்படையாகவே காணப்பட்டது. இவ்விசாரணைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையானது 1956 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆம் திகதி கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் வைத்து அகில இலங்கைப் பௌத்த காங்கிரசிடம் அளிக்

கப்பட்டது. சிங்கள மொழியிலான முழு அறிக்கை 189 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டதாகவும், அதன் சுருக்கமான ஆங்கில மூலம் The Betrayal of Buddhism என்ற தலைப்பில் 124 பக்கங்களையும் கொண்டிருந்தது.[32] இவ் அறிக்கையில் சிங்கள மன்னர்காலத்தில் பௌத்தம் உயர் நிலையில் இருந்தமைக்கு அவர்கள் அளித்த அரச ஆதரவு காரணமாயிற்று என்றும், குடியேற்ற ஆட்சியில் கிறிஸ்தவ மதத்திற்கு அத்தகைய அரச ஆதரவு வழங்கப்பட்டதனால் பௌத்த மதம் தளர்வுற்றதெனவும் குறிப்பிடப்பட்டது.[33] அத்துடன் சுதந்திரத்தின் பின்பான U. N. P அரசாங்கங்கள் பௌத்த மதத்தின் தாழ் நிலையை மாற்றாது இருக்கின்றன என்றும் குற்றம் சாட்டியது. பௌத்த மதத்தற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தைத் தடுப்பதற்குப் பலம் மிக்க அரச ஆதரவு அத்தியாவசியம் என்பதனை வேண்டியதாகவும் இந்த அறிக்கை அமைந்தது.

பௌத்த விசாரணைக் குழுவின் முக்கிய அங்கத்தவரும், அகில இலங்கைப் பௌத்த காங்கிரசின் தலைவருமான டாக்டர் ஜி. பி. மலலசேகரா விசாரணைக் குழுவின் அறிக்கை முடிவடைந்த போது கூறிய கருத்துக்கள் பௌத்த மக்களின் அபிலாஷைகளைக் குறிப்பனவாக அமைந்தன.

"The Buddhist with - and quite rightly - that in this country where they form 70 percent of the population, Buddhism should be recognized as the predominent religion of the people. In the rest of the world, Ceylon is regard as essentially a Buddhis country, and they want this claim established here as well... They will not be content to remain in the position of inferiority to which they have been reduced by 450 years of foreign occupation... They have no desire to make Buddhism the state religion inspit of the cry raised by self - seeking politicians - but they wan the state to help them rehabilitate themselves and undo some; at lest, of the injustices perpetrated against them during the days of their subjection."[34]

புத்தஜயந்தி தினக் கொண்டாட்ட நடவடிக்கைகளும், பௌத்த விசாரணைக் குழுவினரின் நாடு தழுவிய செயற்பாடுகளும் ஒருங்கிணைந்து சிங்கள, பௌத்த மக்களிடையே இன, மொழி, மத அடையாளத்தையும், முன்விலை மீட்சியையும் வலுப்படுத்துவதற்கு வழி வகுத்தது. இப்பின்னணியில் தான் இலங்கையில் வாழும் ஏனைய இன,



மொழி, மத மக்களுக்கு எதிரான, முரண்படும் தன்மை கொண்டதாகச் சிங்கள பௌத்த தேசிய வாதம் வளர்ச்சி அடையலாயிற்று. காலப்போக்கில் வலிமை பெற்ற அரசியல் சக்தியாக சிங்கள, பௌத்த இன அடையாள உணர்வு மாற்றம் பெறலாயிற்று. இது இலங்கையின் அரசியல் வளர்ச்சிப் போக்கினை இறுதியில் தீர்மானிக்கும் தன்மை கொண்டதாக மாற்றம் பெற்றது.

இலங்கையில் பௌத்த அரசியல் தீவிரவாதத்தின் வளர்ச்சியோடு நெருங்கிய வகையிலே பின்னிப் பிணைந்ததாகச் சிங்களம் மட்டும் இயக்கம் காணப்பட்டது.[35] இலங்கையில் பௌத்த மதத்தின் நிலைமை பொறுத்த அதிருப்திக்கும், சிங்களம் மட்டும் அரச கருமமொழியாதல் வேண்டுமென்பதற்கும் இடையில் நெருங்கிய இணைப்புக் காணப்படுகின்றது. பாரம்பரிய சிங்கள நாகரிகத்தின் இணைபிரியாத மூலங்களான பௌத்தமதமும், சிங்களமொழியும், மேலைத்தேய ஊடுருவல்களினால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகின. இதன் காரணமாக மேலைத்தேய மயமாக்கலுக்கும், கிறிஸ்தவமத நடவடிக்கைகளுக்கும். அவர்களது மிஷனரி நடவடிக்கைகளுக்கும் எதிரான உணர்வு சிங்கல, பௌத்த மக்களிடையே படிப்படியாக வளர்ச்சி பெற்று வந்தது.[36] சிங்கள மொழியைப் பேசும் கிறிஸ்தவர்கள் சமூகத்தின் எல்லாத் தரங்களிலும் காணப்பட்டாலும், நகர்ப்புற ஆங்கிலம் பேசும் மத்திய வகுப்பினரிடையே அவர்கள் விகிதாசாரம் மிக அதிகமானதாகக் காணப்பட்டது. சிங்கள சமூகத்தின் ஏனைய தரங்களில் பௌத்தமானது இன்னும் வலிமை வாய்ந்த சக்தியாக விளங்கியதுடன் மேலைப் பண்புகள் அதிகம் ஊடுருவாதும் இருந்தது. ஆங்கில மொழியையும், கிறிஸ்தவமதத்தையும், மேலைத்தேயக் கலாசாரத்தையும் பின்பற்றிய இம் மத்திய வகுப்பினர் சிங்கள பௌத்தர்களினால் கண்டனத்திற்கு உள்ளாகி வந்தனர். இப்பின்னணியில் தான் புத்த ஜயந்தி தினக் கொண்டாட்ட ஏற்பாடுகளும், பௌத்த விசாரணைக் குழுவினரின் நாடு தழுவிய நடவடிக்கைகளும், பௌத்த மத உணர்வினையும், சிங்கள மொழி, இன அடையாளத்தையும் வலுப்படுத்தி அவற்றில் அதிக அக்கறை காட்ட வைத்தது. இதனைப் பின்வருமாறு Robert N. Kearney பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார்

"The Buddha Jayanthi reinforced the link between the Buddhist discontents and Sinhalese linguistic and nationalistic sentiments."[37] இவர்களே சிங்களம் மட்டும் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களும் 1956 பொதுத்தேர்தலின் M. E. P. யின் பிரதான பிரசார வீரர்களும் ஆவர்.

1956 இல் பொதுத்தேர்தல் பிரசாரங்களில் பிரதான தேர்தல் விடயங்களாகக் கருதப்பட்ட மொழி, மதம், கலாசாரம் பொறுத்து U. N. P., M. E. P. இடையில் அதிக வேறுபாடு காணப்படவில்லை. இரண்டுமே சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்பதனை ஏற்றிருந்தன. சிங்கள வாக்காளர் பொறுத்துத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நம்பகத்தன்மை வாய்ந்த கட்சியைத் தேர்ந்தெடுப்பதே முக்கியமானதாக இருந்தது. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா பௌத்தமதம் பற்றிய பிரச்சினையானது தனக்குச் சாதகமாக அமையுமென்று சரியாகவே கணித்திருந்தார். M. E. P. யின் கூட்டுத் தேர்தல் அறிக்கையிலே மதம் பொறுத்துப் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

"While realizing the position of Buddhism in this country as the faith of a large majority of the people, we gurantee the fullest freedom of worship and conscience to all, and accept the position that there shall be no discrimination on religious grounds. We generally approve the recommendations of the report of the Buddhist Committee of Inquiry."[38]

சிங்கள மொழி பெயர்ப்பிலே ஐந்தாவது வரியில் காணப்பட்ட generally என்பது விடப்பட்டிருந்தது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சொந்தக் கட்சியான S. L. F. P. யின் தேர்தல் அறிக்கையிலே பௌத்த மதம் பொறுத்துக் கூடிய ஈடுபாடு, முக்கியத்துவம் காட்டப்பட்டிருந்தது. அதில் நானூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சி புரிந்த மேலைத்தேய ஏகாதிபத்திய ஆட்சியாளர் பௌத்த மதத்தின் செல்வாக்கை அழிக்கும் வகையில் திட்டமிட்ட கொள்கையைக் கடைப்பிடித்தனர் என்றும், இலங்கையின் கலாசார தேசிய வாழ்வில் ஒன்றிணைந்ததாக பௌத்தம் விளங்குகின்றது எனவும், பௌத்த மதத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியை நீக்குவது அவசியமானதென்றும் குறிப்பிட்டிருந்தார்.[39] U. N. P. யின் தேர்தல் அறிக்கையிலும் பெரும்பான்மை மக்களின் மதமாகப் பௌத்தம் அங்கீகரிக்கப்படுவதாகவும், ஏனைய மதப் பிரிவினருக்குப் பாரபட்சம் காட்டப்படமாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் தேசிய விழாவான புத்த ஜயந்திக் கொண்டாட்டங்களிலே கூடிய ஈடுபாடு காட்டப்படுமெனவும், பௌத்த தலங்களைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுப் பௌத்த மதத்தின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் எனவும் குறிப்பிட்டது. மேலும் பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் கூடிய கவனம் செலுத்தும் எனவும் கூறியது.[40]



1952 இன் பொதுத்தேர்தலில் U. N. P. யுடன் உரோமன் கத்தோலிக்க திருச்சபை கொண்டிருந்த நெருங்கிய உறவு வளர்ச்சியடைந்து வந்த சிங்கள, பௌத்த இன உணர்வின் முன்னால் U. N. P. க்கு எதிராக அவர்களைச் செயற்பட வைத்தது. பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தவரும், மாக்ஸியக் கட்சிகளும் மேலைத்தேச ஏகாதிபத்திய வாதிகளின் உருவாக்கமான கத்தோலிக்க திருச்சபையையும், அதன் நடவடிக்கைகளையும் சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் கடும் எதிரிகளாகக் கருதிக் கொண்டனர். பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் கூடக் கத்தோலிக்க திருச்சபையின் அரசியல் தலையீடு, பலமான வகையிலே கண்டிக்கப்பட்டிருந்தது. புத்தஜயந்திக் கொண்டாட்ட நடவடிக்கைகளும், பௌத்த விசாரணைக் குழுவின் செயற்பாடுகளும் சிங்கள, பௌத்த மக்களிடையே தீவிர இன, மத, மொழி அடையாளத்தை வளர்த்து விட்டிருந்தன M. E. P. கூட்டணியினரின் பிரசாரங்களும் E. B. P. (ஏக்சத் பிக்கு பெரமுன) போன்ற பௌத்த பிக்குமார்களின் இயக்கங்களின் நடவடிக்கைகளும் பௌத்த மதத்தின் வீழ்ச்சிக்கு மேலைத்தேய ஏகாதிபத்தியமும், கத்தோலிக்க திருச்சபையும், சுதந்திரத்தின் பின்பாக ஆட்சி புரிந்த U. N. P. அரசாங்கங்களும் காரணமாயின என்பதைச் சாதாரண சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டின. E. B. P. யின் பிக்குகள் M. E. P. க்கு ஆதரவாக அரசியல் கூட்டங்களில் பேசியது மட்டுமல்ல வீடு வீடாகச் சென்று ஆதரவும் திரட்டினர். அவர்கள் பிரசார சுலோகமாக U. N. P. க்கு அளிக்கும் வாக்கு கத்தோலிக்கருக்கு அளிக்கும் வாக்காகும் என்பதும், M. E. P. இக்கு அளிக்கும் வாக்கு பௌத்தர்களுக்கு அளிக்கும் வாக்காகும் என்பதும் அமைந்திருந்தது.[41] சுதந்திரத்தின் பின்பாக நாட்டை ஆட்சி புரிந்தவர்கள் பற்றிப் பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

The value of this freedom was vitiated by the fact that those who came to the helm in the country's affairs were mainly people completely dominated by an alien outlook and values, and estranged from their national history and culture.[42]

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட M. E. P. கூட்டணியானது பௌத்த அடையாளங்களை மிகத் திறமையான வகையிலே கையாண்டு நாட்டுப்புறச் சிங்கள மக்களிடையே பெரும் ஆதரவைத் தேடிக் கொண்டது. மத்திய வகுப்பினருள் ஆங்கிலம் கற்ற ஒரு சிறுபிரிவினர் அரசியல் அதிகாரத்தைக்

யைப்பற்றிச் சமூகத்தில் மேலாதிக்கம் செலுத்துவதையும், சிங்கள மொழி மூலம் கற்ற மத்திய வகுப்பின் பெரும் பகுதியினர் அரசியல் அதிகாரம், சமூகத்தில் செல்வாக்கு இல்லாமல் இருப்பதனையும் எடுத்துக் காட்டியது. இப்பின்னணியில் சிங்கள, பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் புதிய சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப முற்பட்ட M. E. P. இக்கு—அச்சமுதாயத்தில் முக்கிய பங்கினை வழங்குவதாக உறுதியளித்த M. E. P. க்குப் பௌத்த பிக்குமார், ஆயுர்வேத வைத்தியர், சிங்கள மொழிமூல பாடசாலை ஆசிரியர், மரபுவழிக் கிராமத் தலைவர்கள் தங்கள் முழு ஆதரவையும் வழங்கலாயினர். இவ்வாறு மத்திய வகுப்பின் கீழ்மட்டத்தில் காணப்பட்ட பெரும்பாலான சிங்கள பௌத்த மக்களின் ஆதரவை M. E. P. பெற்றுக் கொண்டது. M. E. P. இவர்களின் பிரசாரங்களின் போது பௌத்த சிங்கள கலாசாரத்தில் வேரூன்றியிருந்த சிங்களப் பொதுமக்களின் கட்சியாகத் தன்னை அடையாளம் காட்டிக் கொண்டது. அதே போல் U. N. P யை மேலைத்தேயமயமான, கற்றோர் குழாத்துச் சலுகை பெற்ற உயர் வகுப்பினர், பெரு முதலாளிகள், நிலச்சுவாந்தர்களின் கட்சியாகக் காட்டிக் கொண்டது. U. N. P. அரசியல்வாதிகளை மேற்றுலக நாகரிக வாழ்வின் பொருட்டுச் சிங்கள பௌத்த கலாசாரத்தைக் கைவிட்டவர்களாக இவர்கள் சித்திரித்துக் காட்டினர். இதில் பெருமளவு உண்மையும் காணப்பட்டது.

1956 இன் தேர்தல் பிரசாரமானது இனவாத உணர்வினைப் பலமாகத் தூண்டி விட்டு அரசியல் இலாபம் தேடும் தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. இப்பிரசாரங்களில் முக்கிய இடத்தை மொழியும், மதமும் பெற்றுக் கொண்டன. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் வேட்பாளர் தன்னை மற்றைய வேட்பாளர்களிலும் பார்க்க சிங்களமொழி, பௌத்த மதம் பொறுத்துத் தீவிரவாதியாகக் காட்டி வெற்றி பெறுவதிலே ஈடுபட்டிருந்தனர்.

''every candidate will be trying to win the plaudits of his electorate by declaring himself to be more extremist than his opponent''[43]

இவ்வகையில் மொழி பொறுத்துத் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதாகவும், மதம் பொறுத்துக் கிறிஸ்தவத்திற்கு எதிரானதாகவும் இனவாத உணர்வுகள் தூண்டிவிடப்பட்டன.

1956 இன் பொதுத்தேர்தலில் M. E. P. கூட்டணியினர் 51 பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று மாபெரும் வெற்றியைப் பெற்



றனர். கூட்டணியின் பிரதான கட்சியாகிய S. L. F. P. 41 ஆசனங்களைப் பெற்றுத் தனி முதன்மையைப் பெற்றுக் கொண்டது. U. N. P. யோ படுமோசமான முறையிலே தோற்கடிக்கப் பட்டு எட்டு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக வரலாற்றிலே 1956 ஆம் ஆண்டு தனியானதொரு முக்கியத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. அந்த ஆண்டு இலங்கையின் பௌத்த மத வரலாற்றில் அதிமுக்கியத்துவம் பெற்ற ஆண்டாகக் காணப்பட்டது. புத்த ஜயந்தி, பௌத்த விசாரணைக்குழுவின் அறிக்கை, பௌத்தமதத்தைப் புனரமைத்து அதற்குரிய இடத்தை வழங்க வாக்குறுதி அளித்த அரசியல் கட்சியின் தேர்தல் வெற்றி, பிரதான அரசியல் சக்தியாக பௌத்த சங்கம் எழுச்சி பெறல் என்பவற்றைக் குறித்த ஆண்டாக 1956 விளங்கியது. பெருமளவிலே இன, மொழி, மத உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியலதிகாரத்தைப் பெறுவதற்கான வழியைக்காட்டிய ஆண்டாகவும், சிங்கள, பௌத்த பெரும்பான்மை மக்களின் மேலாதிக்கம் ஏனைய சிறுபான்மை மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட ஆண்டாகவும் அமைகின்றது. இனவாத அரசியலை வளர்ச்சிப்படுத்தியதன் மூலம் இலங்கையின் ஐக்கியம், ஒருங்கிணைப்பு, அபிவிருத்தி என்பவற்றிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வைத்த காலப்பகுதியின் ஆரம்பத்தையும் அது குறித்து நின்றது.

1956 பொதுத் தேர்தல் மூலம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்றிய எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பௌத்த மதத்தைப் புனரமைத்து அதற்குரிய இடத்தை வழங்குவதான தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவ்வகையில் அதிக எதிர்ப்பின்றியே இரு விடயங்களில் நடவடிக்கை எடுத்தார். முதலாவதாகக் கலாசார அலுவல்கள் அமைச்சு என்ற புதிய அமைச்சை ஏற்படுத்தினார். இரண்டாவதாக நாட்டில் இரு பௌத்த பல்கலைக்கழகங்களை நிறுவ முயற்சிகளை மேற்கொண்டார். கலாசார அலுவல்கள் அமைச்சு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பௌத்தமத விவகாரங்களிலே ஆழ்ந்த ஈடுபாட்டைக் கொண்டதாக இயங்கத் தொடங்கியது. இவ்வமைச்சின் நிகழ்ச்சித்திட்டம் பற்றிக் கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த மைத்திரிபால சேனநாயக்கா Our Religion is the Basis of our Culture என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை மூலம் அறிய முடிகின்றது.

Since the day Arahat Mahinda introduced Buddhism into Ceylon the life and thought of the people of this country have

been molded by this message. Throughout our hisrory we find that all aspects of our culture have had Buddhism as their background[44]

இப்பின்னணியில் இலங்கையில் வாழ்ந்த ஏனைய மதப்பிரிவினரைப் புறக்கணிக்கும் தன்மை கொண்டதாகக் கலாசார அலுவல்கள் அமைச்சு காணப்பட்டதெனலாம். 1954 இல் U. N. P. அரசாங்கம் புத்த ஜயந்தி தின நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், வழிப்படுத்துவதற்குமென் நியமிக்கப்பட்ட லங்கா பௌத்த மண்டலயவின் (Buddhist Council of Ceylon) நீண்ட காலத்திட்டங்கள் பல இப்புதிய அமைச்சின் கீழ் 1956 இன் பின்பாகக் கொண்டு வரப்பட்டன. அவற்றுள் முக்கியமானவையாகப் புத்த ஜயந்தி தின ஞாபகார்த்தக் கட்டிடங்கள் அமைத்தல், தலதா மாளிகையின் புனரமைப்பு, பௌத்த கலைக் களஞ்சியம், சிங்கள, பாளி திரிபிடகங்கள் என்பவற்றின் தொகுப்பும், பதிப்பும் காணப்பட்டன. கலாசாரஅமைச்சின் கீழ் இந்து, முஸ்லிம் மத விவகாரங்களுக்கான ஆலோசனைச் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் அவை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கவனிக்கப்பட்டன. பௌத்த நிகழ்ச்சித் திட்டங்கள் நேரடியாகவும் ஒழுங்காகவும் இத்திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட்டன. இந்து, இஸ்லாம் மதங்கள் பொறுத்து அம்மத நிறுவனங்களுக்கு வழக்கமான நிதி உதவி வழங்குவதுடன் அரசின் செயற்பாடு முற்றுப் பெற்றது.

கிறிஸ்தவ ஞாயிறு பாடசாலைகளைப் பின்பற்றித் தர்ம பாடசாலைகளில் இலவச நூல்கள் வழங்கப்பட்டதுடன், அகில இலங்கைப் பௌத்த காங்கிரசின் பௌத்த மத நடவடிக்கைகளுக்காக வருடாந்த மானியம் அரசினால் வழங்கப்பட்டது. Y. M. B. A. (Young Men Buddhist Association) க்குத் தர்மப் பரீட்சைகளை நடாத்துவதற்காக வருடாந்த நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 'Gautama the Buddha' என்ற சினிமாப்படம் அரசாங்கத்தால் வாங்கப்பட்டு நாடு பூராவும் காட்டப்படுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. கட்டிடங்களைக் கட்டுவதற்கான நிதியுதவி, விகாரைகள், மடாலயங்கள், பிரிவேனாக்களுக்கு வழங்கப்பட்டன. புதுடில்லி, லண்டன், மேற்கு பேர்லின் ஆகிய நகரங்களில் உள்ள பௌத்த மிஷனரிகள் கலாசார அமைச்சின் நிதியுதவியைப் பெற்றுக் கொண்டன.[45]

கலாசார அலுவல்கள் அமைச்சு பௌத்த மத அபிவிருத்தி பொறுத்து மேற்கொண்ட மற்றோர் நடவடிக்கை பலம் வாய்ந்த அமைப்பு ரீதியிலான இணைப்பை நாடு பூராவிலுமுள்ள 'பௌத்த



கோயில்களுடன் ஏற்படுத்திக் கொண்டதாகும். கிறிஸ்தவ நிறுவனங்கள் ஏற்படுத்தியிருந்த பலம் வாய்ந்த நிறுவன ரீதியான அமைப்பு ஒன்றின் அவசியம் பற்றிப் பௌத்த விசாரணைக் குழுவினரும் அதிக அக்கறை கொண்டிருந்தனர். பௌத்த மத விவகார ஆலோசனைச் சபையினரின் சிபார்சின் படி 4000 அளவிலான கோவில் சங்கங்கள் (Vihara Sasanarakshaka Societies - Temple Societies) அங்கீகரிக்கப்பட்டுக் கலாசாரத் துறையுடன் இணைந்து பௌத்த மத அபிவிருத்திக்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டன. கலாசார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மாதிரி யாப்பு மூலம் இச்சங்கங்கள் இயங்கலாயின. நாட்டின் 88 வருமான இறைப் பகுதிகளிலும் பிராந்திய கோவில் சங்க அமைப்பு (Regional Sasanarakshaka Bureau) ஏற்படுத்தப்பட்டுப் பௌத்த பாராளுமன்ற அங்கத்தவரும் இடம் பெறும் வகையில் செயற்பட்டது. இவ்வாறு பலம் வாய்ந்த ஒழுங்கமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டமை பிற்காலத்தில் ஏற்பட்ட பௌத்தமத வளர்ச்சிக்கும், சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் எழுச்சிக்கும் பெருமளவு துணைபுரிந்தது எனலாம்.

பௌத்தமதத்திற்கு உரிய இடத்தை அளிக்கும் வகையில் பண்டாரநாயக்காவின் அடுத்த நடவடிக்கை இரு பௌத்த பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தியமையாகும். உண்மையில் இரு பிரசித்தி பெற்ற பௌத்த பிரிவேனாக்களாக, உயர் கல்வி நிலையங்களாக இருந்த வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் தரம் உயர்த்தப்பட்டுப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டன. இவ்விரண்டும் 'for the advancement and dissemination of knowledge and for the promotion of Sinhala and Buddhist culture'

என்ற வகையில் சிங்கள, பௌத்த கலாசார அபிவிருத்தியின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டவை.[46] அரசாங்கம் இப்பல்கலைக்கழகங்களில் நவீன பாணியிலான புதிய கட்டிடங்களை அமைப்பதற்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டது.

பண்டாரநாயக்கா பௌத்தமத அபிவிருத்தி தொடர்பாக மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கை பௌத்த சாசன கமிஷனை நியமனம் செய்ததாகும். 1951 ஆம் ஆண்டில் அப்போதைய பிரதமரான டி. எஸ். சேனநாயக்காவிடம் இத்தகைய கமிஷன் ஒன்று நியமிக்குமாறு கேட்கப்பட்டது. ஆனால் உத்தியோக பூர்வ பௌத்த சாசன கமிஷன் நியமிக்கப்படாததைத் தொடர்ந்து 1954இல் அகில இலங்கைப்

பௌத்த காங்கிரஸ் உத்தியோகப் பற்றற்ற வகையில் பௌத்த விசாரணைக் குழு (B. C. I) ஒன்றினை நியமனம் செய்தது. பண்டார நாயக்கா பதவிக்கு வந்ததும் 1957 இல் உத்தியோகபூர்வமான முறையில் பௌத்த சாசன கமிஷன் நியமனம் இடம் பெற்றது. இக்கமிஷன் நியமனம் கூட பௌத்த விசாரணைக் குழுவின் அறிக்கையில் பிரதான இடத்தைப் பெற்றிருந்தது. இவ்வகையில் பண்டாரநாயக்காவின் பௌத்த மத அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் அவர்களது தேர்தல் அறிக்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பௌத்த விசாரணைக் குழுவின் சிபார்சுகளைப் பெருமளவு பின்பற்றியனவாக அமைந்திருப்பதனைக் காணலாம். அவர் நிறைவேற்றாத ஏனைய சிபார்சுகளை அடுத்து வந்த அரசாங்கங்கள் நிறைவேற்றி வைப்பதன் மூலம் எத்தனைக்கு அரசியல் விவகாரங்களில் பௌத்த மதம் பிரதான இடத்தைப் பெற்றுக் கொண்டது என்பதனையும் அறிந்து கொள்ளலாம். வளர்ந்து வந்த சிங்கள பௌத்த தேசியவாதமானது இத்தீவில் வாழும் ஏனைய இன, மத, மொழி மக்களைப் பொருட்படுத்தாத வகையிலே சிங்கள, பௌத்த மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயற்படலாயிற்று.

பௌத்த மதத்தை அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்குக் கருவியாகப் பயன்படுத்தத் தொடங்கியதை அடுத்து ஏற்பட்ட மாற்றங்கள் இத்தீவில் வாழும் ஏனைய இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மதப்பிரிவினரைப் புண்படுத்தும் தன்மை கொண்டனவாக அமைந்தன. இதுவரை பேணப்பட்டு வந்த மதச்சார்பின்மையானது புறக்கணிக்கப்பட்டுப் பௌத்த மதம் அரச ஆதரவு பெற்ற மதமாக அங்கீகாரத்தைப் புத்த ஜயந்திக் கொண்டாட்டங்களோடு பெற்றுக் கொண்டது. சிங்களம் மட்டும் அரச கரும மொழிச்சட்டம் பொருளாதார, அரசியல் துறைகளில் சிறுபான்மையோர் பொறுத்து ஏற்படுத்திய பாரதூரமான பாதிப்பினைப் போன்று, பௌத்த மத அபிவிருத்தி பொறுத்து இக் காலப்பகுதியில் (56 – 59) அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அமைந்திருக்கவில்லை. காரணம் இந்நடவடிக்கைகள் சிறுபான்மை மக்களைப்பாதிக்கும் அரசியல், பொருளாதார அம்சங்களோடு தொடர்பு கொண்டிருக்கவில்லை. ஆனால் சிறுபான்மையினர் தத்தம் மதங்களுக்கு வழங்கப்படாத கௌரவம், சலுகைகள், ஆதரவு பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டமையால் மத சமத்துவம் பொறுத்து வேதனை கொண்டவர்களாகவே காணப்பட்டனர். பௌத்த மதத்திற்கான அரச ஆதரவு காலப்போக்கில் ஏனைய சிறுபான்மை இன மக்களின் அரசியல், பொருளாதார, கலாசார நலன்களுடன் முரண்படும் வகை



யில் அமையவே மதம் பொறுத்த அரசின் கொள்கை தீவிர இன, அரசியல் பிரச்சினைகளுக்கு வழி வகுப்பதாயிற்று.

பண்டாரநாயக்கா பௌத்த பிக்கு ஒருவனால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1960களில் இடம் பெற்ற பொதுத் தேர்தல்களில் பௌத்த குருமாரின் அரசியல் நடவடிக்கைகள் தடைப்பட்டிருந்தன. பௌத்த பிக்குகளின் அரசியல் ஈடுபாட்டிற்கான பொது மக்களின் அபிப்பிராயம் இப்போது மாறானதாகக் காணப்பட்டது. அத்துடன் M. E. P., S. L. F. P. போன்ற கட்சிகள் பௌத்த பிக்குகளின் ஆலோசனை, ஆதரவை வேண்டியதுடன் தேர்தல் பிரசாரங்களில் தங்களுடன் கலந்து கொள்ள வேண்டாமென்றும் கூறியிருந்தன.[47] அப்படியிருந்தபோதும் பிரதான அரசியல் கட்சிகள் பௌத்த மதத்தை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு கருவியாகத் தங்கள் தேர்தல் அறிக்கைகளிலே பயன்படுத்தியிருந்தன. M. E. P. தனது தேர்தல் அறிக்கையிலே பௌத்த விசாரணைக் குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி அளித்திருந்தது.[48] அத்துடன் பொருத்தமான நிறுவனங்களை ஏற்படுத்திப் பௌத்த சங்கத்தைச் சீர்திருத்துவது, சிங்கள மன்னர் காலத்தைப் போன்று பௌத்த சங்கத்தினரின் கல்விக்கு அரசு பொறுப்பேற்றல், பௌத்த கோவில்களைக் கலாசார மையங்களாக அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், வெளிநாட்டு மிஷனரிமார் இங்கு வருவதைக் கட்டுப்படுத்தல் போன்ற வாக்குறுதிகளை அளித்திருந்தது. M. E. P. யைப் பின்பற்றியே S. L. F. P. யும் பௌத்தர்களின் குறைபாடுகளைப் பயன்படுத்தி வாக்குப்பெற முயற்சித்தது.[49] இலங்கையில் பௌத்த மதமானது பெரும்பான்மை மக்களின் மதமாக இருப்பதை ஏற்றுக் கொள்வதுடன், மத அடிப்படையில் எவருக்கும் பாரபட்சம் காட்டப்படமாட்டாதென்றும், குறிப்பிட்டது. அரசின் பௌத்த மதத்திற்கான தாராள ஆதரவினால் ஏனைய மதத்தவர் பொறுத்துப் பாரபட்சம் காட்டப்பட்டே வந்துள்ளது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிங்கள பௌத்த மக்கள் நாட்டின் பொதுத்துறையில் (Public Sector) உரிய பங்கைப் பெறுதல் என்பது இப்பாரபட்சத்தின் அடிப்படையாக அமைந்தது. மேலும், பண்டாரநாயக்கா அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பௌத்த சாசன கமிஷனின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ளும் என்று குறிப்பிட்டது.

இந்த இரு பௌத்த அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடுகையில் U. N. P. யானது பௌத்த மக்கள் மத்தியிலே மத நடவடிக்கை

பொறுத்து முக்கியத்துவம் பெறாத கட்சியாகவே காணப்பட்டது. அத்துடன் U. N. P. கட்சியானது சிங்களப் பிரதேசங்களில் வளர்ச்சியடைந்து வந்த பௌத்த பொதுசன அபிப்பிராயத்தினால் பாதிக்கப்பட வேண்டியதாயிற்று. The President of the U. N. P. Dudley Senanayake asserted in a message to the party that national unity had received "severe reverses" and that during the recent past "the forces of distruption represented by the extremists" had exploited race, religion, poverty, and most susceptible and inflammable, passions of the people to confuse and destroy the national structure.[50] இவ்வாறு டட்லி சேனநாயக்கா தேசிய ஒற்றுமையானது இன, மொழி, வறுமை மற்றும் தீவிர உணர்வுகளைப் பயன்படுத்தி தீவிரவாதிகளினால் அழிக்கப்படுவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

*1960* தேர்தல் அறிக்கையிலே U. N. P. எல்லோருக்கும் மத சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளித்ததுடன், இலங்கையின் கலாசார, பௌதிகப் பெறுமானங்களைப் பேணிப் பாதுகாக்கும் அயராத முயற்சிக்கு ஆதரவு கொடுப்பதாகவும் குறிப்பிட்டது.[51] பௌத்தமதம் பொறுத்துச் சினேக பூர்வமாகத் தலையிடும் கொள்கையை அது ஏற்றது. The Nikayas (Sects of the Sangha) would with their consent, be accorded corporate status by law. An organization comprising representatives of the Buddhist clergy and Laity would be established to work for the welfare of both sections. But this would be done without infringing the autonomy of the Nikayas."[52]

*1958* மார்ச்சில் அங்கீகரிக்கப்பட்ட U. N. P. கட்சியின் கொள்கை விளக்க அறிக்கையிலே பௌத்த சங்கத்தைப் பற்றியோ, பௌத்தர்களின் குறைபாடுகள் பற்றியோ, அவற்றைச் சீர்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றியோ எவ்விதகுறிப்பும் காணப்படவில்லை. *1960* பொதுத் தேர்தலுக்குச் சிறிது முன்பாகத்தான் சிங்கள, பௌத்தர்களைப் பாதிக்கும் இவ்விடயம் பற்றிச்சில தகவல்கள் சேர்க்கப்பட்டிருந்தன. அந்தச் சந்தர்ப்பத்தில் கூட பௌத்த விசாரணைக் குழுவைப் பற்றி ஒரு சொல் கூடச்சேர்க்கப்படவில்லை, பௌத்த மக்களின அபிப்பிராயப்படி U. N. P. யின் கொள்கைகளும், நிகழ்ச்சித்திட்டங்களும் பௌத்த மக்களைக் கவரக் கூடிய தன்மை கொண்டனவாகக் காணப்படவில்லை. நாட்டுப்புறச் சிங்கள, பௌத்த மக்களிடையே U.N.P. யானது *1956* ற்கு முன்பாகச் சித்தரிக்கப்பட்ட தோற்றமுடையதாகவே இப்போதும் காணப்பட்டது. அதாவது செல்வந்தர்



களுடையதும், சலுகை பெற்ற வகுப்பினருடையதும், சிங்கள, பௌத்த நாகரிகத்திற்கு அன்னியப்படுத்தப்பட்ட மேலைத்தேச நாகரிகத்தை ஏற்றுக் கொண்ட ஒரு பிரிவினரின் ஆதிக்கத்தில் உள்ள கட்சியாகவே கருதப்பட்டது. பௌத்த தீவிரவாதிகளினாலும், சிங்கள, பௌத்த அழுக்கக் குழுக்களினாலும் U.N.P. யானது சிங்கள, பௌத்த மக்களின் மதரீதியான, பொருளாதார ரீதியான குறைபாடுகளை நீக்கப் பாடுபடும் கட்சியாக இன்னும் தான் ஏற்றுக் கொள்ளப்படாதிருந்தது. இக்காரணங்களினால் 1960 மார்ச் பொதுத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாமல் போனதுடன் 1960 ஜூலைத் தேர்தலில் பொருளாதார, இனவாத சக்திகளுக்குத் தலைமை தாங்கிய திருமதி பண்டாரநாயக்காவினால் மோசமான முறையிலே தோற்கடிக்கப்பட்டது.

The inadequacies of the U. N. P.'s economic policies and its lack of feivor and seeming dedication to the "national" religion and the "national" language were exposed to the world by its national - minded adversary, the Sri Lanka Freedom Party.[53]

*1956* இன் பொதுத் தேர்தலிலிருந்து இன, மொழி, மத உணர்வுகளைத் தூண்டி விட்டு அரசியலதிகாரத்தைச் கைப்பற்றுவதற்கான முயற்சி காணப்பட்டது. *1960* இன் இரு பொதுத்தேர்தலிலும் இவ்வுணர்வுகள் கிளறி விடப்பட்டன. இறுதியில் இவ்வகையில் அதிகாரத்தைக் கைப்பற்றிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான ஆட்சி இலங்கையில் சிங்கள, பௌத்த மேலாண்மைக்கு மேலும் வலுவூட்டியது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஜனநாயகக் கோட்பாட்டடிப்படையிலும், அரசின் அடிப்படையிலான (Preserve of the fundamental Liberal values of the state) தாராள பெறுமானங்களைப் பாதுகாப்பதின் அடிப்படையிலும் தனது தேசிய திட்டத்தை நிறைவேற்ற முற்பட்டார். ஆனால் அவர் பின் ஆட்சி பெற்ற திருமதி பண்டாரநாயக்காவோ அவ்வித இலட்சியவாதங்களுடன் ஈடுபாடு இன்மையின் காரணமாகச் சிங்கள பௌத்த மறுமலர்ச்சியின் சக்திகளுக்கு முழுவேகத்துடன் செயற்படுவதற்கான வாய்ப்பை அளித்தார். இந்நிலை பற்றிப் பேராசிரியர் அரசரத்தினம் அவர்கள் குறிப்பிட்டிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது.

Here regime gave full play to the force of Sinhalese and Buddhist revivalism. Attacks were made on various minority interests which these minorities felt went beyond the bounds of

reducing privilege and redressing past wrongs. The state became a powerful instrument in promoting Sinhalese welfare and was made to extend its tentacles into many new avenues of economic and social life.[54]

**1960** இல் அதிகாரம் பெற்ற S.L.F.P. அரசாங்கம் உரோமன் கத்தோலிக்க திருச்சபைக்கு எதிரான வகையில் அரச உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டது. தங்களுடைய பாடசாலைகளைத் தேசியமயமாக்குவதற்கு கத்தோலிக்கர் கடும் எதிர்ப்புத் தெரிவித்த போதும், இறுதியில் கைவிட வேண்டியவராயினர். சிங்களப் பிரதேசங்களில் மட்டுமல்ல தமிழ்ப் பிரதேசங்களில் காணப்பட்ட மிஷனரி பாடசாலைகளும் இதனால் பாதிப்பிற்கு உள்ளாகின. இம்முயற்சிக்கு S.L.F.P. யுடன் L.S.S.P., C.P. ஆகியன பூரண ஆதரவைப் பாராளுமன்றத்தில் அளித்ததுடன், இக்கட்சிகளின் சில தலைவர்கள் அரசாங்க பேச்சாளர்களாகவும் நடந்து கொண்டனர். பௌத்த பொது சன அபிப்பிராயத்திற்கு மாறாக U.N.P. யினர் பாடசாலைகளைத் தேசியமயமாக்கும் முயற்சிக்கு எதிராக வாக்களித்தனர். F.P. யும் தேசியமயமாக்கத்திற்கு எதிரான வகையில் வாக்களித்தது. ஐயத்திற்கிடமில்லாத வகையில் பெரும்பான்மைச் சிங்கள, பௌத்தர்களுக்கு உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைத் தேசியமயமாக்கிய அரசாங்கத்தின் நடவடிக்கை பெருமளவிலான திருப்தியைக் கொடுத்தது.

சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் சிங்கள அரச கருமமொழியின் பூரண அமுலாக்கம் பொருந்திய நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்விடயம் நீதிமன்றம், பாராளுமன்றம், நிர்வாகம் என்ற மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டிருந்தது. 1960 டிசம்பர் மாதத்தில் தமிழ்ப்பிரதேசங்களை உள்ளடக்கிய இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் உள்ள நீதிமன்றுகளிலும் நீதிமன்ற மொழியாகச் சிங்களமே இருக்கவேண்டுமென்று சட்டம் நிறைவேற்றப்பட்டது.[55] தமிழரசுக் கட்சியினால் தீவிர எதிர்ப்பு காட்டப்பட்ட போதிலும் நீதிமன்ற மொழிச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய மொழியாகச் சிங்களம் மட்டுமே இருக்க வேண்டுமென்பது பின்னர் சமகால தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் வழங்கப்படும் என்ற திருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. சிங்களம் மட்டும் அரசகரும மொழிச்



சட்டத்திலே போடப்பட்டிருந்த காலக்கெடுத் திகதியான டிசம்பர் **31, 1960** என்பதைத் தமிழ் அரசாங்க ஊழியர் சிங்களத் தேர்ச்சி பெறுவது தொடர்பாக பிற்போடுமாறு தமிழரசுக் கட்சியினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அத்துடன் ஜனவரி **1, 1961** இலிருந்து நாடு பூராவும் சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்பது முழுவேகத்துடன் அமுல் செய்யப்படும் என்ற அரசாங்க அறிவிப்பும் பிரகடனப்படுத்தப்பட்டது. இத்தகைய அறிவிப்பிற்கு அரசாங்கத்தில் இருந்த சிங்கள, பௌத்த தீவிரவாதிகளின் தீவிர வற்புறுத்தலே காரணமாகும். அதே சமயம் சிங்கள, பௌத்த தீவிரவாதியான கே. எம். பி. ராஜரட்ணாவும் அவரது தேசிய விடுதலை முன்னணியினரும் (National Liberation Front) சிங்களம் மட்டும் அரசகருமமொழிச் சட்டம் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், ஆங்கிலத்தில் தான் இன்னமும் அரசாங்க இலாகாக்கள் இயங்குகின்றன என்றும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களத்தை நிர்வாக மொழியாகப் பயன்படுத்தச் சிறிதளவிலான முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டன என்றும் குற்றம் சாட்டி எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இதில் சிறிதளவு உண்மை இருந்த போதும் அரசியல், நிர்வாகக் காரணங்களுக்காக அரசாங்கம் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே பௌத்த மதமும், அது சார்ந்த அமைப்புக்களும் முக்கியமாகப் பௌத்த சங்கமும் தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு மாறானவகையிலே செயற்பட்டு வந்திருப்பதனைக் காண்கின்றோம். இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஓரளவு நீதியான தீர்வுகள் முன்வைக்கப்படும் காலங்களில் எல்லாம் இந்தப் பௌத்த அமைப்புக்கள் நாடு தழுவிய கடும் எதிர்ப்பைத் தெரிவித்து அவற்றை நடைமுறைப்படுத்தாமல் ஒதுக்குவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. சிங்கள மொழியும், பௌத்த மதமும் இறுக்கமான வகையிலே பின்னிப் பிணைந்திருப்பது இதற்குக் காரணமாக இருந்த போதிலும், பௌத்த அமைப்புக்களின் அளவுக்கதிகமான அரசியல் ஈடுபாடு நாட்டிற்குத் தீமையையே நீண்டகாலப் பின்னணியில் ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியில் இருந்த அரசியல்வாதிகளும் தம்மைத் தீவிர சிங்கள, பௌத்த நலன் பேணுபவர்கள் என்பதனைக் காட்டவும், ஆட்சியாளர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் பௌத்த அமைப்புக்களையும், பௌத்த மதத்தையும் பயன்படுத்தி அரசியல் இலாபம்தேட முற்பட்டமை நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வழி வகுத்துள்ளது. 1957 இல் பண்டார

நாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தத்தை கிழித்தெறியச் செய்தமைக்கும், 1965 இல் டட்லி – செல்வா ஒப்பந்தத்தை செயலிழக்கச் செய்தமைக்கும் அரசியல் வாதிகள் பௌத்த அமைப்புக்களைப் பயன்படுத்தியிருந்தமை நன்கு தெரிந்த விடயமே. தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் தொடர்பாக ஆட்சியாளர் எடுக்கும் நடவடிக்கைகளைத் தோல்வியுறச் செய்வதற்குப் பௌத்த மதத்தை ஒரு பிரதான கருவியாக எதிர்க்கட்சியினர் பயன்படுத்தியிருப்பதனை இலங்கை அரசியல் வரலாற்றில் அடிக்கடி காணமுடிகின்றது. அதே சமயம் சிறுபான்மையோரின் உரிமைகளைப் புறக்கணித்துச் சிங்கள, பௌத்த மக்கள் நலன்களைப் பேணும் விடயங்களில் எல்லாம் பௌத்த அமைப்புக்கள் தம் பூரண ஆதரவினைத் தெரிவித்திருப்பதனைக் காணலாம். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாகச் சிங்களம் மட்டும் அரசகரும மொழி இயக்கத்தில் பௌத்த சங்கத்தினதும், பௌத்த அமைப்புக்களினதும் பிரதான பங்கு, பணியைக் குறிப்பிடலாம். சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியிலே பிரதேச சபைகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், சிங்கள பௌத்தத் தீவிரவாத அமைப்பான ( Bauddha Jatika Balavegaya – National Front for the Protection of Buddhism ) பௌத்த ஜாதிக பலவேகய இது நாட்டைத் துண்டாடும் திட்டம் என்ற கடும் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது.[56]

1962 ஜனவரி பிற்பகுதியில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதிப்புரட்சி முயற்சி ஒன்றை இராணுவ, பொலிஸ் படையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் சிலர் மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இவர்களுள் பெரும்பாலானோர் உரோமன் கத்தோலிக்கராக இருந்தவர். பௌத்த மதத்தின் உண்மையான பாதுகாவலராகத் தாங்கள் இருந்தமையால் நான் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும், அது வெற்றி பெற்றிருந்தால் இலங்கையில் பௌத்த மதம் முடிவைக் கண்டிருக்கும் என்றும் அரசாங்கத்தால் கூறப்பட்டது. அத்துடன் U.N.P யுடன் இதனை தொடர்புபடுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. சதி முயற்சியைத் தொடர்ந்து இராணுவ, பொலிஸ் பாதுகாப்புப் படை முறைகள் புனரமைக்கப்பட்டு, அவர்களுக்கு நம்பிக்கையானவர்கள் பொறுப்பான பதவிகளில் அமர்த்தப்பட்டனர். ஏனைய சிறுபான்மை இன, மத, மொழி மக்கள் புறக்கணிக்கப்பட்டுப் பௌத்த, சிங்கள ஒரினத்தன்மை கொண்டதாகப் பாதுகாப்புப்படை புனரமைக்கப்பட்டது.



சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் முரண்படும் தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. அவரது ஆட்சியின் முற்பகுதியானது சிங்கள, பௌத்த மக்களின் பெருமளவு ஆதரவைப் பெற்ற நடவடிக்கைகளை மேற்கொண்ட காலப்பகுதியாக அமைகின்றது. இனப்பிரச்சினை தொடர்பாகத் தாராளக் கொள்கைகளை கடைப்பிடித்த றொட்ஸ்கிய வாதிகளுடன் சேர்த்து கூட்டணி அரசாங்கம் அமைத்த இறுதிக் காலப் பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கைகள் சிங்கள, பௌத்த சக்திகளுடன் இணங்காத தன்மை கொண்டனவாக அமைந்துள்ளன. பிரதமர் தனது கொள்கைகளை றொட்ஸ்கிய வாதிகள் ஏற்றுக்கொண்டு விட்டனர் என்று வற்புறுத்திக் கூறினாலும், அவர்களோ தங்களைத் தொடர்ந்தும் மாக்ஸீயவாதிகள் என்றே குறிப்பிட்டு வந்தனர். திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கமானது மிக நெருங்கிய வகையிலே பௌத்த சங்கத்துடனும், பௌத்த அழுக்கக் குழுக்களுடனும் தொடர்பு கொண்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் அவர்களுடன் முரண்படும் தன்மையும் கொண்டிருந்த போதும் திருமதி பண்டாரநாயக்கா தன் தேவைக்கேற்ற வகையில் பௌத்த சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டார். அவரது சட்டவாக்க நடவடிக்கைகள் பௌத்த சிங்களத் தீவிரவாதிகளைக் (Extremist) திருப்திப் படுத்தாவிடினும் பெருந்தொகையான சிங்கள, பௌத்தர்களுக்கு பெருந் திருப்தியை அளித்தவையாக அமைந்தன. அவரது நடவடிக்கைகள் சிறுபான்மையினரைத் தான் அன்னியப்படுத்தும் தன்மை கொண்டனவாக அமைந்தன.

1965 மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் S.L. F.P. யும் அதன் கூட்டாளிகளான மாக்ஸீயக் கட்சிகள் ஒருபுறமும் U. N. P. யும், S. L.F. P யிலிருந்து பிரிந்து சென்ற C. P. de, சில்வா தலைமையிலான குழுவினர் மறுபுறமாகவும் போட்டியிட்டனர். வழமை போலவே தீவிர இன, மொழி, மத உணர்வுகள் தூண்டிவிடப்பட்டு அரசியலதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1947 பொதுத் தேர்தலிலே மாக்ஸீயவாதிகளுக்கு எதிராக ஒலித்த "Religion in danger" என்ற குரல் மீண்டும் S. L. F. P. கூட்டணியினருக்கு எதிராக ஒலிக்கத் தொடங்கியது. U. N. P. யினரின் தேர்தல் பிரசாரத்திலே இலங்கையில் ஜனநாயகத்திற்கும், பௌத்தத்திற்கும் ஆபத்து மாக்ஸீய வாதிகளினால் ஏற்படப் போவது பற்றியும், அவர்கள் S. L. F. P. யில் மிகவிரைவில் ஊடுருவி அதனைக் கைப்பற்றி விடுவார்கள் என்பதும் முக்கிய இடம் பெற்றன. U. N. P.

பௌத்த பிக்குகளின் ஆதரவைக் குறிப்பிடத்தக்களவு பெற்றுக் கொண்டதுடன் U. N, P க்கு ஆதரவான பௌத்த பிக்குகளின் அமைப்புக்கள் நாடு பூராவும் ஆரம்பிக்கப்பட்டன,[57] முன்னைய பொதுத் தேர்தல்களைப் போலவே பௌத்த சங்கம் வலிமைமிக்க அரசியல் சக்தியாக இயங்கலாயிற்று. மல்வத்தைப் பிரிவின் மகாநாயக்கதேரர் மாக்ஸீயவாதிகளைக் கடுமையான மொழியில் கண்டித்திருந்தார்.[58] மறுவகையில் S. L. F. P. யும் மாக்ஸிய கூட்டணியினரும், U. N. P, யினரைக் கத்தோலிக்க திருச்சபையினதும், மேலைத்தேய முதலாளித்துவத்தினதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் கையாட்கள் என்றும், தமிழர்களிடம் U. N. P. யினர் விலைபோய் விட்டார்கள் என்றும் பிரசாரம் செய்தனர்.

1956 இலிருந்து 1965 வரை அதிகாரத்திலிருந்த இரண்டு பண்டாரநாயக்காவின் அரசாங்கங்களும் நாட்டில் சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தைத் தாம் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் மூலம் ஏற்படுத்திக் கொண்டன. சிங்களத்தை அரசகரும மொழியாக்கியது போன்று பௌத்த மதத்தை அரச மதமாக்காவிட்டாலும் அரச ஆதரவு பெற்ற மதமாக ஆக்கிக் கொண்டன. இக்காலப்பகுதியில் எதிர்க்கட்சியாக இருந்த U. N. P. பௌத்த, சிங்கள மேலாண்மை பொறுத்த நடவடிக்கைகளுக்குத் தனது பூரண ஆதரவை வழங்கியதுடன் தமிழ் பேசும் மக்களின் மொழி, மதரீதியிலான புறக்கணிப்பு நடவடிக்கைகளுக்கு எவ்வகை எதிர்ப்பையும் காட்டாதிருந்தது. இக்காலப்பகுதியில் தமிழ் பேசும் மக்களின் மத சுதந்திரம், வழிபாட்டுரிமைகள் முழுவதுமாகப் பறிக்கப்பட்டன என்பதன்று. ஆனால் அரசாங்கம் பௌத்த மதத்திற்கு அளித்த தனிப்பட்ட அரச ஆதரவு, பாதுகாப்பு, அதன் அபிவிருத்திக்கு ஆற்றிய தொண்டு தமிழ் பேசும் மக்கள் சார்ந்த ஏனைய மதங்களுக்கு வழங்கப்படாத வகையில் புறக்கணிப்பு ஏற்படுத்தப்பட்டது.

1963 இல் நடைபெற்ற U. N. P. யின் வருடாந்த மகாநாட்டிலே மதம் பொறுத்து கட்சியின் விரிவான அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் பின்வருமாறு மதம் பற்றிய அதன் கொள்கைக்கு முன்னரிலும் பார்க்க அழுத்தம் வழங்கப்பட்டிருந்தது.

"We would like to say at the outset," stated the Party pamphlet, "that our party has the highest regard for Religion... the long years of servitude have left their mark, and the claim of Buddhists



நூலகம்

that the wrongs done to them should be righted, and that the place Buddhism occupied when we were free and kings ruled according to Dhasa Raja Dharma should be restored is a just one."[59]

இவ்வகையில் U. N. P. யினர் அரசியல் ஆதாயத்தோடு பௌத்த மதத்தின் தனித்துவம் பேணுவதிலே தமக்கிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

1965 இன் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவைப்பட்ட அறுதிப்பெரும்பான்மை இல்லாத நிலையில் தமிழரசுக் கட்சியுடன் உடன்பாடொன்றைக் கண்டு அவர்களையும் அங்கமாகக் கொண்ட தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தது. 1956 இன் பின் முதன்முறையாகத் தமிழர் ஒருவர் மந்திரி சபையிலே இடம்பெறும் வாய்ப்பு இதன் மூலம் ஏற்பட்டது. தேசிய அரசாங்கமும் இன, மத, சமூக வேறுபாடின்றிச் சகலருக்கும் நீதியின் அடிப்படையிலும், மனித உரிமையின் அடிப்படையிலும் செயலாற்றும் எனவும், பௌத்த மதத்திற்குரிய ஸ்தானம் அளிக்கும் அதேவேளை இதர மக்களின் சுதந்திர வழிபாட்டுரிமைகள் மதிக்கப்படுமென்றும், சிங்கள மக்களும், தமிழ் மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் உத்தியோகமொழிச் சட்டத்தின் கீழ் தேவையான ஒழுங்கு விதிகள் இயற்றப்படும் எனவும் தனது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தியது.[60]

சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டவற்றுள் மதம் பொறுத்துத் தேசிய அரசாங்கத்தின் நடவடிக்கை எத்தகையதாக அமைந்தது என்பதனை இங்கு கவனிப்பது பொருத்தமானதாகும். 1965 இன் U. N. P. யின் தேர்தல் அறிக்கையிலே,

"We believe that Buddhism is the very life of the Sinhalese people inspiring their literature, art, architecture and civilization. We are opposed to the control of the Buddhist Sangha by the Government or by laity... while restoring Buddhism to the place it occupied when Lanka was free Kings ruled according to the Dasha Raja Dharma. We shall respect the rights of those who profess other faiths and ensure to them freedom of worship'

என்று குறிப்பிட்டது.[61] இதில் குறிப்பிடப்பட்டது போன்று பௌத்த மதத்திற்கும், பௌத்த சங்கத்திற்கும் முதன்மையும், ஆதரவும் தேசிய

அரசாங்கத்தால் நல்ல முறையில் கொடுக்கப்பட்டன. ஆனால் ஏனைய மதங்களுக்கான சுதந்திரமும், மதிப்பும் அளிக்கப்படுதல் என்பது வெறும் தேர்தல் பிரசாரம் என்ற அளவில் தான் காணப்பட்டது.

திருகோணமலையில் இந்துக்களுடைய பழம் பெரும் தலமும், நாயன்மாரால் பாடப்பெற்ற சிறப்புக் கொண்டதுமான கோணேஸ்வரர் ஆலயப்பிரதேசத்தைப் புனித பூமியாக்குவதில் தமிழரசுக் கட்சியினரும், தமிழ் மக்களும் தீவிர அக்கறை காட்டலாயினர். தேசிய அரசாங்கத்திலே உள்ளூராட்சித்துறை அமைச்சராக இருந்த திரு. எம். திருச்செல்வத்தின் வேண்டுகோளின் பேரில் 1968 இல் கோணேசர் பிரதேசத்தை இந்துக்களின் புனித பூமியாக்க ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்காக கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படலாயின. ஆனால் திருகோணமலையினைச் சிங்களப் பிரதேசமாக்கும் நோக்கம் கொண்டு செயற்பட்டு வந்த சேருவெல விகாராதிபதி கோணேஸ்வரம் பௌத்த பழம் தலம் என அரசிடம் அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தார். இதன் பேரில் பிரதமர் டட்லி சேனநாயக்கா கோணேஸ்வரத்தைப் புனித பூமியாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட்டதோடு, அக்கோயிற் பிரதேசம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில், இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் உள்ளூராட்சித்துறை அமைச்சர் புனிதப் பிரதேசமாக்கும் எல்லைகள் பற்றிய விடயங்கள் எதனையும் தம்முடன் கலந்தாலோசிக்காது செய்ய முயன்றதன் விளைவே இது என்று ஒரு சாட்டுப்போக்கினையும் கூறினார்.[62] இவ்வகையில் இந்துக்களின் நியாயமான கோரிக்கையைக் கூட நிறைவேற்ற முடியாது தடை செய்யும் வகையில் பௌத்த சக்திகள் அரசாங்கத்தில் செல்வாக்கைப் பெற்றிருந்தன.

தனது தேர்தல் அறிக்கையிலே பிறமதங்களுக்கான மதிப்பையும், வழிபாட்டுரிமைகளையும் உறுதிப்படுத்துவதாகப் பிரகடனம் செய்த இவ்வரசாங்கம் விரைவிலேயே இதனையும் புறக்கணித்து நடக்கலாயிற்று. இத்துணை காலமும் கிறிஸ்தவ மதத்தினரின் புனித நாளாகிய ஞாயிற்றுக்கிழமையே நாட்டின் வாராந்த விடுமுறை நாளாக இருந்தது. ஆனால் சிங்கள, பௌத்த மக்களுக்காக இதனை மாற்றி அவர்கள் புனித நாளாகிய போயா (பூரணை நாட்களை) தினம் விடுமுறை நாளாக்கப்பட வேண்டுமென்ற கருத்து சிங்கள உயர் அரசியல் வட்டாரங்களில் நிலவி வந்தது. பௌத்த விசாரணைக் குழுவின் கோரிக்கைகளுள் ஒன்றாகவும் இது காணப்பட்டது. சிங்கள, பௌத்த மக்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் ஐக்கிய



தேசியக் கட்சி கிறிஸ்தவ மக்களின் மத, வழிபாட்டுரிமைகளைப் புறக்கணித்து ஞாயிற்றுக்கிழமைகளுக்குப் பதிலாகப் போயா தினங்களை நாட்டின் வாராந்த விடுமுறை நாட்களாகப் பிரகடனப்படுத்தியது.[63] இது 1965 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதன் மூலம் ஏனைய மதப்பிரிவினருக்குத் தான் அளிக்கும் கௌரவத்தைத் தேசிய அரசாங்கம் புலப்படுத்தியது. 1965 இன் பொதுத் தேர்தல் அறிக்கையிலே U. N. P., S. L. F. P. ஆகிய இரு சிங்கள, பௌத்த அரசியல் கட்சிகளும் மதம் பொறுத்து ஒரே வகையான கொள்கையினையே கடைப்பிடித்தன, இரண்டுமே பௌத்த மதத்தைப் புனரமைத்து உரிய இடம் வழங்குவது பற்றியும், போயா தினங்களை வாராந்த விடுமுறை தினங்களாக ஆக்குவது பற்றியும் குறிப்பிட்டிருந்தன.

ஏனைய மதப்பிரிவினரின் மத உரிமைகள் பொறுத்துப் பாதுகாப்பு அளிக்கப்படுமென்று இரு பிரதான சிங்கள, பௌத்த கட்சிகளும் தங்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தாலும், நடைமுறையில் அந்த உரிமைகள் கவனத்திற்கு எடுக்கப்படாதவையாகவே காணப்பட்டன. 1970 இன் பொதுத் தேர்தலுக்கான இவ்விரு கட்சிகளின் அறிக்கைகளும் பௌத்த மதம் பொறுத்து ஒத்ததன்மை கொண்டனவாகவே காணப்பட்டன. இவ்விரு தேர்தல் அறிக்கைகளும்

"to restore Buddhism its rightful place in the affairs of the country and at the same time protect the rights of those who professed other faiths"

என்பதனை வலியுறுத்தியிருந்தன.[64] இவ்வாறு குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறையில் அரசாங்கம் பௌத்த மதம் பொறுத்து மட்டும் தம் வாக்குறுதியை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டியதே ஒழிய ஏனைய மதங்களுக்கான பாதுகாப்பு எதுவும் அளிக்கப்படாததோடு, அவர்கள் மதரீதியிலும் தொடர்ந்து புறக்கணிக்கப்படலாயினர். இவ்வாறு பௌத்த மதத்திற்குக் கொடுக்கப்பட்ட தனி முதன்மையினால் தமிழரது பாரம்பரியப் பிரதேசம் எனக் கருதப்படும் இடங்களில் புனித நகர்ப் பிரகடனம், புராதன பௌத்த வழிபாட்டிடங்கள் என்ற போர்வையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கும் வழிவகுக்கப் பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மதம் பொறுத்த கொள்கையானது S. L. F. P. யின் மதம் பொறுத்த கொள்கையின் பிரதிபலிப்பாகவே

பெருமளவு அமைந்தது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில் கிராமப்புறச் சிங்கள மக்களிடையே பௌத்தமதம் பெற்றிருந்த முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை நன்கு பயன்படுத்தி 1956 இன் பொதுத் தேர்தலிலே வெற்றி பெற்றார். அதனைத் தொடர்ந்து இலங்கையின் தேர்தல் அரசியலில் மொழியைப் போலவே பௌத்த மதமும் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பௌத்த மதம் அரச மதமாக்கப்படல் வேண்டுமென்று தன் பேச்சுக்களில் குறிப்பிட்டுப் பின்னர் மறுத்த போதும்[65] டி. எஸ். சேனநாயக்கவுடனான அரசியல் போட்டியில் அவருக்குச் சாதகமற்ற வகையில் தேசிய மதம், தேசிய மொழி என்பவற்றை வலியுறுத்தித் தன் ஆதரவைப் பெருக்கிக் கொண்டார். போட்டித் தன்மை கொண்ட தேர்தல் அரசியலுக்கு ஏற்ற வகையில் மதக் கொள்கையை உருவாக்கியவராகப் பண்டாரநாயக்கா விளங்கினார். அதன் வளர்ச்சி ஏனைய மதப் பிரிவினரைப் பாதிக்கும் தன்மையுடையதாக இலங்கை அரசியலில் வலுப்பெற்றது.

1970 மே பொதுத் தேர்தலிலே மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலான பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்த ஐக்கிய முன்னணி அரசு உருவாக்கிய 1972 குடியரசு அரசியல் திட்டத்திலே பௌத்த மதம் பொறுத்து இதுவரை இல்லாத முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவ்வரசியல் திட்டத்திலே நான்கு வரிகளை மட்டும் கொண்ட தனியான அதிகாரம் II பௌத்தமதம் பொறுத்து ஒதுக்கப்பட்டது. இது சுதந்திரத்தின் பின்பான காலத்திலிருந்து பிரதான அரசியல் அம்சமாக பௌத்தம் இயங்கியதை எடுத்துக் காட்டும் சான்றாகின்றது. இவ்வரசியல் திட்டத்தின் II ஆம் அத்தியாயம் 'இலங்கைக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதலிடம் வழங்க வேண்டும் என்பதுடன் அதனைப் பேணி வளர்த்தலும், பாதுகாத்தலும் அரசின் கடமை 'எனக் கூறியது.

"the Republic of Sri Lanka shall give to Buddhism the foremost place and accordingly it should be the duty of the state to protect and poster Buddhism while assuring to all religions the rights secured by section 18*(i) (d)*"[66]

*1978* இன் இலங்கை ஜனநாயகச் சோசலிச குடியரசின் அரசியல் திட்டத்திலும் பௌத்தமதம் பொறுத்துத் தனிமுதன்மை வழங்கப் பட்டிருந்தது.



பல மதங்களைப் பின்பற்றுவோர் வாழ்கின்ற இலங்கை போன்ற நாட்டில் தனியொரு மதத்துக்கு அரசியல் திட்டம் முக்கியத்துவம் வழங்கியது தவறானது எனச் சிறுபான்மையோர் குறிப்பாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களாலும், அவர்கள் இயக்கங்களினாலும் கண்டனம் செய்யப்பட்டது. சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோர் நலன் பேணும் வகையில் சேர்க்கப்பட்டிருந்த 29 ஆம் சரத்து 2 ஆம் பிரிவுக்கு முரணான வகையில் பௌத்த மதத்திற்கான தனி முதன்மை அமைந்திருந்ததுடன், இப்புதிய அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோர் காப்பீடாக விளங்கிய இவ்விதிகள் சேர்க்கப்படாதும் விடப்பட்டன. அதற்குப்பதிலாக வேறுகாப்பீடுகள் சிறுபான்மையோர் நலன் பேணும் வகையில் சேர்க்கப்படாது, சிங்கள, பௌத்த பெரும்பான்மை இனத்தின் தனி முதன்மைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவ்வகையில் ஏனைய மத, மொழி, இன மக்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது. 29 வது சரத்திற்கு திருத்தம் கொண்டு வர வேண்டுமென்ற பௌத்த விசாரணைக் குழுவின் கோரிக்கை புதிய குடியரசு அரசியல் திட்டத்தில் அது நீக்கப்பட்டதன் மூலம் நிறைவேற்றப்பட்டது.

புதிய அரசியலமைப்புத் திட்டம் இத்தீவின் இனப்பகைமையுணர்வின் புதிய தோற்றப்பாட்டில் சிறப்பாக சிங்கள மக்களுக்கும், இலங்கைத் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவுகள் பொறுத்து ஆபத்தான காலத்தொடக்கத்தைக் குறித்து நின்றது. இதனையே கே.எம்.டீ. சில்வா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

the adoption of the new constitution in 1972 was the critical starting point of a new phase in communal a tagonism in the island, especially in regard to relations between the sinhalese and the indigenous Tamils.[67]

இதன் மூலம் மதச் சார்பற்ற அரசு என்ற நிலையிலிருந்து விலகிப் பௌத்த மதத்திற்கு தனி முதன்மை கொடுக்கும் அரசாக மாற்றம் பெற்றது. இம்மாற்றத்திற்கு U. N. P. யும் தனது முழு ஆதரவை வழங்கியது. பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட தனி முதன்மையும், அரச ஆதரவும், சிங்கள மொழி அரசாங்க மொழியாக அங்கிகாரம் செய்யப்பட்டமையும் தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருத வைத்ததுடன் அவர்கள் மீது பாரபட்சம் காட்டுவதற்கும் வழிவகுத்தது.

"The Tamils however, claimed the New Constitution gave validity and confirmation to their second class citizenship by

according the, "foremost place to Buddhism as the state religion" and by recognising Sinhalese as the state language, with a distinctly inferior and hazy position accorded to Tamil. They regarded the special status accorded to Buddhism as a clear act of discrimination[68]

